12845

சற்குணர் மலரும்

சற்குணீயமும்.

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாத அய்யரவர்கள் தலைமையில்
ஸ்ரீமான் ச. த. சற்குணர், B.A., அவர்கள்
அறுபதாவது ஆண்டுவிழா
கொண்டாடிய காலத்தில்
வழங்கியது.

தென்னிந்தியத் தமிழ்க் கல்விச் சங்கம்,
சென்னை.
25—10—1937.



ச. தருமராஜ சற்குணர், B. A. அவர்கள்



சாமுவேல் சற்குணர், B. A அவர்கள்

ஞானப்பூ அம்மாள் அவர்கள்

சற்குணர் மலர்

நண்பரைத் தமிழ்பயில அழைத்தல்

(1900-ம் *ஆண்டில் எழுதியது*)

மறையா வாய்ப்போன் றறைவல் அம்ம!
யானே, கோடிக்கூறி னேன்அல் லேன்னே!
நன்றே ஓதியும் உணர்ந்துங் கண்டிசினே!
பன்னாள் முன்னர்ப் புசையிலேன் மன்னே,
இன்னே இனியென் மன்ற மன்னே!
அறியேன் அல்லேன் ஆங்கி லம்மே!
ஆண்டுக் கண்டேன் அல்லேன் மாதோ!
அதனால், பாடுவல் அத்தைப் பாடுவல் அத்தைத்
"தமிழுங் கின்றே! தமிழுங் கின்றே!!
தென்னர்க் குழவித் தமிழுங் கின்றே!!!"
அதனால், பயிலியர் வம்மின் பயின்ற மைந்தீர்!
என்னை? நட்டோர் அம்ம யான்நட் டோரே!
நள்ளா தோர்யான் நள்ளா தோரே!

ச. த. சற்குணர்.

திரு. ச. த. சற்குணர், B.A., அவர்கள் வரலாறு ::

ஆசிரியர்.
அ. கி. பரந்தாமனூர்.

முன்னுரை:—நல்லாசிரியர் நின்று நிலவுவர் என்பர் பெரியோர். நல்லியல்பும் சொல்வன்மையும் கலைபயில் தெளிவும் கலங்கா அறிவும் வாய்ந்த நல்லாசிரியர் என்றும் நின்று நிலவுவர் என்பது உண்மையே, உறுதியே. இத்தகைய நல்லாசிரியர் மிகச் சிலரே ஆவர். திரு. ச. த. சற்குணரவர்களை இத்தகைய நல்லாசிரியர் என்று கூறுவது மிகையாகாது.

பரம்பரை:—நமது ஆசிரியரவர்களது பரம்பரை கல்விவாய்ந்த பரம்பரையாகும். நமது ஆசிரியரவர்களுடைய பாட்டனுர் கல்வி கற்கத் திருநெல்வேலியிலிருந்து கால் நடையாகச் சென்னைக்கு வந்தாராம்.

தந்தையார்:—திரு. ச. த. சற்குணரவர்களின் தந்தையாராகிய **சாமுவேல் சற்குணர் நாடார், B. A.** அவர்களும் கல்வியில் மிகவும் ஊக்கம் வாய்ந்தவர்கள். மிக ஏழைமையான நிலையிலிருந்தும் அவர் இடைவிடாத பெரு முயற்சியினுல் அக்காலத்திலிருந்த பல பரீட்சைகளுக்குச் சென்று வெற்றி மாலை சூடினுர்; B. A. பரீட்சையில் தேறினுர். சாமுவேல் சற்குணர் நாடார் அவர்களை அறிந்தவர்கள் நமது ஆசிரியரைவிட அவரை மிகவும் பாராட்டுவதையும் புகழ்வதையும் பலமுறை கேட்டதுண்டு. உண்மையில் அவர் மிகப் பெருங் கல்விமான் என்று இன்னும் பலர் வியக்கின்றனர். அவருக்கு ஆங்கி

லம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், வடமொழி, லத்தீன் கிரேக்கம் ஆகிய இந்த மொழிகளில் வியக்கும்படியான பயிற்சி உண்டாம். குணத்தில் மிக அடக்கமானவராம். உழைப்பினாலும் முயற்சியாலும் திறமையாலுமே அவர் ஜில்லா ரிஜிஸ்டிரார் பதவியை அடைந்தார்.

தாயார்:—ஆசிரியர் அவர்களின் தாயாராகிய **ஞானப்பூ அம்மாள்** அவர்கள் அன்பு, இரக்கம் முதலியவற்றில் தலை சிறந்தவர்களாம். பிள்ளைகளுக்கு வைப்பதுபோலவே பலகாரத்தில் வேலைக்காரர்களுக்கும் அவ்வம்மையார் ஒவ்வொரு பங்கு எடுத்து வைப்பது வழக்கமாம்.

பிறப்பு:—இத்தகைய தாய் தந்தையர்க்கு நமது ஆசிரியர் திரு. ச. த. சற்குணரவர்கள் 1877-ம் ஆண்டு மே மாதம் 25-ந் தேதி பிறந்தார்.

கல்விகற்றது:—நமது ஆசிரியர் ஆரம்பக் கல்வியல்லாமல் பெரும்பாலும் தமிழ்க் கல்வி அனைத்தும் தம் தந்தையாரிடத்தே கற்றார். C. S. M. உயர்தரக் கலாசாலையில் பிரவேச பரீட்சையில் தேறியபின்பு இவர் கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்கலானார். ஆங்கிலக் கல்வி கற்றுவரும்போதே இவர் தமிழ்க் கல்வியும் கற்று வந்தார். கிறிஸ்தவர் கல்லூரியில் அப்பொழுது தமிழாசிரியர்களாயிருந்த திரு. கோபாலாசாரியார், மகாதேவ முதலியார், மறைமலையடிகள் (சுவாமி வேதாசலம்) வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், B. A. யாவரும் இவரது சிறந்த தமிழறிவைக்கண்டு சிறப்பாக மதித்து

மரியாதையாக நடத்திவந்ததுண்டு என்று அவருடைய ஒருசாலை மாணவர்கள் பலமுறை சொல்லக் கேட்டதுண்டு. கலாசாலைக் கல்வியோடு தமிழ்க் கல்வியையும் இவர் விடாது கற்று வந்தார். தொல்காப்பிய உரி இயல் சூத்திரங்களை அப்பொழுதே நெட்டுருவும் போட்டுவிட்டார். தமிழில் சந்தேகம் வந்தபோதெல்லாம் இவர் தம் தந்தையாருக்கு எழுதி அச்சந்தேகத்தை நீக்கிக்கொள்வது வழக்கம், B. A. வகுப்பில் கல்லூரியில் தமிழில் முதன்மையாகத் தேறியதற்காகச் சேதுபதி பொற்பதக்கம் பெற்றார்; மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பரீட்சையிலும் முதற்பரிசு பெற்றார். 1906-ம் ஆண்டில் கிறிஸ்தவக் கல்லூரியில் பாண்டித்துரைத் தேவர் தலைமை வகித்த காலத்தில் அவர்கள் 'நான் திரு. சற்குணர் அவர்களின் விடைத்தாளைத் திருத்தினேன். அவருக்குள்ள சிறந்த இலக்கண அறிவைக் கண்டு வியந்தேன்' என்று நமது ஆசிரியரவர்களின் சிறந்த இலக்கண அறிவைப் பாராட்டினர்.

திருமணம்.—நமது ஆசிரியரவர்கள் தமது அம்மான் மூத்த மகளைத் தம் விருப்பின்படி மணந்துகொண்டார். மகன் பிறந்த பின்பு அம்மையாருக்கு உடல் நலம் குன்றியது.

உத்தியோகம்:—திரு. ச. த. சற்குணரவர்களுக்கு ஆசிரியராக வேண்டும் என்று மிகுந்த விருப்பம் உண்டு. எனவே 1905-ல் சென்னை ஹாரிஸ் உயர் கலாசாலையில் (Madras Harris High School) ஆங்கில ஆசிரியராக அமர்ந்து ஏறக்குறைய ஒன்பது

ஆண்டுகள் 'வல்ல ஆசிரியர்' எனப் புகழும்படி தொண்டாற்றினர். 1914-ல் சென்னைத் திருப்பவுற் கலாசாலையைத் திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்கள் நீங்கியபோது இவர் தமிழாசிரியராக அமர்ந்தார். இவர் வந்த பின்பு மாணவர்களுக்கு இலக்கியச் சுவையும் பாட்டெழுதும் திறமையும் ஏற்பட்டன. நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் இவர் மாணவர்களுக்கு ஊட்டினர். அக்காலத்தில் படித்த நாங்கள் இவரைத் தெய்வமாக எண்ணினேம். 1928-ம் ஆண்டில் இவர், திரு. மெஸ்டன் துரை அழைப்புக்கு இணங்கிச் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் பதவியை ஏற்றார். அங்குத் தொண்டாற்றிய ஒன்பது ஆண்டுகளிலும் தமிழில் மாணவர்கள் பெருவாரியாகத் தேறினர்கள். ஒவ்வோராண்டும் 95%க்குமேல் மாணவர்கள் தமிழில் தேறினர்கள். ஒருவருடம் B. A. வகுப்பில் 96% வந்தது.

கற்பிக்கும் முறை:—ஆசிரியர் மிக எளிதாகக் கற்பிப்பர். உதாரணங்கள் கொடுக்கும்போது பொருள் மிகவும் விளங்கிவிடும். தமிழறிவோடு பலவகை அறிவும் புகட்டப்படும். இலக்கியச்சுவை ஊட்டுவதும் உண்மை அறியச்செய்வதுமே இவர் கற்பிப்பதன் நோக்கங்கள்.

வகுப்பாட்சி முறை:—வகுப்பாளும் தனிப்பட்ட திறமை இவரிடத்தில்தான் காணலாம். இஃது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை. ஆட்சி முறையைக்கண்டு ஆங்கிலரும் அதிசயித்துள்ளார்கள்.

விருப்பமான நூல்:—இவருக்குச் சங்கச் செய்யுளிலே பெருவிருப்புண்டு. புறநானூறும் சிந்தாமணியும் கலித்தொகையும் இவர் அதிகமாக விரும்பும் நூல்கள். வசனத்தைவிடச் செய்யுளை இவர் அதிகமாகப் படிப்பார்.

விருப்பமான துறைகள்:—பாடஞ் சொல்வதும் ஆராய்ச்சி செய்வதுமே இவருக்கு மிகுந்த விருப்பமான துறைகள்.

எழுதிய நூல்கள்:—இவர் இலக்கண ஆக்கமும் ஒரு தமிழ்ப்பாட புத்தகமும் எழுதியுள்ளார்; திருத்திக் கொடுத்த நூல்கள் எண்ணில.

செய்துவரும் தொண்டு:—1925-ம் ஆண்டு ஜனவரித்திங்கள் 15-ம்நாள் தோன்றிய தென்னிந்தியத் தமிழ்க்கல்விச் சங்கத்தின் நிரந்தர தலைவராயிருந்து தமிழ்வகுப்பு நடத்திவருகிறார். இவரிடத்தில் தமிழ் பயின்றவர்களில் இப்போது சிலர் தமிழ் ஆசிரியராய் உளர். இன்னும் இவர் தம் வீட்டில் தமிழ் வகுப்பு நடத்திவருகிறார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்க்குழுவில் உறுப்பினராயிருந்து தொண்டாற்றி வருகிறார்.

நல்லியல்பு:—யாவரிடத்தும் இவருக்கு அன்பு உண்டு. பொதுவாக எவரிடத்தும் இவருக்கு மதிப்பிருப்பினும் சிறப்பாகப் பெரியோரிடத்து மிகப் பெருமதிப்புண்டு. அன்பரிடத்தில் உள்ள குறைகளை அறியவே அறியார். தம் மாணவர்களிடத்தில் தனிச்சிறப்பு காணப்படுமானால் அதைப்

போற்றுவார். கல்விகற்க ஊக்குவதில் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை. கண்ட உண்மையை அஞ்சாது கூறுவதில் இவர் நக்கீரரே ஆவர். தம் தாய் தந்தையின்மேல் இவருக்கு மிகுந்த அன்புண்டு. கிறிஸ்துவின்மேல் மிகுந்த பக்தி இவருக்குண்டு. இவர் ஆடம்பரத்தை விரும்பாதவர்.

குடும்பம்:—இவருடைய ஒரே மகன் ஜான் ஞானமார்த்தாண்டன், B. A. அவர்கள் தபால் இலாகாவில் 'கிளார்க்' உத்தியோகத்திலிருக்கிறார். இரண்டு பெண் குழந்தைகளும் ஒரு ஆண்குழந்தையும் இவருக்கு இப்போது உண்டு. ஆசிரியரவர்கள் இக்குழந்தைகளோடு விளையாடி மகிழ்ந்து வருகிறார்.

எம் ஆசிரியப் பெருந்தகையார் நீடூழி வாழ இறைவன் இன்னருள் புரிவராக.

திரு. உ. வே. சாமிநாத அய்யர் ::

(ஒய். எம். சி. எ. கூட்டத்தில் கூறியதின் சுருக்கம்.)

"நான் ஆசிரியர் சற்குணருடைய தகப்பனாரையும் அவரையும் வெகு நாளாக அறிவேன். சற்குணர் தகப்பனார் ஒரு பெரிய தமிழன்பர். நான் 45 ஆண்டுகளுக்குமுன் சீவக சிந்தாமணியை அச்சிட முயன்றுகொண்டிருந்தபோது எனக்குத் தோன்றாத் துணையாய் ஊக்கமளித்தவர்களில் அவர் ஒருவர்; வாரா வாரம் கடிதம் எழுதி எனக்கு அவ்வேலையில் உற்சாகமுண்டாக்கினர். அவர்

வேறு பாஷைகளிலும் பாண்டித்தியமுடையவர் 'எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே 'குலவித்தை கல்லாமற் பாகம்படும்' என்னும் முதுமொழிக்கேற்பச் சற்குணரவர்களும் பரம்பரைக் கல்வியுடையவர். பல பெரிய புலவர்கள் சங்க நூல்களின் பெயரையே அறிந்திருப்பர். சற்குணரோ சங்க நூல்களைப் பிழிந்து மாணவர் மனத்தில் மறையாவண்ணம் பொழியும் ஆற்றலுடையவர். அஃது ஒன்றே அவர் சிறந்த படிப்பாளி என்பதைக்காட்டும்.

அரும்பொருள் பொதிந்த அழகான பேச்சு.

பத்து வருடங்களுக்குமுன்பு பச்சையப்பன் கல்லூரியில் எனது தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் சற்குணரவர்கள் புறநானூற்றைப்பற்றிப் பேசினார்கள். நான் என்னென்ன விஷயங்களைப் பேச எண்ணிக் குறிப்புகள் எழுதிக்கொண்டு போயிருந்தேனோ அக்குறிப்புக்களையும் கடந்த அரியபல விஷயங்களையும் அவர்கள் வெகு அழகாகவும் விரிவாகவும் பேசினார்கள்.

தாயைக் கண்ட சேய்

ஆசிரியர் சற்குணரிடம் காணப்படும் மிகச் சிறந்த குணம் ஒன்றுளது; அஃது அவர் தம்மைப்பற்றிப் பிறரிடம் பெருமையாகப் பேசாமை. அவரிடம் படித்த பிள்ளைகள் அநேகரை நான் பார்ப்பதுண்டு. ஆசிரியரைப் போலவே பிள்ளைகளும் இருக்கிறார்கள்; சரீர சம்பந்தமுள்ள பிள்ளைகளைவிட ஞான சம்பந்தமுடைய புத்திரர்கள் மேலானவர்கள்; ஆசிரியர் ஞானபிதா; ஆனபடியால் மாணவர்களைப் பிள்ளைகள் என்றேன். தாய்ப் பசுவைக் கண்ட கன்றுகள்போலச் சற்குணரிடம் மாணவர் ஓடுகின்றனர். இப்பேறு புண்ணியத்தால் கிடைப்பது. இவர் ஒரு புண்ணிய சீலர்.

தமிழ்ப் போதனை

இவர் தற்சமயம் கிறிஸ்தவக் கல்லூரியில் அதிகமாக உழைப்பதுமன்றித் தமக்கு ஒழிந்த நேரத்திலெல்லாம் அநேக அறிஞர்களுக்கும் வித்வான் பரீட்சைக்குப் போகும் மாணவர்களுக்கும் பழந்தமிழ் நூல்களை ஆவலோடு கற்பிக்கின்றார்.

'குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியலறி வோடுயர் குணமினையவும்
அமைபவன் நூலுரை யாசிரியன்னே.'

என்னும் இலக்கணம் சற்குணருக்குச் சரியாகப் பொருந்தும். இவர் பரம்பரையாகப்படித்த பெருங்குடியில் தோன்றியவர்; நல்லொழுக்கமும் சத்தியமுமுடையவர்; கலைபயில் தெளிவுடையவர்; எந்த விஷயத்தையும் ஸ்பஷ்டமாகச் சொல்லும் இயல்புடையவர். ஆசிரியர் சற்குணர் நிலத்தைப்போலப் பொறையும், மலையைப்போலக் கல்வி வளப்பமும் துலாக்கோல்போன்ற நடுவு நிலைமையும் உடையவர்.

நற்குணம் வாய்ந்த சற்குணர்

'கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின்.'

என்ற நீதிநெறிக்கேற்பச் சற்குணரவர்கள் அதிகம் படித்திருந்தும் வித்வான்களைக் கண்டால் அன்பும் பணிவும் உடையவர்; இக்குணம் என் ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் இருந்தது. இந் நற்குண முடைய

வருக்குச் சற்குணர் என்றபெயர் இயற்கையாகவே அமைந்துள்ளது. நற்குணமுடையவர் சற்குணர். இத்தகைய சான்றோருடைய சிநேகம் பிரிவின்கண் துன்பமுண்டாக்கும் என்று பிரபுலிங்கலீலையில் கூறப்பட்டிருக்கின்றது.

"காணுதலொழிக நல்லார்க் காணின் அங்கு அவர்பால் நட்புப்
பேணுதலொழிக பேணிற் பிரிவுற லொழிக வுற்றால்
மாணுயிருடம்பில் வாழும் வாழ்க்கைபோ யொழிக வென்று
ஊனிடு மொருதாய் நீத்த பார்ப்பென வுளங்குலைந்தார்."

என்பதற்கேற்பச் சான்றோர் கேண்மை பிரிவின்கண் சாலப்பீழை தருவது. ஆயினும் 'பெரிதினிது பேதையர் கேண்மை, பிரிவின்கண்சாலப் பீழை தருவதொன்றில்' என்றார்.

சற்குணரைப் போன்ற கல்விமான்கள் அவசியம் வித்வான் பரீட்சைக்குப் பரிசோதகர்களா யிருக்கவேண்டும்; இவர் ஒரியண்டல் வித்வான் போர்டில் இல்லாதிருப்பதை நான் நினைத்து விசனிப்பதுண்டு. இவர் தந்நலங் கருதாதவர்; பிறர் நலம்பெறத் தாம் மகிழ்வர். சற்குணர் வித்வான் போர்டிலில்லாதது ஒரு பெரிய குறையாகும். இவர் பெயரை நான் அடிக்கடி பிரரேபித்ததுண்டு.

இப்புண்ணியர் தீர்க்காயுள் பெற்று நெடுநாள் சுகித்திருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்"

"நவ சக்தி"—18-9-36.

சற்குண மலர் ::

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்.

தென்னாட்டுச் சுனையுள் முகிழ்த்துள்ள தமிழ் மலர் சிலவே. அவைகளுள் ஒன்று சற்குண மலர்.

சற்குண மலர் - கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், வாழ்க்கை, மகன்மை, வாய்மை, நேர்மை, அடக்கம், உரிமை, ஒப்புரவு, அஞ்சாமை முதலிய இதழ்களால் அமைந்தது. அம்மலரிடைப் பழந் தமிழ் வீர மணம் என்றுங் கமழ்ந்தவண்ணமாயிருக்கும்.

இந்நாளில் பழந்தமிழ் வீரமணம் சற்குண மலர் ஒன்றனிடத்தில் சிறந்து கமழ்தலைக் காணும் பேறு பெற்றவருள் யானும் ஒருவன். அந் நறுமலர் நீடு வாழ்க. அதன் மணம் வெல்க.

தருமராஜ சற்குணர் வாழ்க ::

பல நூல்களின் ஆசிரியர்

Y. G. BONNELL, P. B.

நிகழும் 1937-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ஆம் தேதி சகோதரர் ஸ்ரீமான் ச. த. சற்குணர், B.A., அவர்களின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா நடைபெறும் எனவும், அன்று "நினைவு மலர்" ஒன்று வெளியிடப்படும் எனவும் தென்னிந்தியத் தமிழ்க் கல்விச் சங்கத்தார் அச்சிட்டுத் தெரிவித்த சங்கதியை வாசித்து ஆநந்திக்கின்றேன். மேலும் அம்மலரில் அச்சிடுதற்காக அவர்களைப்பற்றிய எனது சிறிய கருத்துக்களைச் சுருக்கமாகத் தெரிவிக்கக் கேட்டுக்

கொள்ளப்பட்ட பாக்கியம் பெற்றதற்காக நான் என்னையே வாழ்த்திக்கொள்வதன்றி மேற்படி சங்கத்தாருக்கும் எழுதி என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

ஸ்ரீமான் **தருமராஜா சற்குணர்** எனக்குப் பிதாவடைவாயிருந்த காலஞ்சென்ற ஸ்ரீமான் **சாமுவேல் சற்குணரின்** மூத்த மகனவர். இவர்கள் தகப்பனரின் அலங்காரங்கள் பலவற்றை இயற்கையில் பெற்றுள்ளவர்கள். இவர்கள் தமிழில் பேசுகையில் தகப்பனரைப் போலவே இங்கிலீஷ் பாஷையை முற்றிலும் மறந்தவர்கள்போல் காணப்படுவார்கள். தமிழ் இலக்கியத்திலும், இலக்கணத்திலும் இவர்களுக்கிருக்கும் பாண்டித்தியத்தைக் கவனிக்குங்கால், "**புலிக்குப் பிறந்து நகமில்லாமற் போகுமா?**" என்ற பழமொழி ஞாபகத்துக்கு வருகிறது. பிறரை உபசரிக்கிற விஷயத்தில் இவர்கள் தங்கள் காலஞ்சென்ற இரண்டாஞ் சகோதரியாகிய ஸ்ரீமதி **சின்னம்மாள் ஆபேல்** என்போர்க்கு ஒப்பாவார்கள். இவர்களெல்லாருக்கும் மூத்த அக்காளாகிய ஸ்ரீமதி **தேவநேசம்மாள் ஆபிரகாம்** எவ்வியாதிக்கும் மருந்து அருந்தா தேவதா பக்தி படைத்தோர். இவர்களுடைய ஏக புத்திரனை ஸ்ரீமான் **ஜான் ஞானமார்த்தாண்டன்** "வாழையடி வாழை" என்றாற்போல் எனக்குக் காட்டும் பட்சத்தில் தம் தகப்பனரையுங் கடந்து செல்பவர். இவர்களுடைய மைத்துனராம் **டாக்டர் S. சைமன்** "அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாள்" என்றதற்கு நிதருசனமானவர்கள்.

சொல்லப்போனல் இவர்கள் குடும்பமே அன்பின் கட்டுக்குள் அகப்பட்டுக்கொண்டது எனலாம்.

ஸ்ரீமான் **தருமராஜா** சற்குணரவர்களுக்கு நான் 18 வருஷங்களுக்குமேல் மூத்தவன். **கடவுள் தாமே** அவர்களுக்குத் தீர்க்காயுள் புரிவதால் சங்கீதக் காரன் குறிக்கும் மட்டுக்குட்படாது தங்கள் குடும்பங்களுக்கும் மற்றக் குடும்பங்களுக்கும் தென்னிந்தியத் தமிழ்க் கல்விச் சங்கத்தாருக்கும் ஆசீர்வாதமாயிருக்க அவர்களை ஆசீர்வதித்தருள்வாராக.

கடவுள் துணை செய்க ::

பாஷா கவிசேகர வித்வான்
ரா. ராகவையங்கார்.

ஸ்ரீமான் ச. த. சற்குணர் தம் அழகிய பெயர்க்கேற்ற உயர்ந்த நற்குணம் நிறைந்தவர். தெய்வ பக்தியால் தலைசிறந்த கிறிஸ்தவர். பிற சமயத்திலுள்ள நல்லவரை அன்புடன் தழுவிக்கொள்பவர். வாக்கும், மனமும் ஒருபடியாயுள்ளவர். அவர் அவையகத்துச் சொல்லியன நீதிக்கும் வாய்மைக்கும் இயைந்தனவேயாகும். நற்றமிழிலுள்ள அருமை பெருமைகளை ஆராய்ந்தறிந்து இன்புறுபவர். தாம் தமிழிற்கண்ட நல்லவற்றை மாணக்கர்க்கும் பிறர்க்கும் எடுத்துரைப்பதைப் பொழுது போக்காகக்கொண்டவர். இவ்வியல்புகளால் இவர் உத்தம புருஷர் என்பது என் துணிபாகும். இவரைப்பற்றிப் பாராட்டுதற்கு அமயம் வாய்த்தது எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தருவது. இவர் நீடு வாழ்வாராகுக.

ஆசிரியர் சற்குணர் ::

சென்னைப் பல்கலைக்கழகத்
தமிழாராய்ச்சித் துறைத்தலைவர்
S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L.

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரித் தமிழாசிரியர் சற்குணரவர்களோடு ஒரு சில ஆண்டுகளாக யான் நெருங்கிப் பழகும்படியாக நேர்ந்தமைக்குப் பெரிதும் மகிழ்கின்றேன். முதன் முதலாக யான் அவர்களை விரும்பிக் கொண்டாடும்படி நேர்ந்த சந்தர்ப்பம் அவர்களுடைய குணவிசேஷங்களை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. ஒருமுறை சற்குணரவர்களும் யானும் வேறு சில நண்பர்களும் பாட புஸ்தகங்களைக் குறித்துப் பரியாலோசனை செய்துகொண்டிருந்தோம். அங்கே கூடியிருந்த ஒருவரது புஸ்தகத்தைப் பாடமாக நியமனஞ் செய்யவேண்டுமென்ற பிரேரணை எழுந்தது. அப்போது சற்குணரவர்கள், 'அப்புஸ்தகம் முன்பும் பாடமாக இருந்ததுண்டு; அதனை மாணவர்களெல்லாரும் வெறுக்கிறார்கள்' என்று கூறினார்கள். நூலியற்றிய ஆசிரியரது முன்னிலையிலே, வெளிப்படையாகச் சிறிதும் தாட்சணியமின்றித் தமது கடமையை நன்குணர்ந்து கூறிய இச்சொற்களில் யான் மிகவும் ஈடுபட்டுவிட்டேன். அன்றுமுதல் எனது உற்ற நண்பர்களுள் ஒருவராக அவர்களைக் கருதலானேன்.

மேற்குறித்த சந்தர்ப்பம் பிறிதோர் அபூர்வ குணத்தையும் வெளிப்படுத்துகின்றது. மாணவர்களது நன்மையே எப்பொழுதும் அவர்கள் நாடி வந்தவர்கள்; அதன்பொருட்டுத் தமது வாணுள் முழுமையும் செலவு செய்பவர்கள். உபகார நிவேதனம் பெற்று அமைதிபெற்றிருக்கவேண்டிய இக்காலத்தும் பல மாணவர்களைத் தம் வீட்டிற்கு வரவழைத்துப் பாடம் சொல்லி வைக்கின்றார்களென்றால், அவர்கள் மாணவ உலகிற்கு எத்தனை பயன் படுபவர்களென்பதைச் சொல்ல வேண்டுமோ?

அவர்களுடைய குணங்களுள் வேறொரு முக்கியமான குணத்தையும் இங்கே கூறவேண்டுவது இன்றியமையாததாகும். அவர்கள் உண்மையான தமிழன்பர். தமிழ் மொழி எவ்வகையானும் முன்னேற்றமடையவேண்டும் என்ற பெருநோக்குடையவர். போலியபிமானமீதூரத் தமிழுக்குக் கேடு சூழ்ந்துவரும் ஒரு சில போலித் தமிழன்பர் கூட்டத்தை அவர்கள் எப்பொழுதும் நாடுபவரல்லர்.

நடுநிலைதிரியா நட்பாளரும் சிறந்த் தமிழாசிரியரும் உண்மைத் தமிழன்பருமாகிய சற்குணரவர்கள் நீடுவாழ்ந்து தமிழன்னைக்குத் தொண்டுபுரியுமாறு எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

பண்டித ச. த. சற்குணர் ::

பிரபல உரையாசிரியர்
வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார்.

தென்னிந்தியத் தமிழ்க் கல்விச் சங்கத்தார் திருவாளர் பண்டித ச. த. சற்குணர் பி.ஏ., அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடப்போவதாகத் துண்டுப் பிரசுரத்தால் அறிந்து மிக மகிழ்கின்றேன். இவர்களோடு எனக்கு நெருங்கிய பழக்கமில்லை யென்றாலும் இரண்டொருமுறை இவர்கள் சொற்பொழிவைக் கேட்கவும், இரண்டொருமுறை இவர்களை வீட்டிற் பார்க்கவும் வாய்த்ததுண்டு. இவர்கள் மாம்பழ வுண்ணிபோலப் பேரினல் மாத்திரம் சற்குணராகாமல், உள்ளும் புறமும் ஒத்த தூய்மையுடையவராய்த் தம்முடைய நாமதேயத்துக்குத் தக்கவாறு ஒழுக்கம் வாய்ந்தவரென்று அறிந்துள்ளேன். இவர்கள் ஆங்கிலப் புலமைபெற்றிருந்தும், தம்மைப் பிறர் தமிழ்ப் புலவரெனச் சொல்வதிலேயே விருப்புள்ளவர்கள். தமிழகத்தவராய்ப் பிறந்தும் சிறிது ஆங்கிலப் பயிற்சி பெற்ற மாத்திரத்தில் தம் தாய் மொழியில் இன்ன உள்ளன என்று அறியாமலே தமிழ் மொழியைப் புறக்கணிக்கும் மாந்தர் நிரம்பிய இக்காலத்தில், ஆங்கிலப் புலமைபெற்றிருந்தும் தமிழ்ச் சுவையையறிந்து தாம் இன்புறுவதோடு பலர்க்கும் தமிழ் மொழியைக் கற்பித்துத் தமிழ்த்தொண்டே புரிந்து வரும் இந்தச் சற்குணர் இறைவனருளால் பிணியற்ற வாழ்வும் நீடிய ஆயுளும் பெற்றுத் தமிழ் மொழியை வளர்ப்பார்களாக.

ஆங்கிலத் தமிழ்ப்புலவர் அல்லர் ::

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை
சோமசுந்தர தேசிகர்.

தமிழ் நாட்டிலே தமிழ் மொழியைப் புறக் கணித்தும் தாழ்மையாகப் பேசியும் வருவோர் பல்லோராவர். அவர்கள் மொழியின் தன்மையை யறிந்தோ அறியாமலோ இழிவுபடுத்துகின்றனர். அவர்களுள் ஆங்கிலம் படித்த வகுப்பினரே பெரும் பாலோராவர். தமிழராக இருந்து ஆங்கிலப் பட்ட மும் பெற்றிருப்பதோடு தமிழ்த் தாயின் பெரு மையை எடுத்து உலகிற்குக் காட்டுஞ் சிறப்பினை யுடையோர் ஒருசிலரே யாவர். அவர்களுள் தற் காலத்தில் முன்னணியில் நிற்பவர் நமது நண்பர் திருமிகு ச. த. சற்குணரே யாவர். அவர் சிலரைப் போன்று ஆங்கிலத் தமிழ்ப்புலவரல்லர்!

நண்பர் சற்குணர் ஆங்கிலப் பட்டம் பெற் றிருப்பினும் தமிழன்னையிடத்து மிக்க மதிப்பும் பற்று முடையவர். பல்லாண்டுகளாகத் தமிழைப் படிப்பதிலும் பிறருக்குப் போதிப்பதிலும் தம் காலத்தைச் செலுத்துபவர். தாம் கண்ட உண் மையை ஒளிமறைவின்றிப் பேசுபவர். மக்க ளிடத்து அன்புடையவர். சங்க இலக்கியங்களிலே மிக்க ஆர்வமும் நுண்ணிய ஆராய்ச்சியு முடையவர். தமிழர்களது இயற்கைக்குணமான உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாதவர்.

தம் மனத்திற் பட்டதையோ பிறருக்குத் துன்ப முண்டாகிறதென்று கண்டதையோ அஞ்

சாது வெளியிடுபவர். ஒருமுறை பாடக் குழுவின் கூட்டம் நடைபெற்றபோது ஒரு புத்தகம் பாடமாக வைக்கவேண்டுமெனச் சிலர் கருதினராம். அப் புத்தகம் எளிய நடையில் அமைந்தது ஒன்றன்று. அதனாலே பள்ளிப் பிள்ளைகள் அப் புத்தகத்தி னிடத்து வெறுப்புக் கொண்டிருந்தனர். இச் செய்தி நமது நண்பரும் மற்றைய அங்கத்தினரும் நன்கறிந்ததே. ஆயினும் அப் புத்தகாசிரியருக்கு நன்மை செய்யக் கருதி அப் புத்தகத்தைப் பாட மாக வைக்கப் பிறர் முயன்றனர். நமது நண்பரோ பிள்ளைகளுக்கு அப் புத்தகத்தாலுண்டாகும் வெறுப்பினை எடுத்துக்காட்டியதோடு அதனைப் பாடமாக வைக்காதபடி செய்தனரென்று சொல் லக் கேட்டதுண்டு. இவ்வாறு உண்மைத் தமிழ்த் தொண்டர்களே தமிழ் நாடு தற்போது விரும்புவது. ஆசிரியர் சற்குணர் நீடூழி வாழ்வாராக.

தமிழில் மிகவும் ஆசையுள்ளவர் ::

பே. நா. அப்புஸ்வாமி அய்யர்,
B. A., B. L.

பண்டிதர் சற்குணர் அவர்களைப் பல இடங் களில் சந்தித்திருக்கிறேன்; பலமுறை சந்தித்திருக் கிறேன். ஆனால், அவர்களோடு சிநேக முறையில் நெருங்கிப் பழகியதில்லை.

அவர் அமைதியுடையவர். ஒருமுறை, அவரு டைய நண்பர் ஒருவரும் அவருமாக, ஒரு விஷயத் தைக் குறித்து என்னிடம் வந்தார்கள். அவர்கள்

நினைத்தது என்னால் செய்யமுடியாமற் போயிற்று. சற்குணர் சிறிதும் முகங் கோணவில்லை. செய்ய முடியாமைக்கு நான் வருந்திய அளவுகூட அவர் வருந்தவில்லை.

அவர் தமிழில் மிகவும் ஆசையுள்ளவர். பழந் தமிழ் நூல்களில் மிகவும் பற்றுள்ளவர். எத்தனையோ பழந் தமிழ் நூல்கள்—நல்ல நூல்கள்—அழிந்து போயினவே என்று வருந்துகிறவர்களுள் ஒருவர். இவற்றைத் தமிழ் உலகம் அறியும். ஒருமுறை நண்பர் தி. கோ. ஆராவமுத அய்யங்கார் முயற்சியால், சில தமிழ் அன்பர்கள், பழந்தமிழ் நூல்களை வெளியிடும் சங்கம் ஒன்றைக் கூட்டலாமா என்னும் விஷயத்தை ஆராய்வதற்காக என் வீட்டில் கூட நேர்ந்தது. அப்போது வந்திருந்தவர்களில் சற்குணர் ஒருவர். அவர் பேசும்போதெல்லாம் தமிழில் அவர் கொண்டுள்ள ஊக்கமும், அந்த ஊக்கத்தைக் கடிவாளம் போட்டிழுத்து நேர்வழியில் செலுத்தும் அவருடைய அமைதியும் நன்றாகத் தெரியவந்தன.

அவர் எழுதிய சிலவற்றைப் படித்திருக்கிறேன். அவற்றைத் தமிழர் நன்கறிவர். ஆதலால் விரிவாய் ஒன்றும் சொல்லவேண்டிய அவசியமில்லை.

அவர் பேசக்கேட்டிருக்கிறேன். சிலர் பேசும்போது வீராவேசம் கொண்டு, கைகால்களை வீசி, விரிவாகவும் பதட்டமாகவும் பேசுவார்கள். விஷயத்தை மறந்துவிடுவார்கள், விஷயம் அல்லாத

வற்றை விரிப்பார்கள். மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் ஆக்க முயலுவார்கள். இவர்களுடையபேச்சு, பாமரர்களை மயக்குவதுண்டு. பண்டிதர்கள் இதனால் ஏமாறமாட்டார்கள். ஆனால் சற்குணர் பேசும்போது, தாம் ஆராய்ந்த விஷயத்தை அறிவாளி ஒருவர் அடக்கத்துடனும் சாக்கிரதையுடனும் அறிவாளிகளின் முன்னிலையில் அவர்களும் அதைச் சர்ச்சை செய்யும் பொருட்டுத் தெரிவிக்கிறார் என்ற உணர்ச்சியே ஏற்படும். சற்குணருடைய பிரசங்கத்தில் பேச்சு வெள்ளம் நம்மை அடித்துக்கொண்டு போய்விடாது. அகன்று விரிந்து மெதுவாய்ச் செல்லும் நதியின் போக்கைப் போல் இருக்கும் அவருடைய பிரசங்கம். கரையிலிருந்து சாவகாசமாக அனுபவிக்கலாம். ஆழமும் உண்டு. ஆனால் ஒதுங்கிக் கரையில் நிற்போருக்கு அதனால் கஷ்டமில்லை அல்லவா? நீந்தத் தெரிந்தால் இறங்கலாம், இறங்கி அனுபவிக்கலாம்.

தமிழன்னையின் அருந்தவ மைந்தர் ::

சென்னைப் பச்சையப்பன் உயர் கலாசாலை
மாஜி தலைமைத் தமிழாசிரியர்
கா. ரா. கோவிந்தராஜ முதலியார்.

திருவாளர். ச. த. சற்குணர் B. A. அவர்கள் தமிழ் அன்னையின் அருந்தவ மைந்தர்களுள் ஒருவர். இவர் சற்றேறக்குறைய இருபத்தைந்தாண்டுகளாகத் தமிழன்னையின்பால் பேரன்பு கொண்டு உலவா ஊக்கத்துடன் தொண்டாற்றி வருகின்

றனர். சென்னைப் புரசைப்பதிக்கண் இவர் தென்னிந்தியத் தமிழ்க் கல்விச்சங்கம் என்னும் பெயரால் ஒரு தமிழ்க் கழகத்தை நிறுவிக் கைம்மாறொன்றுங் கருதாமல் அன்பும் அருளும் நிரம்பிய மனத்துடன் பல மாணவர்களுக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்து வருகின்றனர். இவர்தம் மாணவர்களிற் பலர் சிறந்த புலமையைப் பெற்றிருப்பதோடு பல உயர்தரப் பாடசாலைகளில் தமிழாசிரியர்களாகவும் விளங்குகின்றார்கள். இவர் சென்னைப் புரசைத் திருப்பவுல் உயர்தரப் பாடசாலையிற் பல ஆண்டுகள் தமிழாசிரியராய் இருந்து மாணவர்கள் யாவருந் தமிழ் நூற்களை விரும்பிக் கற்கும்படி செய்தனர். சென்னைக் கிறித்தவக் கலாசாலையிற் சில ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராய் விளங்கி மாணவர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்பதில் ஆர்வம் உண்டாகும்படி செய்தனர். சென்னைப் பிரவேசப் பரீட்சைப் புத்தகச் சங்கத்தில் இவர் தலைவராய் இருந்து அரிய தொண்டுகள் பல ஆற்றினர்; இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தின் உறுப்பினராய் இருந்து பல தொண்டுகள் புரிந்து வருகின்றனர். தம் பெயருக்கேற்ப இவர் சற்குணக்குன்றாய் விளங்குகின்றனர். 'தமக்கென முயலா நோன்றாட், பிறர்க்கென முயலுநர்' தம்முள் இவர் ஒருவராவர். இவ்வருங்குணச் செல்வரின் அறுபதாம் ஆண்டு விழாவை இவர்தம் மாணவர்களும், நண்பர்களும் நடத்த உறுதிகொண்டதை அறியுந் தமிழ்மக்கள் அனைவரும் பேருவகை கொள்

வர் என்பதில் ஐயுறவின்று. இவ்விழாவை நான் அன்புடன் வரவேற்கின்றேன். இந்நற்குணச் செல்வர் பல்லாண்டு பல்லாண்டாக இவ்வுலகில் விளங்கி இருந்து பல அரிய தமிழ்த் தொண்டுகளை ஆற்றும்படி அருள்புரிதல் வேண்டும், என உயர் வற வுயர்நல முடையவன்' ஆகிய இறைவனை அன்புடன் வணங்கி வேண்டுகின்றனன்.

கற்றுணர்ந்து அடங்கியிருப்பவர் ::

பிரபல நூலாசிரியர்
S. S. அருணகிரிநாதர்.

தமிழ்ப் பேராசிரியர் உயர்திருவாளர் ச. த. சற்குணர் B. A., அவர்களைச் சென்ற சிலவாண்டு களாக யானறிவேன். அவர்கள் கல்வியிற்சிறந்த வர்கள் என்பதை எல்லோரும் அறிவர். ஆகவே அவர்கள் கல்வியைப்பற்றி யானேதுங் கூற முற் படவில்லை வேண்டுமானல் அவர்கள் மாணக்கர், கல்வியைப்பற்றிக் கூறட்டும். யான் அவர்கள் குணத்தைப்பற்றி மட்டுமே கூற விரும்புகின்றேன். அவர்கள் கற்றுணர்ந்தடங்கி இருப்பவர்களில் தலை சிறந்தவர்கள்; சொன்ன சொல் தவருதவர்கள்; எக்காலத்தும் எவ்விஷயத்திலும் நேர்மையாக நடக் கக்கூடியவர்கள்; உண்மை என்று தோன்றிய வற்றை அஞ்சாது உரைப்பவர்கள். இன்னும் பல நற்குணங்களை யான் அவர்கள்பால் காண்கின் றேன். மற்றவர்களெழுதுஞ் செய்திக்கும் இடம் வேண்டுமே என்றெண்ணி என் செய்தியை இவ் வளவோடு நிறுத்துகின்றேன்.

இடுகுறியைக் காரணக்
குறியாக்கிய கண்ணியர் ::

வித்வான்
மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை.

செந்தமிழ் அன்னையைச் சிறக்கச் செய்தலையே தம் வாழ்க்கைப் பயனாகக் கருதிப் பல்லாற்றானும் பணியாற்றும் பண்புடையறிஞராம்உயர்திருவாளர் ச. த. சற்குணர் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை நிறைவிழாவாகக் கொண்டாட முன்வந்த அறிஞர்கள் நன்றியறிவை யான் பெரிதும் பாராட்டுகின்றேன். தமிழன்னையின் அலகிலா ஆசி அவர்தமக்கு உரியதாகுக!

அறிஞர் சற்குணர் தம் அரும்பெருங் குணத்தால் பெற்றோர் தமக்கீந்த இடுகுறியைக் காரணக் குறியாக்கிய கண்ணியர்;

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவர்"

என்னுங் கம்பர் வாய்மொழிக்குக் கருதலாமெடுத்துக் காட்டாயிலங்குபவர்; கொள்வோன் கொள்வகை அறிந்து கோட்டமில் மனத்திற் கொடுக்குங் கொடையாளர்; உழைப்பின் உறைவிடம்; பொறையின் பொற்பகம்; நுண்மான் நுழைபுலச்செல்வர்; கைம்மாறுகவாக் கலைஞர்; செந்நெறி பிறழாச் சீலர்; நட்பின் வைப்பு.

இத்தகு மாண்புகள் எழிலுறவமைந்த எம் சற்குணப் பெரியார் வையக்கணியாய் வளமுற வோங்கி நாள்பல வாழ்ந்து நற்பயன் தருமாறு திருவருள் சுரக்க எல்லாம் வல்ல இறைவனை என் மன மொழி மெய்களால் எண்ணி ஏத்தி இறைஞ்சுகின்றேன்.

A Gentleman ::

V. R. R. DIKSHITAR, M. A,
Lecturer in Indian History,
University of Madras.

I had opportunities of knowing Mr. S. D. Sargunar at close quarters for the past several years, and it gives me much pleasure in joining the chorus of felicitations in connection with his sixtieth birthday-celebrations. I have worked with him as a member of the Madras School Book and Literature Society, and he has always exhibited his impartiality and earnestness to help deserving authors.

His is a well earned retirement. As a conscientious and good teacher, Mr. Sargunar has won the love and esteem of his colleagues, friends and pupils. He loves Tamil in all aspects of its culture and has endeavoured his best to spread Tamil language and Tamil culture. He is a sound scholar and a discriminating critic; and he has built up an enduring reputation for intensive scholarship. Quite unassuming and simple in habits, Mr. Sargunar is a gentleman. I wish and pray for his long and healthy life so that he may carry on the useful work to which he has dedicated his entire life.

Worthy son of a Worthy father ::

S. G. DANIEL, B.A., L.T.,
Madras Educational Service.

I am glad you are arranging to celebrate the 60th birth day of Mr. S. D. Sargunar, B. A. in a

fitting manner and I wish you every sncess in your laudable attempt. But I must frankly admit that I am not competent to write an article about Mr. Sargunar's attainments and achievements. All that I Know of him is that he is an eminent Tamil Scholar and the worthy son of a worthy father, the late Mr. Samuel Sargunar, who was a sound Scholar in English, Sanskrit, Tamil and other Dravidian languages, a true patriot, a perfect gentleman and an exemplary Christian.

Stalwart son of South Indian Literature ::

S. V. PURUSHOTHAM, B.A., L.T.,
SANSKRIT PANDIT,
Madras Christian College School.

In Sargunar one can see the stalwart son of South Indian Literature, a champion and exponent of the outstanding Dravidian Language Tamil. Neither for the favour of a smile nor the fear of a frown did he do service to Tamil but only for his pure love of the Mother Goddess of Learning. Beloved son of the Goddess Mother, revered Guru of thousands of Tamil students, respected scholar of his compeers, much admired and original critic of the literatures he stands an out-standing son of Tamil Nad. To few are given to occupy the place he does and fewer still have earned right to positions by sheer merit. May his growing years make his glorious service ever grow.

தமிழ் மொழிக்கே உழைத்து வருபவர் ::

ஆ. வீ. கன்னைய நாயுடு,
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்,
பச்சையப்பன் பாடசாலை, சென்னை.

திருவாளர் S. D. சற்குணர் B. A., அவர்களை நந்தம் தமிழ் நாட்டில் அறியாதார் இரார். இவர் தம் பெயருக் கேற்பச் சீரிய குணமும் நேரிய ஒழுக்கமும் கூரிய அறிவும் வாய்ந்தவர். இவர் ஆங்காங்குத் தனி வகுப்புக்கள் நடத்தித் தமிழ் மொழியைப் பெரிதும் வளர்த்து வருபவர். இவர் ஆங்கிலத்தில் B. A., பட்டம் பெற்றவரா யிருந்தும், தமிழ் மொழிக்கே பெரிதும் உழைத்து வருவது மிகுதியும் பாராட்டத் தக்கதன்றோ! இவர்பால் கல்விபயின்ற மாணவர் பலர் அரசாங்கப் பரீட்சை யிலும் மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சையிலும் தேர்ச்சியுற்றுக் கலாசாலைகளில் உத்தியோக மேற்றுத் தமிழ் மொழியை நன்கு போதித்து வருகின்றனர். இவர்தம் அரும்பெருங் குணங்களை இவர் மாணவர்களில் ஒருவராகிய திரு. R. நடேச நாயகர் அவர்கள் பன்முறை பாராட்டிக் கூறக் கேட்டு நான் மகிழ்ச்சியடைந்ததுண்டு. இத்தகைய பெரியார் ஒருவர்க்கு அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடத் தமிழ் மக்கள் முன் வந்தமை போற்றத்தக்கதேயாம். இனியும் இவர் தமிழ் மொழிக்கு உழைக்குமாறு நீண்ட வாழ்நாளும் உடல் நலமுந் தந்தருளுமாறு எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

தமிழ்த் தக்கோர் ::

சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழ்த்துறைத் தமிழ் விரிவுரையாளர்
வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியராய் விளங்கிய திரு ச. த. சற்குணர், B.A. அவர்களை யான் சில ஆண்டுகளாக அறிவேன். இவர்கள் ஆங்கிலத்திற் பட்டம் பெற்றதே யன்றித் தமிழ் மொழியையும் ஆர்வத்தோடு கற்றுப் புலமை படைத்தவர்கள்; தெலுங்கு, வடமொழி முதலிய மொழிகளையும் அறிந்தவர்கள்; ஆடம்பரமின்றித் தமிழ்த் தொண்டு செய்யும் அருங்குணம் அமைந்தவர்கள்; நெடுங்காலமாக மாணவர் பலருக்குத் தமிழ் போதித்து வருபவர்கள்.

பேராசிரியர் சற்குணரவர்கள் உள்ளதை உள்ளவாறே சொல்லும் நல்லியல்பு வாய்ந்தவர்கள்; நல்லவற்றைப் போதித்தலிலும் உபந்யஸித்தலிலும் அஞ்சாமை யுடையவர்கள். இவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்மொழிக்குத் தொண்டாற்றிச் சிறப்புடன் விளங்குமாறு இறைவன் அருள்புரிவானாக.

நான் கண்ட நற்றமிழ்வாணர் ::

வித்வான்

மா. இராசமாணிக்கம், P. O. L.

தமிழ்ப் பேராசிரியர் திரு. S. D. சற்குணர், B. A. அவர்கள் ஆங்கிலம், தமிழ் இரண்டினும் பழுதறப் படித்த பெரியார் என்பது கிறித்தவக் கல்லூரி மாணவரும், சென்னைத் தமிழ்ப் புலவர் பலரும் அறிந்ததொன்று. அவர் எமது வண்ணைத் தமிழ்ச் சங்கத்துப் போந்து ஆற்றிய 'மணிமேகலை' என்னும் மாண்புறு நூல் பற்றிய ஆராய்ச்சி எம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. உள்ளதை உள்ளவாறு உரைக்கும் உத்தமப் பண்டிதர் மிகச் சிலருள் இவர் ஒருவர் எனக் கூற யாம் மகிழ்கின்றேம். இப்பெரியார் தமிழ்த் தாய்க்கு உரிமை பூண்டுள்ள தலைமக்களுள் ஒருவராவர். இவர், இனியும் தமிழ்ப்பணியே செய்யுமாறு தமிழன்னை அருள் புரிவாளாக.

தமிழைக் காக்கும் தண்டமிழ் வீரர் ::

சரித்திர ஆசிரியர்

த. செங்கல்வராய பிள்ளை, B.A., L.T.

உயர் திருவாளர் ச. த. சற்குணர், B.A. அவர்களைப்போல ஆழ்ந்தகன்ற கல்விப் புலமையும் நுண்மதியும் வாய்ந்த அருந்தமிழ்ப் புலவர்கள் மிகச் சிலரே யாவர். தமிழெனுங் கல்விப் பொருளை வரையாது வழங்கிப் புகழ்பெறும் தமிழ் நாட்டு வள்

ளல்களில் இவர்கள் தலைசிறந்தவர்கள். ஆங்கி ல்த்திலும் தமிழிலும் புலமை பெற்ற இவர்கள் பல ஆண்டுகளாகக் கைம்மாறு ஒரு சிறிதுங் கருதாது தமிழ்ப் பணியாற்றித் தமிழைப் போற்றி வருகின் றார்கள். வலக்கை வழங்குதல் இடக்கை யறியா வண்ணம் அறம் புரிதல் நன்றெனும் இலக்கணத் திற்கு இவரைவிடச் சிறந்த இலக்கியமுண்டோ?

இப் பேராசிரியர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத உயர்குணசீலர். கேட்பவர் களிக்குமாறும் உயர்பதவியிலுள்ளவர் மகிழ்ந்து பரிசில் தருமாறும் பாமரர்கள் கைகொட்டிப் புகழு மாறும் தமது கொள்கைகளைத் திரித்துக் கூறும் கயவர்களுக்கும் இப் பெரியார்க்கும் நெடுந்தூர மாகும். இதனலன்றே அறிவுடை யுலகத்தில் சற் குணரவர்கள் குன்றின்மேலிட்ட விளக்கெனச் சிறந்து விளங்குகின்றார்கள்.

'தமிழர்கள் ஆங்கிலமும் வடமொழியும் கற்ப தால் ஆக்கம் பெறுவர்; தமிழின் சிறப்பு அவர்க ளுக்கு அப்போதுதான் நன்கு புலனாகும்' என்னுங் கருத்துடையவர் நமது பேராசிரியர். இன்றி யமையாதபோது வடமொழிக் கலப்பு ஏற்புடைய தாயினும், கலப்பில்லாததும், வழக்காற்றிலுள்ளது மான எளிய செந்தமிழ்ச் சொற்களாலாகிய தனித் தமிழ் நடையையே பின்பற்றுதல் நலமெனுஞ் சீரிய கருத்து இவர்களுக்கும் உடன்பாடாகும். பல

மொழிகளைக் கற்பதால் அறிவு வளரும் என்று கூறுபவராயினும் தமிழ் மொழிக்கு இடர்வருங் காலத்து இவர்கள் முன்னணியில் நின்று போர் தொடுக்கும் தமிழ் வீரரென்பதை நாம் இப்போது நன்கு உணர்கின்றோம்.

தமிழ்ப் பாதுகாப்புப்போரின் படைத்தலைவர்களிலொருவராக விளங்கும் இப் பெருந்தகையார் வெற்றிமாலையணிந்து பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என்று அவர்களது அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவில் நாமனைவரும் வாழ்த்துவோமாக.

தமிழ் ஆழ்வாராகி மாணவர்களைத் தமிழன்பராக்கி யருள்பவர் ::

சென்னை நகர சபை
'ஆல்டர் மேன்'
T. P. மீனுட்சி சுந்தரனுர், M.A., B.L.

ஆங்கிலப் பகட்டு எல்லோரையும் தனக்கு அடிமையாக்கிய அந்தக் காலத்திலேயே அதன் வலையிற் சிக்காமல் ஆங்கிலத்தைத் துறைபோகக் கற்று அதன் உண்மைச் சிறப்பில் தோய்ந்து மகிழ்ந்து, அதுபோலத் தமிழும் சிறப்புறவேண்டத் தமிழன்னைக்குத் திருத்தொண்டு செய்யப் புகுந்து நுனிப்புல் மேயாது தமிழ் ஆழ்வாராகித் தம்மிடம் வந்த மாணவர்களையெல்லாம் வாயளவில் அன்றி உண்மையில் உலகம் ஈடேறும் வகையில் தமிழன்பர்களாக்கித் தம் முயற்சியில் வெற்றி பெற்று

விளங்குகிறார் திருவாளர் சற்குணப் பெரியார். இவர் வெறும்பேச்சு, வெற்றாரவாரம், வீண் புகழ்ச்சி, பிற மொழிப்பழி, சடபட என்றுருட்டல் ஆகிய இவற்றை அடியோடு வெறுப்பவர். இவரைப் பார்த்தபோ தெல்லாம் ஆங்கிலநாட்டுப் பேராசிரியரான டாக்டர் ஜான்ஸனுடைய நினைவு எனக்கு வருவதுண்டு. புறத்தேபோல அகத்தும் பகட்டும் மினுக்கும் இன்றி உள்ளத்துறுதியோடு ஒளிர்பவர். உறுதி, ஊக்கம் தன்னம்பிக்கை என்பன இவர் முகத்தே நிழலிடு கின்றன. உடல்வலிபோல மனவலியும் சிறந்தவர். பழமையின் பொய்த்திறத்திற்கு அடிமையாகாது பழமையின் மெய்த்திறத்தைப் பேணி வளர்ப்பவர். தமிழ்ப்பற்றும் நாட்டன்பும் சமய உணர்ச்சியுமே தமது வடிவமாகக் கொண்டுள்ள இப் பெரியார், அவற்றிற்காகவும், ஒன்றையும் திரித்துக்கூறாத உண்மை நிலையைத் தமது தோற்றப் பொலிவால் வெளியிட்டு நிற்கின்றார். இவர் நீடூழி வாழ்க.

மாணவரால் பூஜிக்கப்படுவேர் ::

கவிபூஷண சதாவதானி
வித்வான்
D. வேங்கடசாமி குப்தா.

श्लो ॥ श्रीमत्सद्गुणनामधेय ममलं साधूत्करारािधतम् ।
नानामाणवकार्चितं द्रमिळवाग्वाराान्निधिप्राभवम् ।
कामक्रोधमदादिदूरमतुलानन्दोरुश्रांतिक्रमम् ।
पायाद्देवविभुः प्रभूतकृपया भक्तावनेदीक्षितः ॥

ஆந்திர சமஸ்கிருதத்திற்கு ஆதரவளித்து வருகிறவர் ::

சென்னைப் பச்சையப்பன்
உயர்தரக் கலாசாலைத் தெலுங்கு பண்டிதர்
S. இராமலிங்க சாஸ்திரியார்.

శ్రీ సద్గుణరుగారి (బి.ఏ.) షష్టిపూర్తి సన్దర్భమునఁ బంపుకొన్న ప్రశంసాపత్రము:—

శ్రీ సద్గుణరుగారు చెన్ననగర మిల్లరు క్రైస్తవ కళాశాలయందు తమిళభాషోపన్యాసకులై చాలకాలము విద్యావిషయమై దేశమునకు భాషాసేవ చేయుచుండుట ప్రశంసనీయము. వారు తమిళమేకాక, మలయాళము నందును పాండిత్యముగడించి ఆంధ్ర సంస్కృతములందును ఆదరణఁజూపుచు తమ విద్యావైదుష్యమును నెల్లయెడల వ్యాపింపఁజేయుచున్నందుకు చాల సంతసించుచున్నాను. చెన్ననగరమునందలి పండితసంఘమునకు ఉపాధ్యక్షులై యుండి వీరు పండితలోకమునకు మేలుకలిగించే విషయములయం దాదరణ వహింతురని కోరుచు దైవము వీరికి దీర్ఘాయు రారోగ్యముల నొసంగునని ప్రార్థించుచున్నాను.

ஸ்ரீ சற்குணர் தமிழிலும் மலையாளத்திலும் பண்டிதராய் விளங்குவதன்றி ஆந்திர சம்ஸ்கிருதத்திற்கும் ஆதரவளித்து வருகிறார். இவர் பண்டித உலகத்திற்குச் சிறப்பை யுண்டாக்கிவரக் கடவுள் இவருக்கு நீண்ட ஆயுளும், ஆரோக்கியமும் அருள்க.

An Appreciation ::

OLIVER F. E. ZACHARIAS, B.A., L.T.,
Lecturer in English,
Madras Christian College.

I look upon my nine years' association with Mr. S. D. Sargunar as a colleague in the Madras Christian College as a privilege. In those nine years, it is doubtful, if I had ever spent longer than a few minutes, at a time, in actual conversation with him. He is a man of few words. Whenever he did speak, the words came out of the depth of a heart capable of deep and powerful feeling. It was this more than anything else that won the hearts of his students. Hero-worship, rarely met with in these modern days, was strikingly demonstrated when Mr. Sargunar took leave of his students on the eve of his retirement from the College. To achieve "long-distance popularity" is easy enough, but it is not so easy for a teacher to become the hero of his students. His weaknesses more than his strength, his foibles more than his merits, his wantingness more than his abundance, attract the attention of the critical present-day students. The attitude of his students towards Mr. Sargunar was so heartening an inspiration that one wished one were in Mr. Sargunar's place. It was not lip-offering, but heart-devotion that was in evidence. The remarkable impression that Mr. Sargunar was able to make upon his students was not achieved by trying to please, but by

firmness of character and unswerving loyalty to truth. Without fear, without favour, Mr. Sargunar performed his duties. In him were found the intellectual equipment, the mental equanimity and the spiritual earnestness that made the Gurus of old superhuman in the eyes of their shishyas.

Of Mr. Sargunar's intellectual equipment in regard to scholarship in Tamil I am the least qualified to hazard an opinion, my knowledge of Tamil being no better than that of the man in the street. But those whose opinion is entitled to respect have paid glowing tributes of praise to Mr. Sargunar's mastery of the Tamil language and literature. That a Christian brought up amid the traditions and practices of the Christian Church should have attained to such eminence of scholarship in a language the literature of which abounds in references to the creed and ceremonials of the Hindu religion is almost a marvel. Pandits of educational institutions and Tamil scholars of repute are, even today, sitting at Mr. Sargunar's feet and learning of him. A more eloquent testimony to Mr. Sargunar's extraordinary attainments as a student of Tamil than this is inconceivable.

The man no less than the scholar is worthy of unstinted admiration and affectionate regard. One wishes that Mr. Sargunar would, in his retirement, find it possible to reduce to some permanent form

his occasional speeches and writings which are thought of very highly by those whose opinions on matters Tamil do count.

I wish Mr. Sargunar long years of peaceful life to be devoted to the service of his *mother-tongue* and our mother-land.

TRUE COPIES OF SOME TESTIMONIALS

Mr. Sargunar joined the staff of the school in 1914 (September) and so far the last 14 years has been devoting himself to the teaching work of this school.

In addition to his work as Senior Tamil Pandit he has been engaged in teaching other vernacular languages when Pandits of the necessary ability and learning were not available.

Thirdly, he adds to his learning as a Pandit, valuable knowledge of the scholarship and literature of the English language.

In all these subjects he has combined with the love of his work and the school, the humility and unassuming spirit, which is the peculiar mark of the scholar. Of the quality of his work as a Tamil Pandit, it is superfluous for me to speak. He has brought this school up to a recognized position as a place where the wisdom stored up in the *ancient language* of India can be studied and loved, and beyond these successes, the mere fact, as I under-

stand, that he only leaves us to take up work as Senior Tamil Pandit of a College speaks for itself. His presence here has been a great help to the school and though he will still help us with his guidance and advice, yet his presence in the class room, his firmness combined with affection will be greatly missed by myself, and also by the masters and boys.

Lastly the affectionate regard which all his pupils have for him, is perhaps the most eloquent and sure testimony of the worth of his character.

As a scholar, as a teacher, as a disciplinarian and a friend, we have valued his work here, and we wish him all success in the future.

(Sd.) G. M. WITHERS,
Principal, St. Paul's High School,
Vepery, Madras.

Mr. S. D. Sargunar, B. A. has been on the staff of St. Paul's throughout my term of office and for some years before. He is one of the most valued members of the staff. His main work has been that of Senior Tamil Pandit. His Tamil Scholarship is well known in Madras and he is the author of several books which are in general use. But with his scholarship and love of language he combines a rare faculty of teaching and a strong power of discipline. His teaching is always asked or by the boys, and this is no mean tribute as his

standard is very high and his marking very strict, nor does he ever pander to the popular taste by becoming a mere examination crammer. To him belongs the fascination which is the reward of the true teacher.

Mr. Sargunar is also responsible for the English grammar of the VI Form, and for the English grammar syllabus throughout the school.

His loyalty, modesty and steadfastness have been a great example. I shall always be proud of having worked with him at St. Paul's.

(Sd.) KENNETH C. MC.PHERSON,
Principal, St. Paul's High School,
Vepery, Madras.

Mr. Samuel D. Sargunar is the Tamil Pandit of this school. He is the History graduate of the Madras University.

He has a wide reputation as a Tamil scholar, and his achievements in Tamil Examinations and literature speak for themselves.

I can testify to his excellence of character, and that he is very willing and hard-working Pandit. He has done excellent work in this school in teaching Tamil, and he has also been a successful teacher of English and History at various times.

(Sd.) H. J. EDMONDS,
Principal, St. Paul's High School,
Vepery, Madras.

Mr. S. D. Sargunar B. A., is the Senior Tamil Pandit of St. Paul's High School, Vepery. He joined the school twelve years ago and has been doing, not only Tamil work, but was also entrusted sometimes with English work in the High School Classes. He is now teaching English in Form VI in addition to his legitimate work. He knows Telugu, Canarese, and Malayam and was teaching Telugu and Malayalam Translation for about three years, when the Pandits of these languages were not qualified to teach the subject. He has got valuable testimonials regarding his work and scholarship. He is a sound scholar in Tamil language and spends a great part of his spare time in the study of the different Dravidian languages.

He has been found very capable in handling Tamil and English in the High School Classes. He is a very popular teacher, enthusiastic and earnest in his work. He was very punctual and regular in attending to his duties, which he performed to the entire satisfaction of every Principal under whom he had the privilege to work in the school.

(Sd.) S. P. ARUMAINAYAGAM,
Principal, St. Paul's High School,
Vepery, Madras.

From the 'Alma Mater' P. 17.
(St. Paul's, Vepery.)

"If there was one in the institution who thought it his life mission to spread knowledge for its own sake, it was my master the Pandit Sargunar. He was the one who taught me most, helped me most, improved me most. The Pandit was gentle and kind to his students, and commanded a uniform love and veneration from all the students in return. He was a profound scholar, a broad -minded critic, a linguist, and a philosopher. His judgments were always tempered with thought, and spiced with reason. Nothing can wipe out such a worthy man from the tablet of our memory."

M. T. VEDACHALAM, B.A., B.L.,
Advocate.

From the Madras Christian College, Magazine.
(September 1937, P. 29.)

"A crowded meeting last term testified to the popularity of Mr. Sargunar with his Tamil students, and it was with sincere regret that we bade him farewell after his long years of fine service in the college. Yet we are glad that his connection with the college is not entirely severed, and that he was good enough to pay us a visit and occupy the chair at the inaugural meeting of the Tamil Sangham in July. We are glad to think that he can still find time to come and talk to us out of the fulness of his experience, with the same kindly twinkle in his eye that belies any possible severity in his words."

The Rev. Dr. V. J. R. ASIRVATAM,
(B.A., L.M. & S.)
wrote on 30-12-1926.

"Mr. S. D. Sargunar has been known to me throughout my student career. In his student career, he was treated more as an equal by such distinguished Pandits as Messrs. V. M. Satagopa Ramanujachariar, V. G. Suryanarayana Sastriar, and Vedachalam Pillai (now Swami Vedachalam), than as a scholar."

நேர்மைக்கும் நேயப்பான்மைக்கும் நிலையமானவர் ::

சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழ்த்துறைத் துணைத்தலைவர்,
ரா. பி. சேதுப் பிள்ளை, B. A., B. L.

செந்தமிழ்ச் செல்வர் திருவாளர் சற்குணர் தம் பெயருக்கேற்ற பெற்றி வாய்ந்தவர்; கற்றுத் துறை போகிய நற்றமிழ்வாணர்; தாம் இன்புறுவது உலகின்புறக் கண்டு மகிழும்தகைமை சான்றவர்; அடக்கமும் பொறுமையும் அணியாகக் கொண்டவர்; கண்ணின்று கண்ணறச் சொல்லும் திண்மை வாய்ந்தவர்; நேர்மைக்கும் நேயப்பான்மைக்கும் நிலையமானவர். இத்தகைய செந்தமிழ்ச் சீலரைப் போற்றுதல் தமிழறிந்தார் கடனாகும்.

எங்கள் இயற்றமிழ் ஆசிரியர் ::

சென்னைப் பச்சையப்பன்
உயர் கலாசாலைத் தமிழாசிரியர்
வித்வான் பண்டித ரா. நடேச நாயகர்.

தந்தைதா யாவானுஞ் சார்கதியின் காவானும்
அந்தமிலா இன்பநமக் காவானும்—எந்தவுயிர்
தானாகு வானும் சரணாகு வானுமருள்
கோனாகு வானும் குரு.

1. **சந்திப்பு:**—நற்குணங்களனைத்தும் ஒருங்கே குடிகொண்டிருக்கும் தமிழ்ப் பேராசிரியராகிய ச. த. சற்குணப்பெருந்தகையாளர், B.A. அவர்கள், பல ஆண்டுகளுக்கு முன்னர், திருப்பவுற் கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கினார். சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அப்பேராசிரியரின் கல்வியின் ஆற்றலையும் அரும்பெருங் குணங்களின் சிறப்பையும் அக் கலாசாலையின் மாணவர்கள் மூலமாகவும் பிறர் மூலமாகவும் யானும் பிற நண்பர்களும் கேள்வியுற்றோம். அதன்பின்னர், அவ்வாசிரியப் பெருந்தகையார் தம் கலாசாலையில் நிகழ்த்தும் சொற்பொழிவுகளைக் கேட்கச் சில சமயங்களில் யான் விழைவுடன் செல்வதுண்டு. அவ்விதம் சில ஆண்டுகள் கழிந்தபின்னர், அவ்வாசிரியருக்கு உயரிய சீடரும் எனக்கு உழுவலன்பு வாய்ந்த நண்பருமாகிய திருவாளர். அ. கி. பரந்தாம முதலியார் அவர்களால் அவ்வாசிரியரின் நட்பு எனக்கும் பிறருக்கும் கிடைத்தது. திங்களின் ஒளியைக் கண்டோர் இரவியின் ஒளியையும் காண இசைவா

ரன்றே! அதுபோல, அக்காலத்தில் யானும் பிறரும் வேறு சில ஆசிரியர்களிடம் சில தமிழ் நூல்களைக் கற்றிருந்தோமாயினும், சற்குணப் பெருந்தகையாரிடமும் பல சீரிய தமிழ் நூல்களைக் கற்க ஆர்வங்கொண்டோம்.

2. **கற்பித்த நூல்கள்:**—'தான்கண்ட இன்பத்தை இவ்வையகமும் கண்டு இன்புறவேண்டும்' என்ற எண்ணத்தோடு 'பல செந்தமிழ் நூல்களைப் பலருக்கும் இலவசமாகப் போதிக்க வேண்டும்' என்ற விழைவினை எம்மாசிரியர் அவர்களும் நெடுநாளாகக் கொண்டிருந்தார். அதற்குப் பக்கத் துணையாகத் திரு. பரந்தாமனார் அவர்களும் நின்றனர். பின்னர், 1925-ஆம் ஆண்டில், 'தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம்' என்ற பெயரோடு புரசையில் ஒரு தமிழ்ச் சங்கமும் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு எம்மாசிரியர் அவர்களே தலைவராகவும் திரு. பரந்தாமனார் அவர்கள் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டனர்.

குழந்தைகளின் உடல் நிலையை அறிந்து உணவினை ஊட்டும் உத்தமமான தாய்மாரைப்போல மாணவர்களின் மனப் பக்குவத்தை அறிந்து முதலில், 'முதுமொழிக் காஞ்சி' என்னும் நூலினை எம்மாசிரியர் போதித்தனர். பின்னர், நாங்கள் முறையாகத் திரிகடுகம், ஆசாரக் கோவை, நாலடியார், புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, தொல்காப்பியத்தில் எழுத்ததிகார நச்சினார்க்கினியம், பத்துப்பாட்டு, சேனாவரையம், கலித்தொகை முதலிய நூல்களையும், செகசிற்பியார் இயற்றிய,

'வேனிஸ் நகரத்து வர்த்தகன்' என்ற ஆங்கில நூலில் சில பகுதியையும் கற்றோம். ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகள் சங்கச் சார்பாக அவர் எங்களுக்கு உழைத்துக் கற்பித்து வந்தார்.

3. **போதிக்கும் வன்மை:**—சில ஆசிரியர்கள், சில மாணவர்களுக்குப் பாடம் சொல்ல விழைவாராகில், தாங்கள் இனிப் படித்தற்கென உரிய நூலைத் தாங்களே தேர்ந்தெடுத்து மாணவர்களை முன்னிலையாக்கிக்கொண்டு போதிப்பார்கள்; மாணவரின் பக்குவத்தையும் தேர்ந்தறியார்கள். ஆனால், எங்கள் நற்றமிழ் ஆசிரியரவர்கள், மாணவர்க்கென உரிய நூலையே தேர்ந்தெடுப்பார்; மாணவரின் மனப் பக்குவத்தைச் சோதித்தறிந்து கொள்ளுவார்; மாணவர்கள் இதற்கு முன்பு எத்தகைய நூல்களைப் பிற ஆசிரியரிடம் எவ்வாறு பயின்றுள்ளார்கள் என்பதனையும் அநுமானத்தாலறிந்து கொள்வார். அதன் பின்னர், மாணவர்கள் வெறுப்பு அடையா வண்ணம் எவ்வளவு விடயங்களைப் போதிக்க வேண்டுமோ அவ்வளவு விடயங்களையும் போதிப்பார். மாணவர்தம் முகக் குறிப்பினால், 'இந்தப் பாடம் இவர்களுக்கு விளங்கிற்று, இது விளங்கவில்லை' என்று தெள்ளிதின் அறிந்து, மீண்டும் அநுவாத முகத்தானும் எதிர்மறை முகத்தானும் பாடங்களைச் செவ்வனே அறியும்படி பன்முறையும் போதிப்பார்; அதற்குச் சம்பந்தமான பல உதாரணங்களைக் கூறி விளக்குவார்.

ஒரு நூலைப் படித்தவுடனே அதன் உதவியைக்கொண்டு மாணவர்கள் தாங்களே பிற நூலையும் படிக்கும்படியான சிறந்த வழியையும் அவர் காட்டுவார்; மாணவர்கள் தாம் படித்த பாடங்களில் உண்டாகும் சந்தேகங்களை அடுத்த வாரத்தில் கேட்பார்களாகில் மனமுவந்து ஐயம் திரிபற விளக்குவார். பாடம் போதிக்குங்கால் இன்னோரன்ன பேராற்றல் எம்மாசிரியர்பால் உண்டு.

4. **பன்மொழித்திண்மை:**—இத்தகைய பேராற்றல் எம்மாசிரியரிடம் உண்டானமைக்குக் காரணம் யாதோ எனின், அவர் பைந்தமிழ் மொழியில் சிறந்த இலக்கிய இலக்கண நூல்களை முறையே கற்ற நுண்ணறிவின் வன்மையும், ஆங்கில மொழியில் பி.எ. பட்டம்வரை பயின்ற பின்னரும் அம்மொழியில் பல ஆராய்ச்சி நூல்களை ஆய்ந்த திண்மையும், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் போதுமானவரை பயின்ற திறமையுமாகும். இவர், தமிழ் நூல்களைப் போதிக்குங்கால் பிற ஆங்கில நூலாசிரியர்கள் தமிழின் சிறப்பை எவ்வாறு புகழ்ந்துள்ளார்கள். என்பதனையும் ஒப்பிட்டுக் கூறுவார். 'தமிழர்கள் சிறந்த ஒழுக்கமுள்ளவர்கள், அவர்கள் அப்படியிருத்தற்கு அவர்களுக்குள்ள திருக்குறள், நாலடியார் முதலிய விழுமிய நூல்களே சான்றாகும்' என்று ஆங்கில நூலாசிரியராகிய, ஜி. யூ. போப் கூறியுள்ளதையும் காட்டுவார். தமிழ் இலக்கண நூல்களுக்கு உரை கூறும்போது கால்டுவெல் துரைமகனார் இயற்றிய திராவிட ஒப்புமை

இலக்கண நூலோடும், பிற ஆங்கில இலக்கண நூலோடும், வடமொழி, தெலுங்கு, மலையாளம் முதலிய இலக்கண நூல்களிலும் உள்ள ஒப்புமை வேற்றுமைகளோடும் விளக்கிக் கூறுவார். 'தமிழ் இலக்கண நூலானது தருக்க அமைப்போடு கூடியது' என்றும், தமிழ்மொழியானது, உலகில் சிறந்த மொழிகளில் ஒன்றாகத் திகழ்வது' என்றும் மேனாட்டு அறிஞர்கள் கூறியுள்ளவற்றை ஆங்காங்குக் கூறித் தமிழைக் கற்போர்க்கு ஒரு பெரிய ஆர்வத்தையும் ஊட்டிவிடுவார்.

5. **ஆராய்ச்சியின் உண்மை.**—எம்மாசிரியர் எங்களுக்குப் பதவுரை மாத்திரம் கூறிச்சென்றவரல்லர்: விசேடவுரைகளையும் ஆராய்ச்சியோடு கூறுவார். ஒரு தமிழ் நூலோடு பிற தமிழ் நூலுக்குள்ள சிறப்பியல்புகளையும் பொது இயல்புகளையும் விளக்குவார். உரையாசிரியர்கள் ஆங்காங்கு முரண்படுவதையும், தம்முடைய முடிவான கருத்து இன்னது என்பதனையும் கூறுவார். சில நூலாசிரியர்களோ உரையாசிரியர்களோ கூறியது காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுடைத்தன்றாயின், அது குற்றமுள்ளதெனவே தக்க சமாதானத்தோடு கூறித் தம் கட்சியை நிலைநாட்டுவார். எம்மாசிரியர், சிலவற்றைக் குற்றமுள்ளதெனக் கூறும்போது சில மாணவர்கள் வாதிப்பார்களாயின் அவர்கள் சம்மதிக்கும்வரை பலவிதமான ஆட்சிப் பிரமாணங்களோடு விளக்கிக் காட்டுவார்.

'ஒரு நூலுக்கு உரை கூறவேண்டுமாயின் அந்நூல் எக்காலத்தில் எழுதப்பட்டது, அக்காலத்தில் நிகழ்ந்த செயல்களென்ன, எந்நாட்டில் எழுதப்பட்டது, அந்நாட்டில் வழங்கிய வழக்குகள் என்ன, எந்நூலாசிரியரால் எழுதப்பட்டது, அந்நூலாசிரியரின் மனப்பான்மை யாது என்பனவற்றை அகச்சான்றுகளாலும் புறச்சான்றுகளாலும் ஆராய்ந்தே பொருள் கொள்ளவேண்டும்' என்று எம்மாசிரியர் பன்முறை கூறுவார்.

6. **நன்கொடைத்திறத்தின் வண்மை:**—இத்தகைய சீரிய கூரிய மதிநுட்பமோடு எங்களுக்குப் பன்னாள் வரை பன்னூலாம் பாற்கடலை ஊட்டிய எந்தம் ஆசிரியர்பால் நாங்கள் செய்த பிரதி உபகாரம் ஏதேனும் ஒன்று உண்டோ எனின், ஒன்றுமில்லை. ஆனால், ஒன்று உண்டு. அதுதான், எழுமையும் மறவா உழுவலன்பாகும். அவர், இதுவரை எங்களிடம் ஒரு செப்புக் காசையும் எதிர்பாராதவராய் இருந்ததோடு, எங்களுக்குக் கல்விச் செல்வத்தோடு பொருட் செல்வத்தையும் தந்துள்ளார்.

எங்கள் கல்விச் சங்கம் அமைந்துள்ள இடத்திற்குரிய காவலாளிக்குத் தரவேண்டிய மாதச் சம்பளமும் ஆண்டு விழாவிற்குரிய பொருளும் எங்கள் ஆசிரியரே கொடுப்பது வழக்கம். அவர், அப்பொருளைத் தரும்போதும் பிற மாணவர்கள் அறியாவண்ணம் சங்கக் காரியதரிசியிடம் மறைவாகத் தருவார். சில சமயங்களில் காரியதரிசியவர்கள் சங்கச் செலவுக்கெனச் சில மாணவர்களிடம்

சந்தா வாங்குவதற்கு எண்ணங்கொண்டால் அச் சமயங்களில் எம்மாசிரியர் 'கல்வியைப் பொருளுக் காக விற்றல் கூடாது' என்ற வாக்கியத்தைக் குறிப்பாகக் கூறிவிட்டு அச்செலவைத் தாமே ஏற் றுக்கொள்ளுவதாகக் கூறுவார். மாரி பிறருக்குப் பயன்படுவதன்றித் தான் பிறரிடம் சிறிதும் உப காரத்தை ஏலாத் தன்மையைப்போல் அவர் என் றும் விளங்குகிறார்.

7. **காலந்தவறு ஆண்மை:**—எங்களுடைய கல்விக் கழகம் புரசைப்பாக்கத்திலுள்ளது; எம்மாசிரியரின் இல்லமோ இராயப்பேட்டையில் உள்ளது. அவர், ஞாயிற்றுக்கிழமைதோறும் பாடத்தைப் போதிக் கக் குறித்த நேரத்திற்கு முன்னதாகவே வந்திருப் பார். முறையாக மூன்றுமணி நேரம்வரை வகுப் பில் பாடத்தைப் போதிப்பார். ஞாயிற்றுக்கிழமை களில் சில முக்கியமான பண்டிகைகள் வந்தாலும் அவர் அந்நாட்களில் நிற்கவே மாட்டார். சில சம யங்களில் தமக்கு உடல்நிலை சரிவர இல்லாவிட்டா லும் தம்மால் கூடியவரை முயற்சிசெய்து வந்து விடுவார். அப்படி மிகவும் கஷ்டமான நிலையி லிருந்து தாம் வர முடியாமல் நிற்க நேரிடுமாகில், மாணவர்களுக்குத் தெரிவிக்காமல் நிற்கவே மாட் டார். உடனே, ஒரு கடிதத்தின் மூலமாக எங்க ளுக்குத் தெரிவித்து விடுவார். சில சமயங்களில் தாமே நேரே வந்தும் கூறிவிட்டுச் செல்வார். இப் படி நிகழ்வது பல ஆண்டுகளில் சில தடவையே யாகும்.

மாணவர்களில் சிலர், 'அடுத்தவாரம் கிறிஸ்து நாதர் பிறந்த நாள் வருகின்றதே, தாங்கள் அன்றையதினம் விடுமுறை எடுத்துக் கொள்ளலாமே" என்றால், 'எனக்குக் கிறிஸ்துநாதர் பிறந்த திருவிழாவைவிட மாணவர்களுக்குப் பாடம் போதிப்பதே சிறந்த திருவிழாவாகும்' என்பார். மாணவர்களில் பெரும்பாலோர் சில சமயங்களில் குறித்த காலத்தில் வகுப்பிற்கு வரமுடியாமல் நேரங்கழித்து வருவாராகில் அவர்கள் வருகிறவரை தாம் காத்துக்கொண்டிருப்பார். எங்கள் பாடசாலையின் காவற்காரனால் சில சமயங்களில் பாடசாலை திறக்கப்படாமல் இருக்குமானால், 'நாம் காரியதரிசியவர்களுடைய இல்லத்திலாகிலும் இன்றைய தினத்திற்குரிய பாடத்தை நடத்தலாமே' என்று கூறி அன்றைய தினத்திலும் பாடத்தை நடத்த முயல்வார். தாம் பாடத்தை முடித்தவுடன் தம் இல்லத்திற்குச் செல்வான் வேண்டி மின்சார வண்டியில் ஏறச்செல்லுந் தூரம்வரை சில மாணவர்கள் மரியாதைக்கு அறிகுறியாக அவரைப் பின்தொடர்ந்து போய் வண்டியிலேற்றச் செல்லுவாராகில், மாணவர்களுக்குக் கஷ்டம் தரக்கூடாது என்ற கொள்கையோடு', 'உங்களுக்கு ஏன் மிகவும் கஷ்டம், மணி ஆய்விட்டது, நீங்கள் உங்கள் வீட்டிற்குச் செல்லலாம், நான் தனியாகப் போகின்றேன்' என்று கூறிவிட்டுத் தாமே தனியாகச் செல்லுவார்.

8. **பல்குணப்பான்மை:**—எங்கள் ஆசிரியப் பெருந்தகையார் எங்களுக்கு வெறும் பாடத்தை

மாத்திரம் போதித்தவர் அல்லர்; 'முதலில் ஒருவருக்கு ஒழுக்கமே சிறந்தது, அவ்வொழுக்கத்தை உயிரினும் போற்றல் வேண்டும்' என்று அவ்வப் பொழுது வலியுறுத்துவார். நல்லொழுக்கத்தின் வழியாகத் தாம் முதலில் ஒழுகிக் காட்டுவார். அவருக்கு வாக்குச் சுத்தமா யிருக்கின்றமையால் அவரை வாய்மையாளரென்றும், உள்ளமானது மாசற்ற பளிங்கேபோல் விளங்குகின்றமையால், அவரை உண்மையாளரென்றும், மெய்யானது உத்தம காரியங்களையே புரிகின்றமையால் அவரை மெய்ம்மையாளரென்றும், அவருடைய மாணவர்களாகிய நாங்கள் என்றும் கருவதுண்டு.

சில மாணவர்களுக்குச் சில சமயங்களில் உடல் நிலை நன்னிலையில் இல்லாமலிருந்தால் அதற்குரிய பரிகாரம் முதலியவற்றைக் கூறுவார். எம்மாசிரியரைக் காண நாங்கள் அவர்தம் இல்லத்திற்குச் செல்லுவோமாகில், எம்மைத் தூரத்தில் கண்டவுடன் இனிய முகத்தாலும் அருகில்அணுகினவுடன் புன்முறுவலமைந்த வாக்காலும் வரவேற்று இருக்க இருக்கையைத் தருவார். பின்னர், 'சரீர நிலை எவ்வாறு உள்ளது? வீட்டில் அனைவரும் சுகந்தானே? முகம் ஒருவாறு வாடியிருக்கின்றதே, இதற்குரிய காரணம் யாதோ?' என்று பலவாறு எங்களுடைய நிலையை வினவுவார். அப்படி மாணவர்களில் சிலருக்கு உண்மையாகவே உண்டான இன்னல் நிலையை உரைத்து விட்டால், அதற்குத்தாமும் பரிந்து மனமுளைந்து, "உங்களுக்கு இப்படியும்

உண்டாயிற்றே! பயப்பட வேண்டா' என்று சமாதானம் கூறியபின் அதனை நீக்குதற்குரிய பேருதவிகளையும் புரிவார். இதற்குள்ளாக, வேலைக்காரரால் சிற்றுண்டிச் சாலையிலிருந்து மாணவர்களுக்கென வாங்கிவரப்பட்ட பலவிதமான சிற்றுண்டிகள் மேஜைமேல் வைக்கப்பட்டிருக்கும். நாங்களனைவரும் 'அவைகள் வேண்டாம்' என்றபோதும் வற்புறுத்தி அவைகளை அருந்தச் செய்வார். 'தனக்கென வாழாப் பிறர்க் குரியாளர்' என்ற நீதிக்கு இலக்காக என்றும் நிலவுகின்றவர் எங்கள் பேராசிரியராவர்.

இன்னும், 'கற்பித்தான் நெஞ்சழுங்கப் பகர்ந்துண்ணான் விச்சைக்கண், தப்பித்தான் பொருளேபோல் தமியவே தேயுமால்' என்ற ஆன்றோர் வாக்கை எம்மாசிரியர் நன்கு அறிந்தவராகையால், தாம், தம் ஆசிரியர்மாரைப் பொன்னேபோல் சிறப்பாகப் போற்றி ஒழுகியதாகவும் சமயம் வாய்க்கும் போதெல்லாம் கூறுவார். அவருக்கு மத வேற்றுமை என்பது சிறிதும் கிடையாது. ஒருநாள் ஒரு கிறிஸ்தவர் எம்மாசிரியரை அணுகி, 'நீங்கள் எப்பொழுதும் தமிழையே பிரியமாகப் படிக்கின்றீர். தமிழில் சிறப்பான கொள்கைகள் என்ன உண்டு? கிறிஸ்துமத நூலில் பலசிறந்த கொள்கைகள் உள்ளன. உதாரணமாக இயேசுநாதர், 'ஒருவர் ஒரு கன்னத்தில் அறைந்தால் வேறு கன்னத்தையும் காட்டு' என்று கூறியுள்ளார். அத்தகைய உயரிய கொள்கை வேறு பிற நூலில் உண்டோ?'

என்று கேட்டனராம். அதற்கு எம்மாசிரியர் புன் முறுவலோடு, 'ஆம், இயேசுநாதர்' 'ஒருவர் ஒரு கன்னத்தில் அறைந்த தீய செயலை மறவாமல் மற்றொரு கன்னத்தையும் காட்டு' என்றார். ஆனல், திருவள்ளுவரோ, 'ஒருவர் செய்த தீமைக்குப் பதிலாக நன்மையைப் புரிந்துவிடு, பிறகு அவ்விரண்டு செயல்களையும் மறந்துவிடு' என்ற கொள்கையோடு

"இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்று கூறியுள்ள அருமையான நீதியைக் கவனித்தீரா? இதுபோல் வேறு எந்தக் கிறிஸ்தவ நூலில் கூறப்பட்டுள்ளது? நீவிரே கூறும்?' என்று கூறி அவர் வெட்கிப் போகும்படி செய்தனராம்.

எம்மாசிரியர், நம்முன்னோரின் பழக்க வழக்கங்களை விடக்கூடா தென்பதனையும், அன்னோரின் அறிவின் ஆற்றல், நற்செயல், வீரம் முதலியவற்றை அறிவதற்காகிலும் தமிழைப் படிக்கவேண்டும் என்பதனையும், தத்தம் மதத்திற்கேற்றவாறு கடவுள் வழிபாடு செய்யவேண்டும் என்பதனையும் எங்களுக்கு வலியுறுத்துவார்.

இத்தகைய பொன்றுப் புகழுடைய எம்மாசிரியப் பெருந்தகையாரிடம் உயரிய கலைகளையும், விழுமிய நடைகளையும் கற்ற மாணவர்களில் பலர் இன்றும் வித்துவான்களாகவும் பண்டிதர்களாகவும் தமிழ்ப் பேராசிரியர்களாகவும் நூலாசிரியர்களாகவும் விளங்குகின்றனர். அடியேனுகிய யானும், சென்னை வித்துவான் பரீட்சையிலும் மதுரைத்

தமிழ்ப்பண்டித பரீட்சையிலும் தேறுவதற்கு எம் மாசிரியர் எங்களுக்குக் கலைகளைச் செவ்வனே போதித்த உதவியே யாகும். இன்னும், நாங்கள் தற்காலவாழ்வினை இனிது நடத்துவதற்குத் துணைக் காரணமாக உள்ளவரும் அவரேயாவர். இத்தகைய உயரிய குணங்களனைத்திற்கும் உறைவிடமா யமர்ந் துள்ள பெரியாரவர்களது அறுபதாவது ஆண்டின் சிறப்பு விழாவன்று அவருடைய பொற்பாத கம லங்களை வாழ்த்தி அவருக்கு இன்னும் நீண்ட ஆயு ளும் சகல செல்வமும் தரும்படி, யான் வழிபடும் இறைவனை வழுத்துகின்றனன்.

நற்குணம் யாவும் நயந்து வசித்திட நல்லிடமாய்ப்
பொற்குண வாளரும் போற்றித் துதிக்கப் புகழுரைகொள்
தற்குணம் தானறி யாப்பெருஞ் சீர்த்தியைத் தானடைந்த
சற்குணப் பேரோன் சரணார விந்தத்தைச் சாருவனே.

வாழி வாழி எங்க ளாசான் என்றும் வாழி வாழியே
வாழி வாழி சற்கு ணப்பேர் நற்கு ணன்தான் வாழியே
வாழி வாழி அவன்றன் கிளையும் நட்பும் வாழி வாழியே
வாழி வாழி அவன்றன் ஆண்டும் அருளும் வாழி வாழியே.

இன்றும் "திக்கெலாந்திகழும் திருநெல்வேலி" தான் ::

வித்வான்
A. K. ஆதித்தர்.

குறுமுனிவாழ் குன்றமும் குற்றாலநீர் வீழ்ச்சி யும் குளிர்தென்றலும் சந்தனப்பொழிலும் கடல் முத்தும் இயற்கை எழிலாகக்கொண்டு; சிவஞான முனிவர், சுப்ரமண்ய தீட்சதர், காரிரத்தினக் கவி

ராயர், இராமாநுஜக் கவிராயர், சங்கர நமச்சிவாயர், மயிலேறும் பிள்ளை முதலிய இலக்கணப் புலவர்களையும்; திரிகூட ராஜப்பர், கிருஷ்ண பிள்ளை, சுப்ரமண்ய பாரதியார், அதிவீர வரதுங்க ராம பாண்டியர் முதலிய இலக்கியப் புலவர்களையும்; நம்மாழ்வார், ஆண்டாள், பெரியாழ்வார் முதலிய பக்தர்களையும்; இன்னும் பல இசைப்புலவர்களையும் தந்து சிறப்புற்ற திருநெல்வேலிக்கு இற்றைநாள் பெருமை என்னை ?

காயசிகாமணி முத்தையா பாகவதர், கீதாசாகரம் வேதாந்த பாகவதர், இராக அவதாரம் விளாத்திகுளம் நாயகஸ்வாமி, தேவாரம் சுந்தரமூர்த்தி ஓதுவார் ஆகிய இந்நான்கு பெரியார்களும் திருநெல்வேலியின் இசைப்புலமையை இன்றும் உச்ச ஸ்தானத்தில் காத்துவருகின்றனர். இலக்கிய இலக்கணப் பெருமைக்கு யாவர் ? கம்பரும் வள்ளுவரும் போன்று ஊரும், குலமும், மதமும் இவை போன்ற ஒன்றும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் எடுத்த கருமத்தை மேம்பட நிறைவேற்றிச் செல்வதையே கொள்கையாகக்கொண்டு, பலனையும் புகழையும் எதிர்பாராமல் பல்லாண்டுகளாகத் தமிழ் மக்களுக்கு ஊழியம் ஆற்றி, ஆசிரியர்கட்கு ஆசிரியராக விளங்கும் பேராசிரியர் ச. த. சற்குணர் B. A. அவர்களின் இலக்கிய இலக்கணப் பெருமையே இன்று எங்கள் திருநெல்வேலிக்கு அணி; அன்னார் மற்றைப் பெருமைகளை மற்றையோர் வரைவர். ஆதலின் ஈண்டு அவற்றைக் கூறாது விடுத்தனம்.

பேராசிரியரவர்களின் பன்மொழிப் புலமை மலைமேலிட்ட விளக்கு. உச்சிமேல் வகிப்பவர் நக்கீரர் என்பார் சில்லோர், சில்லோர் சேனவரையர் என்பார், மற்றும் சில்லோர் சிந்தாமணியார் என்பர். நிற்க,

அறிவிற்கண்ட உண்மையை ஓதி உணர்த்தினர்களேயன்றி ஆசிரியரவர்கள் எழுதி ஸ்தாபிக்கவில்லை. காரணம் யாதோ? அஃது எம்புல்லறிவிற் கெட்டுவதில்லை. சென்னைச் சர்வகலாசாலைச் சங்கத்தார் பேராசிரியர் அவர்கள் தம் ஆராய்ச்சிகளை எழுதி வெளியிடச் சிரத்தை எடுத்து வழிகோலுவார்களானால், அதுவே நாம் அவர்களால் அடையக்கூடிய பலனை எளிதில் அடையும் மார்க்கமாகும்; அதனால் தமிழுலகம் ஓர் உண்மை உணர ஏதுவாகும்.

நற்றிறம் படர்வோர்
விற்பனர் விவேஹர்
சற்குணச் சான்றோர்
நிற்கபல் லூழி!

இறுமாந்து பேசும் புலவரல்லர் ::

அயன்புரம் பிரபந்த வித்வான்
அ. வரதராஜ நாயகர்.

திருவாளர் ச. த. சற்குணர் B. A. அவர்களைத் தமிழ்நாட்டில் அறியாதார் யாருமில்லை. இவர் பெயர்க்குத்தக்க குணமும் பெற்றுள்ளார். இவர் பெருங் கல்லூரிகளில் உயர்தர வகுப்பு மாணவர்க்

கும் தமிழ்ப்புலமை மிகக்கொண்ட புலவர்களுக்குமே அறிவுறுத்தும் அருங்கலை விநோதராய் விளங்குபவர். இவர் புரசையில் தொல்காப்பியம் நச்சினார்க்கினியருரையும் சேனாவரையருரையும் கலித்தொகையும் பாடம்சொல்லும்போது நான் பன்முறைபாடங் கேட்டு மகிழ்வடைந்திருக்கிறேன். தம்மை அடையும் தமிழ்ப்புலவர் அனைவர்க்கும் மதவேறுபாடின்றி அவரவர் சமயமும் இடமுமே நோக்கிச் சென்று குறித்தகாலம் பிழையாது தமிழ்ப் புலமை பரப்புதலே விழுமிய பயனெனக் கருதித் தாம் தேடிச் சேகரித்த அரும்பொருளை யெல்லாம் மனமகிழ்ந்து சொரியாநிற்கு மியல்பினர். சொரியும் போது கேட்போர் நெஞ்சம் உறுதிப்படுமாறு பல வாருகக் கடாவினும் வெறுப்பின்றித் தினவுகெட விளக்குமியல்பினர். அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே வைகுந்த மென்பதுபோலத் தாமறிந்த பொருளன்றி உலகில் இல்லையெனக் கருதி இறுமாந்து பேசும்புலவர் போலன்றி அறியவேண்டுவது மிகவுள்ளதெனப் பன்முறை கூறக்கேட்டுள்ளேன். இஃது இவர் உண்மை யறிந்தொழுகும் பேரறிவாளராக இருத்தலைக் காட்டுகிறதன்றோ? இன்னோரன்ன இயல்புவாய்ந்த இவரது அறுபாணண்டு விழா நன்கு நடைபெற்று இன்னமும் பல்லாண்டு புத்ரமித்ரரோடு சுகம்பெறவிருந்து இனிய தமிழ்ப் பணியை ஆற்றுமாறு உயர்வற உயர்நலமுடைய ஓர் அறவாழி அந்தணனை வேண்டுகின்றனன்.

ஆசிரியர் அகத்தில்
அருங்கலை கற்பித்த முறை ::

வித்வான்
தி. கிருஷ்ணமூர்த்தி.

இளமையிலேயே தாய்மொழியாகிய நந்தமிழ் மொழியை நன்கு பயிலவேண்டும் என்னும் பேரவா எனக்கு இருந்தது. ஆயினும் யாவர்பால் சென்று தமிழைப் பயில்வதென்று எண்ணும்போது என் மனம் வருந்திற்று. ஒருநாள் என்னரும் நண்பரொருவர் எம்மாசிரியர் பெயரைக் கூறி, அவரிடம் நாம் சென்றால் நங்குறை தீரும் என்று புகன்றார். பின்னர் நாங்களிருவரும் ஒருநாள் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஆசிரியர் அகத்தை அடைந்து அவரிடம் எங்கள் குறையை வெளியிட்டோம்.

ஆசிரியர் எங்களிருவரையும் அன்புகலந்த மொழிகளால் வரவேற்று அன்றையதினமே எங்களுக்குப் பாடம் சொல்ல ஆரம்பித்தார். எங்களுக்கு முன் அவரிடம் மூவர் வித்துவான் பிரவேச பரீட்சைக்குப் பாடங்கேட்டு வந்தனர். அவர்களுடன் நாங்களும் பயின்றுவந்தோம். ஆரம்பத் தமிழ் மாணவர்களென்று எங்களுக்கு ஆசிரியர் தனியாக இலக்கணம் போதிக்கவில்லையாயினும் இடையிடையே செய்யுள்களில் வரும் இலக்கணக் குறிப்பு வாயிலாக இலக்கணச் சுவையை ஊட்டினார். ஐவர் 1932-ல் நடந்த பரீட்சைக்குச் சென்று தேறினோம்.

பிறகு நாங்களைவரும் வித்துவான் ஆரம்ப பரீட்சைக்குப் படித்துவந்தோம். அப்போது ஆசிரி

யர் எங்கள்பால் எடுத்துக்கொண்ட சிரமம் அதிகம். வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை எங்களுக்குப் பாடம் போதித்துவந்தார். இளம்பூரண எழுத்ததிகாரத்தை எங்கள் மனத்தில் அவர் பதிய வைத்த பான்மை பகற்தற்கரிது. கடினமான சூத்திரத்தின் பொருளையும் உதாரணங்களையும் முதலில் விளக்கிப் பின் சூத்திரத்திற்கு உரை கூறுவர். நன்னூல் சங்கர நமச்சிவாயருரையும் அப்படியே இத்துடன் பாடமாயுள்ள இலக்கியங்களையும் எங்களுக்குப் போதித்து வந்தார். 1934 ம் ஆண்டில் நடந்த பரீட்சைக்கு நாங்கள் ஐவரும் சென்று எழுதினோம். அதில் மூவர் தேறினோம்.

பின்னர் நாங்கள் வித்துவான் முடிவு பரீட்சைக்குப் படித்துவந்தோம். ஆசிரியர் சேனவரையம் சொல்லதிகாரத்தை எங்களுக்கு எளிய முறையில் எடுத்தியம்பி வந்தார். தொல்காப்பியத்திற்கும் நன்னூலுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் சூத்திரத்தின் முறையமைப்பையும் உரை சிதைந்த இடங்களின் உண்மையுரையையும் உரையாசிரியரின் உரை நயத்தையும் உள்ளவாறுரைப்பர். கடினமான உரைப்பகுதிகளை ஒருமுறைக்குப் பன்முறை பகர்வார். இலக்கணத்தில் நாங்கள் சோர்வடையாவண்ணம் இடையிடையே பொது அறிவையும் ஊட்டுவார்.

மாதத்திற்கு இருமுறை இலக்கிய இணக்கணங்களில் பரீட்சை நடத்துவார்; கேள்வித் தாள்களைத் தம் கைப்பட எழுதி ஒவ்வொருவர்க்கும் கொடுப்

பார்; பின்னர் விடைத் தாள்களைத் திருத்தி அவற்றில் உள்ள குற்றங்குறைகளை எடுத்தியம்புவார். 1936ம் வருடம் நடந்த வித்துவான் முடிவு பரீட்சைக்கு நாங்கள் இருவர் சென்றெழுதினேம். அப்பரீட்சையில் நான் ஒருவன் தேறினேன். உடல் நலமின்மையால் மற்றவர் தவறினர். அவரும் அடுத்த ஆண்டு பரீட்சைக்குச் சென்று தேர்ச்சி பெற்றார்.

எவ்வளவோ பொறுப்புவாய்ந்த வேலைகளையுடையவராயிருந்தும் ஆசிரியர் ஒழிந்த நேரங்களில் எங்களைப்போன்ற ஏழைகளுக்கு அருங்கலை கற்பித்து வந்ததையும் வருவதையும் எண்ணுங்கால் எங்கள் உள்ளம் உவகை யடைகின்றது. ஆசிரியர்க்கு நாங்கள் செய்யும் கைம்மாறுதான் என்னே! என்னே! அவர் நீடு வாழ வாழ்த்துவோமாக.

கட்டுரை வரையக் கற்றுக் கொண்டமை ::

ஹானர்ஸ் வகுப்பு மாணவர்
V. S. வெங்கடாசலம்.

தமிழ் நாடெங்கும் தமிழ் மணக்க வேண்டும் என்று தீவிர முயற்சி செய்துவரும் பெரியார்களில் சற்குணவள்ளலும் ஒருவர். நாலைந்து மாதங்களுக்கு முன்னர், எனது கோடை விடுமுறை நாட்களில், தமிழ்நாட்டுப் பெரியாராகிய திரு. சற்குணரவர்களிடம் தமிழ் பயிலவேண்டுமென்ற ஆவல் என்னை அவரிடம் செல்லும்படி உந்திற்று. கம்பராமாயணம் சுந்தரகாண்டம் அவரிடம் பாடங்

கேட்க விரும்பினேன். முதல் முதல் 'நன்னூலை' பாடங் கேட்கத் தொடங்குவது நேரிது என்று 'நன்னூல்' எனக்குப் பாடஞ் சொல்லி வந்தார்.

இடையில் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கட்டுரை எழுதிக் கொண்டிருந்தேன். அக்கட்டுரைப் பிழைகளை மனங்கோணுமல் ஆர்வத்துடன் திருத்தித் தர இசைந்தார். கட்டுரை வரைதலைப்பற்றி திரு. சற்குணரவர்களது அபிப்பிராயத்தை இங்குச் சுருக்கமாகக் கூறுவது ஏற்புடைத்து. தமிழ் நாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் தற்காலம் நற்காலமென்றும், பண்டைநாளில் சிறந்த கட்டுரைகள், சிறு கதைகள் நாவல்கள் இன்னோரன்ன அவ்வளவாகப் பரந்து கிடக்கவில்லை என்றும் அவர் அடிக்கடி கூறிவருவார். எழுத எடுத்துக்கொண்ட பொருளை விடுத்து, 'வந்த வேலையைவிட்டுப் பந்தற்காலைப் பிடிப்பவன் போல, வீணே வேண்டாத பல விஷயங்களைக் கூறி முக்கியமான விஷயங்களை விட்டு விடுவது சாதாரணமாகத் தமிழ் எழுதப்பழகுபவர் செய்யும் பிழை' என்று சொல்லுவார். 'அதை இவ்வாறு அழைப்பர்' என்னும் வாக்கியத்தில் 'அழைப்பர்' என்பதற்குப் பதிலாகக் 'கூறுவர் அல்லது சொல்லுவர் என்று எழுதுவது உசிதம்' என்பர். அழைப்பது என்பது "Anglicism" என்பதின் பாற்படுமாம். ஒருமை பன்மை மயக்கப்பிழையை மாணுக்கர்கள் அடிக்கடி செய்தலை அவர் எனக்கு அடிக்கடி நினைவூட்டுவார். வாக்கியங்கள் அமைப்

பதில் பெரும்பாலோர் தவறிப்போதலை அவர் விளக்கிக் காட்டுவார்.

சகலரும் எளிதில் அறிந்து கொள்ளும்வண்ணம் எழுதும் நடையே சிறந்தநடை என்பது அவரது கொள்கை. பக்கங்கள் குறைவாக இருந்தாலும் விஷயப்பொலிவு வேண்டுமென்றும், 'பத்திரிகை நடை' வேண்டாமென்றும் வலியுறுத்துவார். 'கூடுமானவரையில் சொந்தநடையில் எழுதப் பழக வேண்டும்' என்பார். 'நடையே மனிதன்' என்பார். இன்னும் அவர், 'பந்தி அமைப்பு, முகவுரை, விஷயம், முடிவுரை இவைகளைப்பற்றி முக்கியமாகக் கவனிக்கவேண்டும்' என்று சொல்லுவார்.

மாணுக்கர்களைச் செவ்வியமுறையில் செலுத்த வல்லவர் என்பதற்கு அவர் என்னைப் பண்படுத்திய ஒன்றே சான்று பகரும். திரு. சற்குணர் அவர்கள் தமிழ் நாடறிந்த தமிழாசிரியர். தமிழ் நாடெங்கும் சற்குணரவர்கள் பெயர் மணக்கிறது. எண்ணிறந்த மாணவர்கள் வாழ்க்கையைப் பண்படுத்திய புனிதர் என்னுசிரியர் சற்குணரல்லரோ?

'சற்குணர்' என்ற பெயர் அவருக்குச் சாலவே பொருந்தும். தமிழன் என்ற பெயருக்கும் ஏற்றவர் அவரே. தமிழனுக்குள்ள அன்பு, அருள், வீரம் முதலிய அனைத்துக்கும் இருப்பிடம் சற்குண உருவமே. தமிழை விற்கக்கூடாது என்று இலவசமாகப் பாடஞ் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்த தொண்டின் பெருமை அவருக்கே உரியது. அவர்

உள்ளம் தமிழ்மயம். அவர் செய்கை தமிழ்மயம். தமிழ் அவர் உள்ளத்தில் ஊறி ஊறி அவர் முகம் தமிழன்னையின் காட்சியை வழங்குகிறது.

இத்தகைய வள்ளலார் அறுபதாம் பிறந்த தினக் கொண்டாண்டாட்டம் உறுகிறது. அதைக் கேட்கக் கேட்க, நினைக்க நினைக்க உள்ளம் பூரிக்கிறது. அவர் உடல்நலத்தோடு நீண்டநாள் வாழ்ந்து தமிழுக்குச் சேவைசெய்ய இறைவன் அருள் செய்வாராக!

கசப்புள்ள எனக்குக் கனிவை உண்டாக்கியவர் ::

மாணவன்
V. S. ராமாநுஜன்.

சிறந்த ஆசிரியர்களைக் காண்பது கடினம். ஏனெனில் ஆசிரியர் தொழிலை மேற்கொண்ட யாவரும் ஆசிரியர்கள் ஆகார். ஆசிரியர் ஆவதற்கு என்று மிகச்சிலரே பிறக்கின்றனர். அங்ஙனம் பிறந்த பெரியார்களில் சற்குணரும் ஒருவர். அவர் வீட்டில் எளிய உடையே உடுப்பார். அவர் நடைமுறை மிகச் சிறந்தது. அவர் போதிக்கும் திறம் மெச்சத்தக்கது. இவ்வளவு சிறந்த பெரியாரிடம் நானும் என் சகோதரரும் 'நன்னூல்' பாடங்கேட்கும் பேற்றை அடைந்தோம். ஆகலின் சற்குணர் மாணவன் என்னுமளவில் நான் அவரிடம் படிக்கும்போது கண்ட கேட்ட அனுபவித்த இன்பங்களைச் சிறிது கூற விழைகின்றேன்.

அவர் எமக்குத் தமிழ் போதித்த முறை மறக்கற்பாலதன்று. நானும் என் சகோதரரும் அவரிடம் பாடங் கேட்கச்சென்றதும் அவர் முதலில் கையாண்ட முறைகளில், 'எங்களைச் சில நிமிஷங்கள் வரை உற்று நோக்கியதும், ஆழ்ந்த யோசனையின்பின் இலவசமாகப் போதிக்க இசைந்ததும் பிற்காலத்தில் மிகப் பயன்தரக்கூடிய நன்னூல் பாடம் சொல்லிக் கொடுக்க இசைந்ததும்' ஈண்டுக் குறிப்பிடத்தக்கன. அவர் எங்களைக் கூர்ந்து நோக்கியது, 'இவர்கள் என்னிடம் பாடங்கேட்கத் தகுந்தவர்களா ?' என்று பார்த்ததுபோல இருந்தது. பாடம் தொடங்கும் முன்னர் அவர் அதைப்பற்றி முன்னுரையாகச் சில விஷயங்களைச் சொல்லுவார். பாடத்தில் கடினமான விஷயங்களைக் குழந்தைகளும் அறியக்கூடிய மிகச் சாதாரண நடையில் சுலபமாக்கிச் சொல்லும் ஆற்றல் அவருக்குண்டு. இலக்கணம் படிப்பதில் அதிகக் கசப்புள்ள எனக்கு அதில் கனிவு உண்டாக்கி அதன் இன்பங்களை எடுத்துரைத்த பெருமை அவருக்கே உரியது.

ஒருமுறை சொல்லிக் கொடுத்ததும் விஷயங்கள் பசுமரத்தாணிபோல் மனத்தில் நன்றாகப் பதிந்துவிடும். இடையிடையே நன்றாக விளக்க ஆங்கிலப் ப்ழமொழிகளையும் வார்த்தைகளையும் மேற்கோள்களையும் உபயோகிப்பதுண்டு. தமிழர்கள் வடமொழி, ஆங்கிலம், தெலுங்கு போன்ற பிற

மொழிகளைக் கற்கவேண்டியதின் அவசியத்தை அடிக்கடி சொல்லுவார்.

சொல்லிக் கொடுக்கும்போது தமது சொந்த அநுபவங்களைக் கூறி உற்சாகப்படுத்தி வருவார். இங்ஙனம் பாடம் சொல்லிக் கொண்டு வருகையில் மாணவனுடைய முகக்குறிப்பால் விஷயத்தை நன்ருக அறியவில்லை என்று தாமாகவே அறிந்து புன் முறுவல் செய்து நன்ருக மறுமுறை விளக்குவார். எத்தனை தரம் வேண்டுமானாலும் பொறுமையுடன் மனங்கோணமல் நன்ருக அறியும் வரையில் விளக்குவார். பாடத்தில் மத வித்தியாசங்களைக் காட்ட மாட்டார். எம் மத நூலில் உள்ள குற்றங்களையும் அவர் தைரியமாக எடுத்துக்காட்டுவார். உண்மையை கொண்டாடுவது அவருடைய வழக்கம். சைவநூலை ஆராயும்போது சைவனைப்போலும், வைணவநூலை ஆராயும்போது வைணவனைப்போலவும், சமணநூலை ஆராயும்போது சமணனைப்போலவும் இருந்து உண்மைகளை உரைப்பார். எக்காரணத்தை முன்னிட்டும் ஒருவர் மனம் புண்படும்படியாக வார்த்தைகளைக் கூறமாட்டார். இடையே வரும் சந்தேகங்களைப் பாடம் முடிந்த பின்னர் அவர் விளக்குவதுண்டு. மாணவன் மனப்பான்மையை அறிந்து அதற்குத் தகுந்தாற்போல் கால அளவை அநுசரித்து மிதமாகச் சொல்லிக் கொடுத்துப் பாடத்தை முடிக்கும்போது 'இன்று இத்துடன் நிறுத்திக் கொள்ளட்டுமா?' என்று கேட்டு நிறுத்திக்கொள்ளுவார். முன் வகுப்பில் சொல்லியவை

களைக் கேட்ட பின்னரே பாடம் ஆரம்பிப்பார். மாணவனுடைய ஒழுக்கத்திற்கும் உண்மை உழைப்பிற்கும் தகுந்தாற்போல அவர் பாடஞ்சொல்லிக் கொடுப்பார். ஆசிரியர் என்று மாணவர் அச்சங் கொண்டு நடக்க அவர் ஒருபோதும் விரும்பார். அவரிடம் பாடத்தைத் தந்தையிடமிருந்து கேட்பது போல் நாங்கள் கேட்பது வழக்கம்.

இங்ஙனம் நடையாலும் உடையாலும் ஒழுக்கத்தாலும் அறிவாலும் சிறந்து விளங்கும் தமிழ்ப் பெரியாராகிய சற்குணர் இன்னும் அநேக பிறந்த தினக் கொண்டாட்டம் பெற்றுத் தமிழிற்குத் தொண்டு செய்ய இறைவன் அருள்புரிவாராக.

வாழ்த்துப்பா ::

வித்வான்
இ. மு. ஆறுமுகம்.

நிலமண்டில ஆசிரியப்பா

ஞாயிறொன் றுதித்து நற்று மரைபல
மலர்த்தல் போன்று மாணவர் மனமாம்
அரும்பினை மலர்த்தும் அருங்கலைக் கதிரே,
அளப்பருங் கலைக்கடல் அரும்பொருள் கொண்டும்
கற்றறி விலாத கசடர் தமக்கும்
கற்றி வுயர்ந்து கணக்கறி வோர்க்கும்
பொருளற் றோர்க்கும் பொருளுற் றோர்க்கும்
கல்வி பயிற்றலால் கைம்மாறு கருதா
இன்குரல் எழிலியை ஏய்க்குவை எனினும்
இன்குரல் எழிலிபெய் இனியநீர் வற்றும்;நீ
போதிக்கும் அருங்கலைப் பொருள்நனி வளரும்.

எழிலியும் ஒவ்வா இசைமிக வுடையோய்,
இசையால் திகழும் இல்லற ஞானியாம்
சற்குணப் பெரியோய், நற்குண முடையோய்,
எழுத்தொடு சொல்லறியா ஏழையேன் தன்னையும்
புலவரில் ஒருவனுய்ப் புகன்றிட வைத்த
புண்ணியா, உன்றன் பூவடி வாழ்க!
இம்மை மறுமை இரண்டிற்கும் நல்லறம்
உள்ளம் குளிர உரைக்கும் நாவாழ்க!
கற்றலில் ஒழுக்கம் கடலினும் பெரிதெனை
முற்ற வுணர்த்தும் மூதறி வுடையோய்,
தண்பெயல் துளியினும் தரணியிற் பன்னுள்
வாழ்க! வள்ளால், வாழ்க! வாழ்கவே!

வாழ்த்துப்பா ::

சோக்கலிங்கன்

ஆசிரியப்பா

திருமிகு பெற்ருேர் செய்தவப் பயனுல்
வாய்ந்த புவியில் வந்தவ தரித்துச்
சாந்தமுந் தயையுந் தன்மையும் பொருந்த
காந்தமும் ஊசியுங் கலக்கும் பற்ருய்
வந்தவர்க் குதவும் மாண்புடைப் பெரும!
சந்ததம் மாணவர் தமக்குச் சிறப்பாய்
வினுவுக் குத்தரம் விளங்க வுரைத்தே
அனைதைச் சிருர்க்கும் அன்பு புரிவோய்,
ஓதும் பாடத் துண்மை உரைக்குங்
கோதில் படிகக் குணப்பெருங் குன்றே,
பாடம் படிப்பவர் பயமொன் றிலாது
நாட சரோருக நகைமுக மாக
விழுமிய பொருளை வேண்டும் படியே

தழுவிக் கொடுக்குந் தண்ணளி யோயே,
அவரவர் வித்துவா ளுக வேண்டித்
தவமாய் வந்த தலைபுறு மாண்போய்,
வாழிநும் மைந்தன் ! வாழிநும் சுற்றம் !
வாழிநும் வாணுள் ! வாழிநும் தொண்டே !

நாண்மங்கல வாழ்த்து ::

கள்ளிக்கோட்டைப்
பீப்பில்ஸ் பாங்கியின் கணக்கர்
வி. அண்ணுமலே.

1. பண்ணிறைந்த தமிழ்த்தாயின் பணியியற்ற அவதரித்து
மண்ணிறைந்த பழந்தமிழை மகிழ்வுடனே நனியாய்ந்தே
உண்ணிறைந்த உணர்வுடனே உவந்தளிக்கும் என்குருவே
கண்ணிறைந்த அருளுடையோய் கற்பகத்தின் தயையுடையோய்.

2. தமிழ்நாட்டின் திலகமெனத் தரணிபுகழ் புலவரேறே
இமிழ்புவியில் உடல்நலனும் பொருள்நலனுங் கருதாதே
அமிழ்தனைய தமிழ்மொழியை அளித்திடுவாய் சலதியென
இழிந்திடுசொல்புகழ்ச்சியென இசைந்தேற்குங்குணமுடையோய்.

3. பன்னரிய குலமணியே பகருஞ்சற் குணமணியே
என்னரிய குருமணியே எழில்வித்வ சிரோமணியே
கன்னலெனப் பகர்மணியே கற்றவரால் புகழ்மணியே
மன்னிடுவாய் நெடுங்காலம் மலருலகம் வழுத்திடவே.

செந்தமிழ்ச் சிங்கம் ::

ராவ்சாகிப்
V. S. செங்கல்வராய பிள்ளே, M. A.

அந்த நாளிலே அருந்தமிழ்ப்புலி
விந்தை வாய்ந்தஅவ் வேத நாயகம்;
இந்த நாளிலே எங்கள் சற்குணர்
செந்த மிழ்க்கலேச் சிங்க மாவரே.

ஒப்பற்ற தமிழ்த் தொண்டர் ::

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்
தி. வி. இராமச்சந்திரன், M.A., B.L.

சென்னைத் திருப்பவுற் கலாசாலையிலும் கிறித்தவக் கல்லூரியிலும் தலைமைத் தமிழ்ப் பண்டிதரா யிருந்தவரும், தென்னிந்தியத் தமிழ்க் கல்விச் சங்கத்தின் தலைவரும், எனது தமிழாசிரியருமாகிய திருவாளர் சற்குணர் அவர்களின் அறுபதாமாண்டு நிறைவு விழாவைச் சமீபத்தில் தமிழன்பர்கள் கொண்டாடப் போவதைக் கேள்வியுற்றுப் பெரிதும் உளமகிழ்ந்தேன். இவ்விழாவை யொட்டி அப்பெரியாரின் அரும்பெருங் குணங்களைச் சில நண்பர்கள் ஒரு ஞாபகக் குறிப்புப் புத்தக வாயிலாக வெளியிடப்போவதால், என் மனத்தில் உதித்த சில குறிப்புகளையும் அதில் பதிக்கலாம் எனத் துணிந்தேன்.

தென்னிந்திய மொழிகளில் பல்லாண்டுகளாகத் தலைசிறந்து நிற்கும் தமிழ் மொழியைப் பலவகையிலுஞ் சீர்திருத்தி, அம்மொழியின் தனிச் சிறப்பைப் பெருக்கப் பாடுபடும் சீர்திருத்தவாதிகளில் முதன்மை ஸ்தானம் பண்டித சற்குணர் அவர்களுக்கே உரித்தாகுமென்பதைக் கீழ்க் குறித்த சில காரணங்கள் விளக்கும்.

ஒரு மொழி முன்னேற வேண்டுமாயின் அம்மொழி ஏனைய மொழிகளுடன் உறவாடி, அவைகளின் சிறந்த அம்சங்களைத் தனக்கேற்றவாறு

கிரகித்துத் தன் வயமாக்கி நிற்றலே உசிதமாகும். இக் கொள்கையைப் பெரிதுங் கைக்கொண்டாதரிக்கும் இவர், தனித்தமிழ், தனித்தமிழெனக் கூறிக் கொண்டு பல ஆண்டுகளாகத் தமிழ் நடைமுறையில் காணும் வடமொழி, ஆங்கில வார்த்தைகளை அநாவசியமாக அறவே நீக்கித் தமிழில் பேசவும் எழுதவும் முயற்சிசெய்யும் ஒரு சிலரின் செய்கைகளைச் சந்தர்ப்பமேற்படும்போதெல்லாம் தயை தாட்சணியமின்றிக் கண்டித்துத் தமிழ் நடையைப் பெருக்கப் பெரும்பாடு பட்டுள்ளார்.

சேதுபதி பொற்பதக்கத்தைப் பரிசாகப் பெற்று, சென்ற முப்பது ஆண்டுகளாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஆராய்ச்சிமுறையில்போதித்து வரும் இவர், ஆங்கிலத்திலும் B. A. பட்டம் பெற்றமையால், அடிநாள் முதல் அநேகமாக ஆங்கில முறையிலேயே பழகிக் கல்வி கற்கும் நம் மாணவர்களுக்கு, எளிதில் புரியும்படி கல்வி கற்பிக்க வல்லமை பெற்றார். எனவே, மற்ற வைதிகத் தமிழ்ப் பண்டிதர்களைப் போன்று குறுகின நோக்கங் கொள்ளாது எஞ்ஞான்றும் எவ்விஷயத்தையும் பரந்த நோக்கத்துடன் ஆராய்வதே இவரது இயல்பாயிற்று.

மேலும், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய இதர தென்னிந்திய மொழிகளிலும் இவர் சிறிது தேர்ச்சியடைந்து, தமிழ்மொழியின் நடையை அப்பாஷைகளுடன் அவ்வப்போது ஒப்பிட்டுப் பார்த்துத் தமிழின் ஒப்பற்ற தன்மையை

விளக்கிக் காட்டித் தமிழ் மாணக்கர்களுக்குத் தம் தாய்மொழியின்மீது ஒருவிதப் பற்று உண்டாக்கி வந்தார். தாய்மொழிக்குத் தொண்டுபுரிவதில் இதை விட மேலான தொண்டு வேறொன்றுளதோ ?

பல்லாண்டுகளாகத் தென்னிந்தியத் தமிழ்க் கல்விச் சங்கத்தலைவராக இருந்து இவர் தமிழ் இலக்கண இலக்கிய வகுப்புக்களைச் செவ்வனே நடத்தித் தமிழ் போதிப்பதிலே ஆர்வங்கொண்டார். தமிழ் கற்க விரும்பும் எவரும் இவரைச் சுலபமாக அடைந்து இலவசமாகக் கற்கலாம். இவ்வாறு இவரிடம் சென்று கற்றுத் தமிழில் தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கையை எளிதில் நிர்ணயித்தல் இயலாது. தமிழ் வகுப்புக்கள் இன்றும் இவரது வீட்டில் நடந்துவருவதைப் பலரும் அறிவர்.

சென்னைத் துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப் பட்ட பாடபுத்தகக் கமிட்டியில் இவர் முக்கியஸ்தானம் பெற்றுப் பலவகையிலும் தமிழைப் புதுப்பித்தார். நம்பத் தகாதவைகளாயும், தற்கால சாஸ்திரத்தின் தத்துவங்களுக்கு முரண்பட்டவைகளாயும், அச்சுப்பிழை, வார்த்தைப்பிழை, பொருட்பிழை முதலியவைகளைக் கொண்டவைகளாயும் வந்த பல தமிழ்ப் புத்தகங்களை இவர் நிர்த்தாட்சணியமாகப் புறக்கணித்துத்தள்ளித் தமிழ் மாணவர்களை அவைகளினின்றுந் தப்புவித்துத் தமக்குத் தோன்றிய மட்டில் பல அம்சங்களிலும் சிறந்த தமிழ்ப் புத்தகங்களையே பாட புத்தகங்களாக வைக்கும்படி பெருமுயற்சி செய்துள்ளார்.

இவ்வாறு தம் ஆயுட்கால முழுமையும் தமிழபி விருத்திக்கே அர்ப்பணஞ் செய்து, பொருளைச் சிறிதும் எதிர்பாராது தம்மைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் உண்மை உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் தமிழுணவை விநியோகித்து, அல்லும்பகலும் பிறர் நன்மைக்கே உழைத்து வரும் இவ்வள்ளலை நாம் புத்த பகவானுடன் ஒப்பிட்டுத் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என வாழ்த்துதல் மிகையாகாது.

தமிழாராய்ச்சியாளராயும் புலவராயும் விளங்கும் தென்னிந்தியப் பிரமுகர்களில் பெரும்பாலோர் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்தவர்களாயிருப்பதை நாம் பலவிடங்களில் காண்கிறோம். ஆசிரியர் சற்குணரும் அந்த ஜில்லாவையேசேர்ந்தவராயிருத்தல் அந்த ஜில்லாவுக்கு ஓர் தனிப்பெருமை தருகிறதென்பதில் ஐயமில்லை.

உண்மைத் தொண்டாம் தமிழ்த் தொண்டில் ஊக்கமுற உழைக்கும் வண்ணம் இவருக்கு இன்னும் ஆண்டுகள் பல ஆண்டவன் அருள்புரிவாராக!

நல்லாசிரியர் ::

சென்னைக் கிறித்தவக் கல்லூரி
விரிவுரையாளர்

பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், M. A.

நற்குணம் நிறைந்த சற்குணப் பெரியார் சுமார் முப்பது ஆண்டுகளாகத் தன்னலங்கருதாது தமிழ் நலங்கருதி தண்ணளிவுடையராய்த் தமிழ்த்தொண்டாற்றுவது நாவலரும் பாவலரும் பாமரரும் அறிந்ததொரு சீரிய உண்மையாகும். 'யான் பெற்ற இன்

பம் பெறுக இவ்வையகம்' என்பதற்கேற்ப இவர்கள் தாம் பல வருடங்களாக அரிதிற்கற்ற நூல்களின் நுட்பங்களையும் நயங்களையும் காலையிலும் மாலையிலும் மற்ற வேளையிலும் கலாசாலையிலும் கல்லூரியிலும் கழகங்களிலும் சிறியார்க்கும் பெரியார்க்கும் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் வழங்கி வருகின்றார்கள். சுமார் பத்தாண்டுகட்கு முன்னர் இவர்கள் வேப்பேரியில் தென்னிந்தியத் தமிழ்க் கல்விச்சங்கம் (South Indian Tamil Academy) என்றதோர் செம்மை சான்ற சங்கத்தினை நிறுவி அதன் தலைவராக அன்றும் இன்றும் என்றும் இருந்து அச்சங்கத்தின் சார்பாக அநேக சங்க நூல்களையும் இலக்கணங்களையும் முறையாகப் பாடம் சொல்லிக்கொண்டு வந்தனர். அவ்விரிவுரைகளைக் கேட்கும் பொருட்டுப் பல இடங்களிலிருந்து வந்து அன்புடன் கேட்டு இன்புற்று அவைகளால் பயன்பெற்றோர் பலருள் யானும் ஒருவன்.

திரு. சற்குணர் அவர்கள் பிறர் தம்மைப் பண்டிதன் என்று கூறவேண்டுமென்ற கருத்தோடு தமிழ் நூல்களைக் கற்றாரில்லை. தமிழ்மீது உள்ள ஆசையாலும் அவாவினாலும் அந்நூல்களைக் கற்று இன்புற்றார்கள். ஆசிரியர் சிறந்த ஆராய்ச்சியாளர். எப்பொழுதும் தமிழ் நூல்களைப் படித்து இன்புறுதலே இவரது பொழுது போக்காகும். ஆகவே இவர் எப்பொழுதும் அத்தத்தில் புத்தகத்தோடு விளங்குவார். இவருக்குத் தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் சிறந்த புலமையுண்டு. ஒரு நல்லா

சிரியரிடம் இருக்கவேண்டிய குணநலங்களெல்லாம் இவரிடத்துப் பொருந்தியுள்ளன. இவர் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்தபோது இவருடைய விரிவுரைகள் மாணவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இவர் தம் உள்ளத்தில் உள்ளதை உள்ளவாறே எவரிடத்தும் அஞ்சாது எடுத்துக்கூறும் ஆற்றலுடையவர். எல் லாம்வல்ல இறைவன் இன்னருளால் இப்புலவர் பெருந்தகை தமிழ்த்தாய்க்கு இன்னும் பல போற் றற்குரிய தொண்டுகளாற்றி என்றும் நன்று வாழ்வாராக.

என் கண்முன் சற்குணர் ::

வ. ஆ. தேவசேநாபதி, M. A.

நான் சிறுவனாயிருந்தபோதே ஸ்ரீமான் ச. த. சற்குணர் அவர்களைப்பற்றி அவரிடம் திருப்பவுற் கலாசாலையில் படித்த என் நெருங்கிய உறவினர் பேசிக் கொள்வதைக் கேட்டிருக்கிறேன். வசை, அடி, வேறு தண்டனை இவற்றில் ஒன்றுமின் றியே அவர் வகுப்பில் அமைதி நிலவுமென்றும் அவர் பாடங்கற்பிக்கும் முறை நேரம்போவதே தெரியாமல் அவ்வளவு உன்னிப்புடன் கவனிக்கச் செய்வதாயிருக்குமென்றும் அவர்கள் பேசிக் கொள்வதுண்டு. அப்பொழுது அப்பள்ளிக்குத் தலைவராயிருந்த ஒரு மேல்நாட்டினரை மாணவர் கள் ஆங்கில இலக்கணத்தில் தமக்கெழும் ஐயங் களை விளக்கச் சொல்லிக் கேட்டால் அவர் 'சற்கு

ணரைப் போய்க் கேளுங்கள்' என்று சொல்வதுண்டு என்றும் கேட்டிருக்கிறேன். 'தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் வல்லவராய் மாணவர்களைத் துன்புறுத்தாமல் அவர்களுக்கே அக்கரை உண்டாகும்படி பாடஞ்சொல்லக்கூடிய தமிழாசிரியர் ஒருவர் இருக்கிறார்' என்று கேட்டதும், அவரிடம் தமிழ் கற்கவேண்டுமென்ற ஆசை எனக்குண்டானதில் வியப்பொன்றுமில்லை. மேலும், என் பாட்டனார், காலஞ்சென்ற தமிழ்ப்பேராசிரியர் தி. பக்தவத்சலம் பிள்ளை, B.A., அவர்களும் தம் நண்பர்களோடு பேசும்போது பலமுறைகளில் திரு. சற்குண ரவர்களைப்பற்றிச் சிறப்பாகப் பேசக் கேட்டிருக்கிறேன். அதுவரையில் நான் அவரைப் பற்றிக் கேட்டதுண்டே தவிரப் பார்த்ததில்லை.

சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில், ஏதோ ஒரு கூட்டத்திற்கு என் பாட்டனுருடன் போனேன். அங்கேதான் முதன்முதலாக நான் அவரைப் பார்த்தேன். திரு. சற்குணரவர்களும் காலஞ்சென்ற கா. நமச்சிவாய முதலியாரும் ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றி விவாதித்தது என் நினைவிற்கு வருகிறது.

1925-ம் வருஷத்தில் ஆருவது வகுப்பில் திருப் பவுற் கலாசாலையில் சேர்ந்தேன். ஒன்பதாவது வகுப்பிற்கும் அதன் மேல் வகுப்பிற்கும்மட்டும் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் பாடஞ் சொல்லுவது வழக்கம். ஆகையால் ஒன்பதாவது வகுப்புக்குப் போகும்வரையில் அவரது தமிழ் வகுப்பில் உட்கார முடியாது என்று நினைத்திருந்தேன். எட்டா

வது வகுப்பில் படிக்கும்போது ஒரு நாள் எங்களுக்குப் பாடஞ் சொல்லும் தமிழ்ப் பண்டிதர் வராததால் திரு. சற்குணர் அவர்கள் வந்தார்கள். அந்த ஒருமணி நேரமாவது அவரிடம் படிக்க, எதிர்பார்த்ததன் முன், சந்தர்ப்பம் வாய்த்தது எனக்குச் சொல்லமுடியாத மகிழ்ச்சியைத் தந்தது. அடுத்த வருஷம் அவரிடம் தமிழ் கற்கும்பேறு கிடைத்தது. பாடங் கற்பிப்பதல்லாமல் கட்டுரைகளிலும் பரீட்சையில் விடை எழுதுவதிலும் சாதாரணமாக மாணவர்களுக்கு உள்ள குற்றங்குறைகளை அவர் அடிக்கடி எடுத்துக்காட்டி நீக்க முயலுவார். கட்டுரை எழுதுவதில் கடினமான சொற்களையும் சொற்றொடர்களையும் புகுத்துவதே உயர்ந்த நல்ல நடை என்று மாணவர்கள் நினைப்பதுண்டு. அப்படியே நானும் செய்தேன். ஒரு சமயத்தில், என் கட்டுரையில் நான் புகுத்தியிருந்த 'உயர்ந்த' நடையைக் கண்டித்து 'ஏன் இம்மாதிரி பருப்பு உடைக்கிறாய்?' என்று அவர் கேட்டது நான் மறக்கக்கூடியதன்று.

அதற்கடுத்த வருஷம் (V Form) நான் தமிழும் தேச சரித்திரமும் விருப்பப் பாடமாக எடுக்கக் கருதியிருந்ததால் வாரத்திற்குப் பத்துமணி நேரமாவது திரு. சற்குணரவர்களிடம் பாடம் படிக்கச் சந்தர்ப்பம் வாய்க்குமென்று மகிழ்ந்திருந்தேன். அப்படி எண்ணியிருந்தபோது அவருக்குக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியர் வேலை கிடைத்தது என்ற செய்தி எனக்கு எட்டியது. அச்

செய்தி எனக்கு மகிழ்ச்சி தரவில்லை. சுயநலத்தால் அவரிடம் மேலிரண்டு வருஷங்களுக்குப் படிக்க முடியாததற்காக நான் வருந்தினேன். ஆனால் அவரிடமே கல்லூரியில் தமிழ் படிக்கலாம் என்ற எண்ணம் சிறிது ஆறுதல் தந்தது.

கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்த அன்றே திருப்பனந்தாள் கலாசாலையில் படித்த மாணவர் சிலர் அவரைப் போய்ப் பார்த்தோம். 'நீங்கள் அனைவரும் பரீட்சையில் தேறி இங்கே வந்தது எனக்குச் சந்தோஷம். நீங்கள் படிப்பில் கருத்துடனிருக்க வேண்டும். ஒழுங்குதவறிய முறைகளில் வகுப்பில் நடக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொள்ளாதீர்கள்' என்று அவர் சொன்னார். மாணவர்கள், அநேக ஆசிரியர்கள் வகுப்பில் கைதட்டுவதும் 'காலரி'யை உதைப்பதும் விதவிதமான ஒலிகள் உண்டாக்குவதும் வழக்கம். ஆனால் திரு. சற்குணரவர்கள் வகுப்பில் எவ்விதமான ஒழுங்கீனமும் இருந்ததே கிடையாது. அவர் வகுப்பில் நுழைந்தவுடனே அமைதியும் கவனிப்பும் மற்றெங்குமில்லாதபடி காணப்படும்: கற்பிக்கும் பொருளுக்கேற்றவாறு அவர் உதாரணங்கள் தருவது, கதைகள் சொல்வது, வேறு நூல்களிலிருந்தும் ஆங்கிலத்திலிருந்தும் ஒத்த கருத்துகளை எடுத்துக்காட்டுவது ஆகிய இவையெல்லாம் அவரிடம் படித்த மாணவர்கள் நன்கு அறிவார்கள். முக்கியமாகப் பெயரைக் கேட்டவுடனே நடுங்கும்படி செய்யும் இலக்கணத்தையும் அவர் எளிதில் உணருமாறு கற்பிப்பார். அவர் தனி

யாக இலக்கண விதிகளைக் கூறாமல் இலக்கியத் துடனே ஆங்காங்கு அவைகளைப் போதித்ததால் பொருள் விளங்கியது மட்டுமின்றி இலக்கணத்தால் ஏற்பட்ட அச்சமும் குறைந்தது.

'எண்பொருளவாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு'

'மனத்தைப் பண்படுத்துவது கல்வி' என்று அவர் அடிக்கடி சொல்வதுண்டு. அதற்கேற்ப அவர் பாடஞ்சொல்லுவது பரீட்சைக்குமட்டுமன் றிப் பொதுவாகத் தெரியவேண்டிய பல விஷயங் களைப் பற்றினதாயுமிருக்கும். 'பரீட்சையில் வெற்றி தானுகவே வரும். நீங்கள் விஷயங்களை ஆராய்ந்தறியும் மனப்பான்மை உடையவர்களாக வேண்டும்' என்று அவர் அடிக்கடி எங்களுக்கு வற்புறுத்துவார். தாம் ஆராய்ந்து அறியும் பொருள் களை அவர் அஞ்சாது எடுத்துரைப்பார்.

'காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே'

என்பதற்கு •எடுத்துக்காட்டாக அவர் இருந்தார். அவர்கூறும் முடிபுகள் பலருக்குப் பிடிக்காதனவா யிருக்கலாம். ஆனுல் அவர் உண்மையைக்காண அரும்பாடுபட்டு அவ்வுண்மை தமக்காவது பிறர்க் காவது உவப்பளிப்பினும் வெறுப்பளிப்பினும் அப் படி வருவதைப்பற்றிக் கவலைகொள்ளாமல் தாம் கண்ட உண்மையைக் கண்டபடியே கூறுவார். இதனுல் அவர் கூறுவனவெல்லாம் சரி என்று நான் சொல்லவில்லை; சொன்னுலும் அப்படிச்

சொன்னதற்காக அவரே அதிகமாக வருத்தப்படு வார். அவருடைய நோக்கம் எந்த விஷயத்தையும் ஒப்புக்கொள்ளுமுன்னர் அதைப்பற்றி ஒவ்வொரு வரும் தாமாகவே ஆராய்ந்து அதன் உண்மையைக் காணவேண்டும் என்பதே. அவர் கூறும் முடிபு கள் சில தவறானவைகளாய் இருக்கலாம். ஆனால் அவர் சொன்னது சுயநலம் பற்றியது அல்லது ஏதோ ஒரு குறித்த தம் விருப்பத்திற்கேற்ற கொள்கை பற்றியது என்று சொல்வது முடியாது.

வாய்ப்பந்தலிட்டு வீரம்பேசிச் செயலில் ஒன் றும் நிறைவேற்றாமலிருக்கும் தன்மை அவரிடம் கிடையாது. அவர் எவருடனும் அன்பாய்ப் பேசு வார்; ஆனால் வீணைகப்பேசமாட்டார்; செய்யவேண் டிய விஷயங்களைச் செய்வாரே தவிர அவற்றைப் பற்றி வாய்ப்பறை சாற்றமாட்டார். கல்வியைப் பணத்திற்காக விற்றல் கூடாது என்ற உறுதியான நோக்கத்துடன் அவர் தம்மை அடைந்தோர்க்கு இலவசமாகவே பாடம் கற்பிப்பது அவருடன் பழகுபவர்க்குத் தெரியும்.

மனிதனுடைய உண்மையான தோற்றத்தை அவன் வெளித்தோற்றம், உடலின் உயரம், பருமன் இவைகளால் அளவிடுதல் படித்தவர்களுள் ளும் வழக்கமாயிருக்கிறது. திரு. சற்குணரவர்க ளுடைய வெளித்தோற்றத்தில் விசேஷமாக ஒன் றும் கூறுவதற்கில்லை. ஏன் ? அவர் அப்படி ஒன் றும் காட்டிக்கொள்வதில்லை.

இத்தகைய பெருந்தகையார் நீடூழி வாழ எல் லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவானாக.

மாணவர்களை நன்கு மதிப்பதில்
இணையிலாப் பெருமையுடையவர் ::

சேலம் கோகுலநாத இந்து மஹாஜன
உயர்தரக்கலாசாலை ஆசிரியர்
அ. சி. கந்தசாமி செட்டி, B. A., L. T.

திருவாளர், ச. த. சற்குணர் அவர்கள் தமிழ்த் தாயின் அருந்தவப் புதல்வர்களில் ஒருவர் என்பது மிகையாகாது. மாணவர்களுக்குத் தமிழ்க் கல்வியை அளிப்பதில் ஆர்வமும் அன்பும் மிக உடையவர். மாணவர்களின் கட்டுரைகளைத் திருத்துவதில் மிக மகிழ்ச்சியுடன் காலத்தைப் போக்குவர். மாணவர்களை நன்கு மதிப்பதில் இணையிலாப் பெருமையுடையரென்பது வகுப்புகளில் மாணவர்கள் காட்டிய அமைதித்தன்மை விளக்கும். மழைத்துளியை விரும்பி நிற்கும் வானம்பாடிப்புட்களைப்போல் மாணவர்களும் தங்கள் தங்கள் வகுப்புகளில் சற்குணமென்னும் வான்பெயலை எதிர்நோக்கி நிற்பர். பசுமரத்தாணி என மாணவர்கள் உள்ளத்தில் பதியுமாறு பாடங்கள் சொல்லுவதில் இணையற்றவர். பெரும்பான்மையும் அவரிடம் பயின்ற மாணவர்கள் பரீட்சையில் தவறுவதென்பது குதிரைக் கொம்பே. இவர் மாணவர்களைத் தம் குழந்தைகளாகவே கருதினர். 'தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தி யிருப்பச் செயல்' என்றாங்குச் செயலாற்றிய பெருமையைச் சற்குணரன்றி மற்றி யாரே எய்தினர்?

எவ்வெவர்க்கும் அவரவர் வேண்டிநின்ற உதவிகள் புரிந்து அறிவிலும் வாழ்விலும் திருவிலும் முன்னேற்றிவைத்த பெரியர் திரு. சற்குணர் ஆவர். அவர்கள் நீடு வாழ்க!

சிறந்த போதனைசக்தி யுடையவர் ::

டாக்டர்
உ. வே. சாமிநாத ஐயரவர்கள்
பேரர்
K. சுப்பிரமணியன், B. A.

ஸ்ரீமான் ஆசிரியர் சற்குணர் அவர்களிடம் படிக்கும் பேறு பெற்றவர்களில் யானும் ஒருவன். இவர்களிடம் 1932-34ல் நான் படித்த காலத்தில் அறிந்துகொண்ட அரிய விஷயங்கள் பல. மாணவர்கள் இன்னவாறு நடந்துகொள்ளவேண்டுமென்பதை இவர்கள் பாடஞ் சொல்லும்பொழுது தக்க உதாரணங்களைக் காட்டி உணர்த்துவார்கள். இவர்களிடம் மாணவர்கள் எல்லோருக்கும் உள்ள அன்பிற்கும் மரியாதைக்கும் காரணம் இவர்களுடைய சிறந்த போதனைசக்தியே யாகும். 'எம்மதமும் சம்மதமே' என்பதை வகுப்பில் இவர்கள் பலமுறை விளக்கியிருக்கிறார்கள்.

பாடஞ் சொல்லுவதே தமக்கு இன்பமென்பதை அடிக்கடி இவர்கள் கூறுவதுண்டு. அதற்கேற்ப இப்பொழுதும் இவர்கள் வீட்டிலே பல மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லி வருகிறார்கள்.

பொதுவாக நாம் ஒருவரைப் பாராட்டும் பொழுது எல்லா நற்குணங்களும் நிரம்பியவ

ரென்று சொல்லுகிறோம். இவர்களுடைய கல்வி யாற்றலைச் சிறியேனாகிய யான் கூறுவது சரியன்று. ஆனால் ஒன்றுமாத்திரம் நான் துணிவாகச் சொல்லு வேன். இவர்கள் சற்குண சம்பன்னரென்பதை இவர்களிடம் படித்த யாரும் கூறப் பின்னிடார். ஆதலால் இவர்களுக்குப் பெயரிட்ட இவர்களுடைய முன்னோர்களின் மதியூகத்தை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

இவர்கள் அரோக திடகாத்திரராக இருந்து தமிழ்த்தொண்டு புரிந்து இன்னும் பல்லாண்டு சிறப்புற்று விளங்கும்படி செய்வித்தருளும்வண் ணம் எல்லாம்வல்ல இறைவனை வழுத்துகின்றேன்.

ஐயாவாக இருந்தவர்
இதயத்துள் குடிபுகுந்தார் ::

'தாருல் இஸ்லாம்' ஆசிரியர் திருமகனார்

நா. பா. அப்துல் ஜப்பார்.

பஞ்சடைந்த நேத்திரங்களுள்ள ஒருவனுக்குப் புண்டரீகக் கண்ணனென்றும், வாடி வதங்கிய முக முடையவனுக்கு சுந்தரவதனன் என்றும் உலகத் தவர் இவ்விருபதாம் நூற்றாண்டிற் பெயரிட் டழைக்க நாம் கண்டும் கேட்டும் இருக்கிறோமே யன்றி, ஒருவனது குணத்துக்கேனும் திறத்துக்கே னும் ஏற்றவண்ணம் எவரும் பெயரிடக் கண்டி லோம். ஆனால், நல்லொழுக்கமும், சத்குணமும் ஒருங்கே பொருந்தியுள்ள தமிழ்த்தாயின் ஆண்மக னொருவர்க்குச் 'சற்குணர்' எனப் பெயர் வைத்த

அப்பெரியோர்களுக்கு நானென்றுங் கடமைப் பட்டுள்ளேன். ஏனெனில், பெயருக்கேற்ற குண மேனும் குணத்துக்கேற்ற பெயரேனுமுடைய மனி தரை இப்புவியில் இக்காலத்திற் காண்பது அருமை யினும் அருமையன்றோ?

எனக்குச் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி யில் இரண்டு முழுவருடங்களாகவே அறிமுகமான பெரியார் சற்குணர் ஐயா அவர்களை முதன் முத லாக 1935ஆம் ஜூலைமீ 1உ திங்கட்கிழமை யன்று கண்டேன். ஆனால், எனக்கு அவர்தாம் பண்டிதரென்பது தெரியாது. மறுநாள் செவ்வா யன்று பகல் பன்னிரண்டு மணிக்கு எங்கள் வகுப்பி னுள் அவர் வந்தார். வந்தவர் புறநானூற்றின் பாட் டொன்ருகிய 'பல்சான்றீரே பல்சான்றீரே' என் பதனை எடுத்து மிக அழகாகப் பொருள் கூறி, 'கயன் முள்ளன்ன நரை முதிர் திரைகவுள்' என் பதற்குச் சிறப்பான அர்த்தத்தைக் கூறினர். அதே வரி நமது ஐயாவுக்கென்றே நரிவெரூஉத் தலையார் பாடிச் சென்றனர்போலும் என் றெண்ணி, நான் வாளா இருந்துவிட்டேன்; எனி லும், என் வதனம் தானகவே புன்முறுவல் பூத் ததை எவரும் கவனிக்க வில்லை. அதே சமயத்தில் என்னுள்ளத்துள் வெண்மையான மீசைகள் நீண்டு வளர்க்கப்பட்டும், மோவாய்க்கட்டையும் கன்னமும் மழுங்கச் சிரைக்கப்பட்டும், தலைமீது வெண் தலைப் பாகை அகன்ற நெற்றியின் மேலெல்லையில் ஒழுங் காகப் பொருத்தப்பட்டும், கழுத்து மூடிய 'ஷட்

கோட்' அணியப்பெற்றும், அன்பு சுரக்கும் குளிர்ந்த பார்வை நிறைந்துள்ள அழகிய கண்கள் இயற்கையிலேயே படைக்கப் பெற்றுமுள்ள ஒரு தெய்விகப் பெரியாரைப் படம் பிடித்துக்கொண் டேன். அவ்வுருவம் என்னின்னுயிருள்ளளவும் எக் காரணம் பற்றியும் என்னல் மறக்க முடியாத தாகவே அமைந்துவிட்டதென்று நான் மார்பு தட்டிக் கூறுவேன்.

நாட்கள் செல்லச் செல்ல என் ஐயாவாக இருந்த அவர் எனது தந்தையினும் அன்புமிக்க நற்குணக் குன்ருய் என் இதயத்துட் குடிபுகுந்தார். ஏனெனில், மகனைக் காண மகிழ்ச்சி யுறுபவன் தந்தை. அவனுங்கூடச் சமயத்தில் எதிர்பாராத தீங்கை விளைப்பான். ஆனல், இத்தந்தையோ எக் காரணம் முன்னிட்டும் கோபம் வரப்பெருத, மாணக்கர்களிடம் மட்டற்ற அன்புகாட்டும் மாசிலா மணியாய் எனக்குக் காட்சியளித்தார். பார்த்தால் பூனையும், பாய்ந்தால் புலியுமாய் இருந்துவந்த அநேக உபாத்தியாயர்களிடம் பழகிய நான் இப் பெரியாரை நெடுநாள்மட்டும் 'புலி' என்றே கிலி கொண்டிருந்தேன். ஆனல், அது தமிழ்ப் புலியா யிருந்ததேயன்றி, கிலி உண்டுபண்ணும் புலியாக இருக்க ஒருபோதும்—எந்த வினடியிலும்—நான் கண்டிலேன், கண்டிலேன்!

நந்தமிழ் நாட்டில் தமிழ்ப் பெரியோர்கள் மிகக் குறைவாயுளர். அதிலும் ஆசிரியராக உள்ளோர் இன்னும் குறைவாயுளர். மேலும் நற்குணமும்

மாணாக்கர்க்குப் போதிக்கும் முறையும் தெரிந்தவர் முயற்கொம்பினும் அருமை! ஆனால், இத் தமிழ்ப் பண்டிதப் பேராசிரியரவர்கள் மாணாக்கர்களாய எங்களுக்குத் தமிழ் மட்டுமோ கற்பித்தனர்? அன்று; அன்று. சர்வகலாசாலைக்கல்வி தற்போது ஓரரைக்காசுக்கும் உதவாததென்பதை மிக நன்கு உணர்ந்த ஆசிரியர், கலாசாலை வாசத்துக்குப் பின்பு உலகத்தில் மனிதர்களாகிய நாம் என்னென்ன செய்யவேண்டுமெனப் பெரிதும் உபதேசித்தார். பிள்ளையும் பேதையும் விளக்கிக் கொண்டு பிறர்க்குச் சொல்லுமளவுக்குப் பாடம் கற்பித்தார். தமது அறிவுக் களஞ்சியத்தினின்றும் அனுபவ முறைகளிலிருந்தும் எண்ணத்தொலையா நீதிகளை வெளியிட்டார். ஹிந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் என்ற பாகுபாடின்றி, மிகவும் ஒன்றுபட்ட மனத்துடனே நீதியென்னும் முறையினின்று அணுவளவும் பிறழாது மிக அழகிய விதத்தில் எங்கட்குக் கல்வி போதித்தார். 'இவன் நல்லவன்; இவன் கெட்டவன்' என்று எண்ணங்கொண்டு முதல்வனுக்கு ஒருவிதமாகவும் பின்னவனுக்கு வேறு விதமாகவும் எப்போதும் எக்காரணம் பற்றியும் நடந்தது கிடையாது. ஆங்கிலத்திற் கூறுவதே போல், கடைசி மாணவனும் ஒரு விஷயத்தை ஒழுங்காக உணர்ந்துகொள்ளுமட்டும் அவர் அடுத்த பாடத்தை ஆரம்பியார். ஒழுங்காக ஆளும் அரசனது செங்கோலைப்போல் மாணவராகிய எங்களை நடத்தும் விதத்தைச் செங்கோலாகக் கொண்டு

அவர் நீதிபரிபாலனம் புரிந்தார். அவருக்குக் கோபம் வருவதைப் பார்க்கவேண்டுமெனக் கங்கணங் கொண்டிருந்த என்னை அவர் ஏமாற்றிவிட்டார். பத்துமாதம் சுமந்து பெற்ற தாயினும் அன்புடையோராகிய அவரிடம் தமிழ் மட்டுமோ நாங்கள் கற்றோம்? தமிழ் இலக்கிய வகுப்பென்றவுடனே எங்களெல்லாருடைய மனமும் சிந்தாமணியைப் பெற்ற அந்தகனேபோல் ஆனந்தமடையும். நாங்கள் தெரியாதவற்றைத் தெரிந்துகொள்ள முற்படுவோம். அவ்வாறு ஆவலுடன் வரும் எங்களை மிகவும் கனிவுடன் நனிநோக்கி, அழகான முறையில் பலப்பல மேற்கோள்களுடனும், சிலச்சில கதைகளுடனும் நாங்கள் என்றும் மறக்க முடியாத வண்ணம் பொருளை விளக்கி வைப்பார். உதாரணமாக, மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழின் தாலப் பருவத்திலுள்ள 'தொடுதோலடிப் பொலன்சூட்டன்னம்' என்னும் தொடரின் பொருளையும் நயத்தையும் நான் என்றுமே மறக்க முடியாதவாறு விளக்கியுள்ளார்.

குளிர்ந்த பார்வையும், அழகிய கண்களும், நயமான சொற்களும், விருப்பமான விளக்கங்களும், செழிப்பான பேச்சுக்களும், அன்பு சுரப்பதான வதனமும், வெள்ளையான மனமும் உள்ள தமிழ் ஆசிரியர் சற்குணர் ஒருவரென்றே நான் திடமாகக் கூறுவேன். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் மிக்குள்ள இக்காலையில், வெண்மனத்துடன் இருந்துவரும் அவரைக் காண

பது எவ்வளவு விருப்பமானதாயிருக்கும் என்று எண்ணுகின்றீர்கள்? தமிழ்ப் பாஷாபிமானமும் தமிழ்நாட்டபிமானமும் மாணவர்மாட்டுள்ள அன்புமே அவரது புகழுக்குக் காரணமாவன. ஹிந்துக்கள் நம்புவதேபோன்ற ஸரஸ்வதி என்னும் கல்விக் கலைமகள் ஒருத்தி வசிக்கிறாளென்றால், அது சற்குணரின் நாவில்தான் என்று நிச்சயமாய் நம்பலாம். கசடற்ற குணமும் கபடமற்ற சிந்தையும் மிக்க அவரை மறப்பவர் சிசு ஹத்தியினும், பிரம்ம ஹத்தியினும் தாய்க் கொலையினும் பெரிய பாபத்தைச் செய்தவராவர்.

சுருங்கக் கூறுமளவில், அவரிடம் படித்த மாணக்கர்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள் தமிழ்க்கல்வி மிக்கவர்களாகவும் நற்குணம் நிரம்பியவர்களாகவும் நீதிமுறை யறிந்தவர்களாகவும் கூட்டத்திலும் தனிமையிலும் இன்ன இன்ன விதங்களாக நடக்கவேண்டுமென்று நன்குணர்ந்தவர்களாகவும் காணப்படுவரென்பது சரதம். அவரிடம் பயின்ற ஒவ்வொரு மாணவரும் பெரும்பாலும் அவருடைய அம்சம் மிக்கவராகவே நின்றிலங்குவர். மாணவர்களாகிய எங்கட்கு அவர் இன்னும் என்ன நலன்கள் செய்யவேண்டும்?

பவணந்தி முனிவர் தமது நூலில் ஆசிரியராவோர் இலக்கணத்திற் கூறியுள்ள அவ்வரிகளை நிரூபித்தற்கென்றே நந்தண்டமிழ்நாடு அப்பெரியாரை ஈன்றெடுத்ததுபோலும்! ஒருவர் கல்வி கற்றல் கஷ்டமன்று; ஆனால் அவர் தாம் கற்ற கல்வி

யைப் பிறர்க்கறிவிப்பதும் நற்குண நற்செய்கைகளைப் பெற்றுக்கொள்வதும் முடியாதவை. அவ்வாறு செய்துமுடிக்கும் பெரியார்களுள் தலைசிறந்தவராய நந்தமிழ் ஐயாவைப் பார்த்து எவர்தாம் குதூகலமடையாதிருக்க முடியும்?

தமது அறுபதாம் ஆண்டைக் கடந்துவிட்ட ஐயா அவர்கள் நீடுழி வாழவேண்டும் என்று அவ்வெல்லாம் வல்ல அல்லாஹுத்த ஆலாவிடம் இறைஞ்சுகின்றேன். சற்குணர் நீடுழி வாழ்க!

மானிடக் கற்பகத்தரு ::

து. ம. இராஜா கந்தசாமி

இந்நில உலகின்கண் தோன்றும் பல பிறவிகளுள்ளும் மானிடப்பிறவியே தலைசிறந்ததாகும். மக்களாய்ப் பிறந்தும் உலகில் நிலைத்து நிற்பது வெகு சொற்பகாலம். அச்சொற்ப ஆயுட்காலத்திலும் மக்கள் நிலையற்ற பொருள்களைத் தேடித் திரிந்தபின் நிற்கும் நாட்கள் வெகு சில. அச்சின்னாட்களில் ஒருவன், காலமாறுபாடுகளாலும் இடமாறுபாடுகளாலும் குன்றுதும் அழியாதும் நிற்கும் கல்வியாகிய கருந்தனத்தைத் தேடுவதவசியம். கல்வியை ஒருவர் தாம் கற்பதைவிடப் பிறருக்குக் கற்பிப்பது மிகவும் மேம்பட்ட தொழில். கல்வியூட்டுவோருக்கு இம்மையில்மட்டுமேயன்றி மறுமையிலும் நலமுண்டாகும் என்பது பேரறிஞர் கொள்கை. கல்விச் செல்வத்தைக் கைம்மாறு கருதாது நல்கும் பெரியோர் இவ்வுலகில் கிடைப்பது அரிதினும் அரிது. எனினும் என் சொற்ப அனுபவ

காலத்தில் தெய்வாதீனமாகச் சற்குணப் பெரியார் எனக்குக் கிடைத்தது யான் செய்த தவத்தின் பயனேயாகும்.

எம்மாசிரியர் சற்குணப் பெருந்தகையாரின் பெருங்குணங்களை எடுத்துக்கூறுதல் என் போன்ற சிறுவர்களுக்கு இயலாததொன்றாகும். மேலும் அவரது கல்விப் பெருக்கை விளக்குவதற்கும் யான் அருகனல்லன். கருதுவன நல்கும் கற்பகத் தரு என யான் கேட்டுளேனாயினும் அத்தருவைக் கண்டிலன். ஆயினும் என் புண்ணியவசத்தால் சற்குணமாகிய மானிடக் கற்பகத் தருவின் நிழலில் நிற்கும் பாக்கியம் பெற்றேன். நினைத்த பல செம்பொருள்களைப் பெற்று மனமகிழ்கிறேன். எம்மாசிரியர், தம்மிடம் கல்வியாகிய தனத்தைத் தேடிச்செல்லும் என்போன்ற எளியோருக்கும் ஆங்கிலம், திராவிடம், சமஸ்கிருதம், முதலியனவே யல்லாமல் இன்னும் பல பொக்கிஷங்களினின்றும் மணியையும் முத்தையும் பொன்னையும் வாரிக்கொடுக்க யான் பெற்றுப் பேருவகையுறுகின்றேன். பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து கண்ட பல அரிய விஷயங்களை எமக்கு எளிதில் புலப்படும் வண்ணம் ஊட்டும் வள்ளலாவர் சற்குணப் பெரியார். அவர், தம் நலங்கருதிப் பல நூல்கள் செய்யாவிடினும் உயிருடன் விளங்கும் பல மாணவராகிய பெறல் அரும் நூல்களைச் செய்துள்ளார். எம்மாசிரியரிடம் சென்று யாம் கழித்த நேரங்களில் ஒரு நிமிடமேனும் அவமே கழிந்ததில்லை.

காட்சிக்கெளியரான சற்குணப் பெருந்தகை யார் கல்வி கற்பிக்கும் முறை மிகவும் மேன்மையா னது. தம்மிடம் கல்வி கற்போர் எத்தகையரா யினும் அவரவருக்கு ஏற்றவாறு எளிதில் விளங்கும் வண்ணம் பல சான்றுகளாலும் மேற்கோள்களா லும் விளக்கும் வன்மையுடையவர் எம்மாசிரியர். அவர் முதன்முதலில் ஆங்கில ஆசிரியராயிருந்து பின் தமக்குத் தமிழினிடமிருந்த பேரார்வத்தால் தமிழ்மொழி ஊட்டப்புகுந்தார். அவர் தமிழாசிரி யரானபின் தமிழை வெறுத்திருந்த கணக்கற்ற மாணவருக்கும் அவர், 'தமிழ் இழிதகவுடைத்தன்று, கற்கக்கற்க ஞானமும் இன்பமும் ஊட்டும் தகை யுடையது' என்ற எண்ணத்தைப்புகுத்தி அம்மாண வர்கள் தமிழைக் கற்குமாறு செய்தார்.

சற்குணப் பெரியார் சொற்பொழிவாற்றுங் காலத்தும் தாம் சொல்ல எடுத்துக்கொண்ட விஷ யத்தைத் தெளிவான இனிய நடையில் யாவரும் பயன் அடையும்படி செப்புவர். முன்னர் பலர் பன்முறை கூறியுள்ள விஷயத்தை இவருடைய உபந்நியாசத்தில் யான் கேட்டதேயில்லை. யாது சொல்லினும் அவ்விஷயம் புதுமையாகவே இருக் கும். ஒருகால் சற்குணப் பெரியார் 'திருவள்ளுவர் உலகினருக்கு அளித்த செய்தி என்ற விஷயத்தைக் குறித்து ஓரிடத்தில் விளக்கமாக உபந்நியசித்த காலத்தில், அவர் உபந்நியாசத்தைக் கேட்டிருந்த அண்ணாமலைப் பல்கலைகழகத் தமிழிலக்கண ஆசிரி யர் கந்தசுவாமியார் அவர்கள், அப்பிரசங்கத்தை

மிகவும் பாராட்டிப் பேசினர். எம்மாசிரியரது போதனுமுறையின் மேன்மையை அவர் செய்துள்ள, 'இலக்கண ஆக்கம் ஒன்றே புலப்படுத்தும். பட்டங்களாலும் பணத்தாலும் புகழ் உண்டாகாது, உண்மை உழைப்பால் உண்டாவதே பெரும்புகழ்' என்று தம் வாழ்வில் நடத்திக் காட்டிப் பொதுஜன நன்மைக்காகத் தமது சிறந்த ஆயுட்காலம் முழுதும் தமிழ் மொழிக்காகத் தியாகஞ் செய்துள்ள எம்மாசிரியர் நீடூழிவாழ எல்லாம் வல்ல ஆண்டவன் திருவடியை இறைஞ்சுகின்றேன்.

மாணவர்களின் பிற்கால வாழ்விற்கே பாடங் கற்பிப்பவர் ::

தா. சின்னக்கண் நாடார்

உயர்திரு. ச. த. சற்குணரவர்களிடத்திற் கல்வி பயின்ற கிறிஸ்தவக் கலாசாலை மாணவர்களுள் யான் ஒருவனவன். அவர்கள் எங்களுக்குக் கலித்தொகை என்னும் பாடத்தைக் கற்பித்த மணி நேரங்கள் எவ்வாறு கழிந்தன என்று யானும் மற்றும் மாணவ நண்பர்களும் அறிந்திலம். அவர் பரீட்சைக்கென்று பாடம் கற்பிக்காது மாணவர்களின் பிற்கால வாழ்விற்கென்றே கற்பிப்பர். கலித்தொகை படிப்பிக்கப் புகுமுன் எங்கள் கலாசாலைத் தலைமையாசிரியரான டாக்டர் ஹாக், அவர்களைக் கூப்பிட்டு 'நீவிர் கலித்தொகையை மாணவர்களுக்குக் கற்பிக்கும் விதத்தில் அவர்கள் அதை வெறுத்தல்வேண்டும்' என்று கூறினராம். ஆனல் ஆசிரியரவர்கள் எங்களுக்குக் கற்பித்ததிலிருந்து

நாங்கள் எங்கள் பிற்கால வாழ்க்கைக்குதவும் அநேக அரிய விஷயங்களைக் கற்றுக்கொண்டோம்.

அவர் எக்குற்றம் யாரிடத்துக் காண்பினும் அதை அவர்கள் முன்னிலையிலேயே எடுத்துக் காட்டிக் கண்டிப்பர். கடந்த வருடத்தில் திரிதண்டத்தைப்பற்றி வகுப்பில் கூறச் சமயமில்லாததால் அவர்கள் திரு. கோபால ஐயரவர்களிடம் சென்று 'எனக்குப் பிள்ளைகளுக்குத் திரிதண்டத்தைப்பற்றிக் கூறச் சமயமில்லாததால் அடுத்த வருடம் நீங்கள் இப்பிள்ளைகளுக்குத் திரிதண்டத்தைப்பற்றிக் கூறல்வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டனர். இதிலிருந்து அவர் மாணவர்கள்பால் வைத்துள்ள அன்பும் அவசியமானவற்றை விடாது கற்பிக்கும் இயல்பும் நன்கு விளங்குகின்றன. மாணவர் யாராவது அவரிடத்துச் சங்கடத்தோடு சென்றால்,

'நினையல்நீ நம்பி! என்று
நெடுங்கணீர் துடைத்து நீவும்'

ஆற்றலமைந்தவர். எவரிடத்து எக்காரியத்தினிமித்தம் செல்லினும் யாது பேசினும் தம்மைத் தாழ்த்திப் பேசும் இழிவானகுணம் அவரிடத்துக் கிடையவே கிடையாது. எங்கு யாது பேசினும் எளிய நடையிற் பேசிக் கேட்பவர்களை இன்புறச் செய்யும் இயல்பினர். எமது பேராசிரியரான நற்குணம் வாய்ந்த சற்குணப் பெரியாருக்கு எல்லாம் வல்ல இறைவன் என்றும் சுகவாழ்வை அருளுமாறு அவன் திருவடிகளைப் பிரார்த்திக்கிறேன்.

என் தமிழ் ஆசிரியர் ::

B. A. வகுப்பு மாணவர்;
K. இராமசுவாமி.

நான் கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்தபோது ஸ்ரீமான் சற்குணர் அவர்களே தலைமைத் தமிழ்ப் பண்டிதராய் இருந்தார்கள். எனக்குத் தமிழ் ஆர்வமும் அன்பும் உண்டாகும்படி செய்த ஆசிரியர் இவரே ஆவர். இவர் புகழ் எம்மனோர் போற்றப் பெருஞ் சிறுமையுடைத்தன்று. நான் விசேஷமாகப் படித்தவன் அல்லன். இம்மலருக்கு எழுதும் யோக்கியதையும் சக்தியும் எனக்கில்லை. ஆயினும் நற்குணம் வாய்ந்த சற்குணப்பெரியாரிடம் தமிழ்க் கல்வி கற்ற மாணவன் என்ற முறையில் என் அறிவிற்கு எட்டிய சிலவற்றை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஸ்ரீமான் சற்குணர் மதித்தற்குரிய அரிய குணங்கள் பல உடையவர். இவரை நயப்பார் பலர்; வெறுப்பார் சிலர். இப்பெரியாருடைய இனிய உரையும் பாடஞ் சொல்லும் திறமையும் நான் கல்லூரி சேர்ந்து மூன்று மாதம் ஆவதற்குள்ளேயே என்னை இவரிடத்தில் இழுத்துவிட்டன. நான் அன்றுமுதல் இவரைத் தெய்வமாகப் போற்றி வருகின்றேன்.

இவருடைய வகுப்பு மிக ருசிகரமாக இருக்கும். வகுப்பு என்பதையே நான் மறந்து மகிழ்ந்திருப்பேன். இவர்கள் பேச ஆரம்பித்தால் என்ன பேசப்போகிறார்கள், எவ்வளவுநேரம் பேசப்போ

கிறார்கள் என்று அளவிடுதல் ஒருவராலும்முடியாது. ஆனால் இவர் பேசுவது கேட்கத்தக்க அரிய கருத்துக்களுடன் விளங்கும். வெட்டிப் பேச்சு, கேலிப் பேச்சு முதலியன பேசுவது என்பது இவரிடம் கிடையாது. இவர் மெதுவாகவும் எளிய நடையில் எல்லோருக்கும் விளங்கும்படியாகவும் பாடம் சொல்லுவார். இவர் செந்தமிழ்ச் சொற்களையும் கடின பதங்களையும் உபயோகித்ததை நான் கேட்டதில்லை. பாடங் கேட்கும் மாணவர்களின் கஷ்டங்களை அறிந்து பாடம் சொல்லுவதுதான் இவரது வழக்கம். இலக்கணத்தை இலக்கணமாகப் போதித்து மாணவரிடம் வெறுப்பு உண்டாக்காமல் அதை மிகத் தெளிவாக ஒரு கதைபோல் சொல்லுவார். ஒரு நூலைப் படிக்கும்போது அதன் சம்பந்தமாகப் பல மொழிகளில் வந்துள்ள அரிய கருத்துக்களை எங்களுக்குப் போதிப்பார். இவர் வகுப்பில் சத்தம் என்பதே இருக்காது. சிலர் சில சமயம் தொந்தரவு கொடுக்க முயன்றால் அவரிடம் கடிந்து பேசவும்மாட்டார். மேல் அதிகாரியிடம் தெரிவிக்கவும்மாட்டார். ஒரே வார்த்தையில் அவரை அடக்கி விடுவார். 'இங்கு எல்லோரும் மார்ச்சுக்குப் போகிறார்கள். நீ மட்டும் செப்டம்பருக்குப் போகப்போகிறாயா' என்று அவர் என் நண்பன் ஒருவனைப் பார்த்துச் சொல்லியதை என்னால் இன்னும் மறக்க முடியவில்லை. தமிழாசிரியர் பதவியில் அவருடன் போட்டியிடுவதற்கு வேறு ஆசிரியர்கள் இல்லை என்றே கூறலாம். கோணக் கட்சியும் சாதி வேற்றுமையும்

இவரிடம் கிடையா. இவர் உள்ளதை உள்ளவாறு உரைக்க ஒரு நாளும் பயப்படார். தம்மதமாயினும் எம்மதமாயினும் குற்றங்காணில் அதை எடுத்துக் காட்ட அஞ்சார். வடமொழிக்கும் தமிழுக்கு மிடையே பாஷைப்போட்டி ஏற்படுத்தும் தீய முயற்சிகளைச் சகியார். இவருக்குச் சங்க காலத்துப் பாட்டுக்களைப் பற்றியும் கவிகளைப் பற்றியும் வேறு ஒருவருக்கும் இல்லாத சில அரிய அபிப்பிராயங்கள் உண்டு. அவைகள் மிகவும் போற்றத்தக்கன.

இவர்கள் எங்கள் சங்கத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய கூட்டங்கள் பல. இவருடைய பேச்சில் அனுபவம் நிறைந்திருக்கும். சாதுரியமான சொற்கள் முத்துப்போல் உதிர்ந்துகொண்டே யிருக்கும். இவர் நடை எளியது. கருத்தை விளக்குவது முக்கியமே அல்லாது சொற்களை அடுக்குவதில் பயனில்லை என்பது இவர் கொள்கை.

கல்லூரிக்கு வெளியிலும் இவர் அன்பைக் காணலாம். இவருடைய கம்பீர முகத் தோற்றமும் புன்முறுவலும் அன்பும் நம்மை இவர் வசமாக்கி விடும். ஏதாவது கவலையோடு செல்வோமாகில் இவர் எங்களைத் தேற்றுவார்.

இத்தகைய பெரிய அறிஞரிடத்தில் பெரும் புண்ணியப் பயனாலே யான் தமிழ் கற்றேன் என்று நினைக்கின்றேன். இவருக்கு நீண்ட ஆயுளையும் தேகாரோக்கியத்தையும் வழங்கும்படி எல்லாம் வல்ல இறைவனை வணங்குகின்றேன்.

டிராம் வண்டியில் துருவ நட்சத்திரம் ::

ஸ்ரீமதி. கோ. கோ,
மத்துங்கா, பம்பாய்.

ஒருநாள் காலை சுமார் பத்துமணியிருக்கும். மைலாப்பூரிலிருந்து ஜார்ஜ் டவுனுக்குப் போகும் டிராம் வண்டியில் வந்துகொண்டிருந்தேன். இராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கருகில் டிராம் வண்டி நின்றது. சிலர் வண்டியிலிருந்து இறங்கினர்; பலர் வண்டியில் ஏறினர். சுமார் 5½-அடி உயரமுள்ள ஒரு பெரியார் வண்டியில் ஏறினர். அவர் எல்லோருடைய மனத்தையும் கவர்ந்தார். நானும் அவரைப் பார்த்தேன். தலையைச் சரிகைக்கட்டுத் தலைப்பாகை அழகு செய்தது. அவருடைய அகன்ற நெற்றி ஆழ்ந்த அறிவைத் தெரிவித்தது. பெரிய கண்கள்—அவருக்கே அமைந்த கண்கள்—மற்றையோர் யாவரையும் அவர்பால் மரியாதையும் வணக்கமும் பக்தியும் காட்டுமாறு பணித்தன. ஆ! அக்கண்களின் வன்மைதான் என்ன! அவை நம் மனத்தினுள் உள்ளதை உள்ளவாறே அறிந்துகொள்வனபோல் தோன்றின. உள்ளதொன்றையும் அவரிடத்து மறைத்துப் பேசமுடியாது என்ற எண்ணமே பேசுபவர்களுக்கு உண்டாகும். எள்ளும் அரிசியும் கலந்ததுபோல் சற்றே கறுத்தும் வெளுத்துமிருக்கும் நரைத்த மீசை, அம்மை வடுக்கள் அலங்கரிக்கும் அகன்ற முகம், பெரிய தலையினைத் தாங்கி நிற்கும் சற்றுச்சாய்ந்த கழுத்து, இளமைப் பருவத்தில் நல்ல தேகாப்பியாசம் செய்தமையைத் தெரிவிக்கும் திண்

ணிய தோள்கள், பிஸ்கட் நிறமுடைய மூடிய சொக் காயினல் மறைக்கப்பட்டாலும் தாம் இருப்பதைத் தெரிவிக்கும் தசைநார்க்கட்டுகள் ஆகிய இவைகள் எல்லாம் சேர்ந்து சற்றேறக்குறைய 58-வயது நிறைந்த பெரியாரின் உருவப் படத்தை என் மனத்தில் தீட்டிவிட்டன. அவர் மூலைக் கச்சமாக அணிந்திருந்த மாசற்ற மல்வேஷ்டி வண்ணனின் வெள்ளாவி மணத்தை வீசாமல் 'ஸன்லைட்' சோப் பின் துல்லிய மணத்தையே பரப்பியது. காலில் லகான் செருப்பு அணிந்திருந்தார். கக்கத்தில் மான் மார்க்குக் குடை இருந்தது. தமிழ்ப் புத்தகம் ஒன்று ஹஸ்த பூஷணமாய் விளங்கியது.

இப்படிப்பட்ட பெரியாரைக் கண்டதும் முன் பின் அறிமுகமில்லாதவர்களும் தம் ஆசனத்தை விட்டு எழுந்து தாம் நின்றுகொண்டு அவரை அமரு மாறு வேண்டினர். ஆனல் அவர் 'வேண்டாம், வேண்டாம் நீங்கள் இருங்கள்' என்று கையமர்த்தி விட்டுத் தாம் நின்றுகொண்டு வந்தார். சுமார் முப்பது வயதுள்ள வாலிபன் ஒருவன் அவருக்கு முன்னே வந்து சலாமிட்டான். அவர் தமது இரு கைகளாலும் சலாமிட்டார். 'நான் தங்களைப்பற் றிக் கேள்விப்பட்டுளேன். நேரிலும் பார்த்திருக்கி றேன். ஆனல் தங்களுடன் பேசியதுமட்டுமில்லை. இங்கே அமருங்கள்' என்று தான் அமர்ந்திருந்த ஆசனத்தைக்காட்டி வேண்டினன். அவர் அவன் வேண்டுகோளுக்கிணங்கி அமர்ந்தார்.

இவ்வாறு ஒருமுறையேனும் பேசியறியாதவர்களாலும் மதிக்கப்படும் பான்மை வாய்ந்த அப்பெரியார், அவ்வண்டியில் வந்து ஏறிய சில ஸ்திரீகளையும் குழந்தைகளையும் உற்று நோக்கினர். என்ன இப்படிக்கூர்ந்து பார்க்கிறாரே என்று நினைத்தேன். அப்பார்வையில் எவ்விதத் தீய எண்ணமும் தோன்றவில்லை. கருணை ததும்பும் நோக்கமே காணப்பட்டது. உலகத்தைப் பாடபுத்தகமாகக் கொண்டு அதனைப் படிப்பவர்போல் தோன்றினர். எவருடனும் பேசவில்லை. இந்த அபூர்வ 'ஊமை மனிதர்' யாரென்று அறிய ஆவல் கொண்டேன். இதற்குள் கிறித்தவக் கல்லூரியும் நெருங்கியது. அவசரப்படாமலும் மற்றவரைநெருக்கித்தள்ளாமலும் சாவதானமாகஇறங்கிக்கிறித்தவக் கல்லூரிக்குள் நுழைந்தார்.

என் இல்லத்தையடைந்ததும் இவ்வாறு சென்ற பெரியார் யார் என வினவியபொழுது என் தகப்பனர், 'அவர்தாம் நற்குணக் குன்றும் சற்குணப் பெரியார், கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியவராய் விளங்குபவர்' என்று கூறினர். இதற்குப் பிறகும் பன்முறை கண்டுளேன். அப்பெரியாரை அன்று கண்ட ஆடையிலும் அறங்கிடந்த நெஞ்சிலும் அருளொழுகு கண்ணிலும் அணுவளவும் மாற்றமே இல்லை.

என் அருமைத் தந்தையர் இவரது சீரிய குணங்களைப்பற்றிப் பலகாலும் கூறக்கேட்ட யான் இத்தமிழ்த் துருவ நக்ஷத்திரம் ஏனையோர்களுக்கு வழிகாட்டியாக என்றென்றும் நின்று நிலவுமாறு இறைவனடிகளை இறைஞ்சுகின்றேன்.

முன்மாதிரியான நல்லாசிரியர் ::

R. சத்தியவேலுப் பிள்ளை,
உடற்பயிற்சியாசிரியர்.

என் ஆசிரியப் பெருந்தகையார் உடல் வன்மையிலும் உளப்பண்பிலும் உண்மைக் கடவுட் பக்தியிலும் தலைசிறந்து விளங்கும் முன் மாதிரியான நல்லாசிரியர். அவர் நீடூழி வாழ்க.

தமிழ்ப் பேராசிரியர்

ச. த. சற்குணர், B. A.

ஆசிரியர்
மயிலை. சீனி. வேங்கடசாமி.

இப்பெரியாரோடு பல்லாண்டுகளாக நெருங்கிப் பழகும் பேறு எனக்குக் கிடைக்காமற் போயினும், நான் இவருடன் பழகிய சில்லாண்டுகளில் இவரிடத்தே பல சிறந்த குணங்களைக் கண்டுள்ளேன். ஆங்கிலம், தமிழ் முதலிய மொழிகளின் பல துறைகளிலும் பெரும் புலமை பெற்றிருந்ததன்றி, அறிவு நலமும் குண நலமும் இவர் கொண்டிருந்ததை நன்கறிந்தேன்.

சங்க இலக்கண இலக்கியங்கள் பாடஞ்சொல்லுவதில் இவர் தேர்ந்தவர் என்பதனை எல்லோரும் அறிவர். பிற்காலத் தமிழ் நூல்களையும் ஆங்கில இலக்கண இலக்கியங்களையும் கற்பிப்பதிலும் இவர் அவ்வாறே சிறந்தவர் என்பதனை இவர் மாணக்கர் நன்கு அறிவர்.

இன்ன சாதியார், இன்ன சமயத்தார், இன்ன நாட்டார் என்னும் வேறுபாடின்றி எல்லாரையும்

ஒப்ப மதிக்கும் பெருங்குணமே இவரிடத்தில் காணப்படும் சிறந்த குணங்களில் தலை சிறந்தது. அதிகாரிகளாயினும் பெரியோர்களாயினும் தவறு செய்வார்களாயின், மிக்க அன்புடனும் வணக்கத்துடனும், அவர்கள் செய்வது தவறு என்று அவர்களுக்கு நேரில் அஞ்சாமல் கூறுவதே இவரது மற்றொரு சிறந்த குணமாகும்.

நாம் பல துறைகளிலும் இன்னும் முன்னேற்றம் அடையும் பொருட்டே, பல்லாண்டுகளாக யாதொரு கைம்மாறுமின்றி, இப்பெரியார் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, புறநானூறு, கலித்தொகை முதலிய நூல்களைக் கற்பித்து வருகிறார்.

இவர் அவ்வப்போது குறித்து வைத்துள்ள ஆராய்ச்சிகளையும் முடிபுகளையும் இவரிடம் கேட்டறிந்த மாணவரில் சிலர், அவற்றை ஆசிரியர் கண்ட முடிபென்றும் ஆராய்ச்சி யென்றும் கூறாமல் தாம் ஆராய்ந்து கண்ட முடிபென்றும் ஆராய்ச்சி யென்றும் பேசியும் எழுதியும் வருவதுண்டு. இதைப்பற்றி இவரிடம் நான் ஒரு சமயம் பேசினபோது, 'அதைப்பற்றி என்ன? எப்படியாவது யார்மூலமாகவாவது கருத்துப் பரவவேண்டியது தானே' என்று சொன்னார். இஃது அவரது மனப்பான்மையையும், தாம் உலகத்தாரால் மதிக்கப்படவேண்டும் என்னும் ஆசையின்மையையும் காட்டுகிறது.

இவர் பாடம் சொல்லுவதில் இன்னொரு சிறந்த முறை என்னவென்றால், தமது மாணவர்க்குத் தாம் படித்ததைப் பகுத்தறிந்து உண்மை காணும் வழக்கத்தை உண்டாக்குவதுதான். புத்தகத்தில் படித்தவைகளை யெல்லாம் அப்படியே கண்மூடித்தனமாக நம்பக் கூடாதென்றும், அவற்றைச் சொந்த அறிவு கொண்டு ஆராய்ந்து ஒப்புக்கொள்ள வேண்டுவனவற்றை ஒப்புக்கொண்டு ஏனையவற்றைத் தள்ளிவிடவேண்டும் என்றும் இவர் தமது மாணவர்க்குச் சொல்லுவதுண்டு. இவ்வித வழக்கத்தை மேற்கொண்ட மாணவர் அறிவு சிறந்து விளங்குவர் என்பது சொல்லவும் வேண்டுமோ ?

இவர் பல்லாண்டுகளுக்கு முன்னே மிகவும் உயர்ந்த நடையில் தமிழ் எழுதியும் பேசியும் வந்தார் என்பதனைப் பலர் அறிவர். ஆயினும், தமிழில் பேசும்போதும் எழுதும்போதும் திரிசொற்களையும் சொல்லலங்காரங்களையும் கலந்து பேசவும் எழுதவும் கூடாதென்றும், பிழையற்ற தெளிவான எளிய நடையில் பேசவும் எழுதவும் வேண்டும் என்றும் இப்போது இவர் கூறுவதுண்டு. எல்லோரும் எளிதில் அறியத்தக்கவாறு எழுதப்படும் நூல்கள் தாம் சிறந்தவை; ஏனென்றால் மனிதருக்காகப் பாஷையே தவிர, பாஷைக்காக மனிதர் இல்லை. நமது நாட்டு ஜனங்களுக்கு அறிவு வளரவேண்டுமானல் அவர்கள் எளிதில் படித்து விளங்கக் கூடிய முறையில் நூல்கள் எழுதப்படவேண்டும் என்று இவர் எப்போதும் சொல்வதுண்டு. இந்த உயர்ந்த

உண்மையை நூலாசிரியர் பின்பற்றினல் நாட்டிற்கு நன்மை செய்தவர் ஆவர்.

நமது ஆசிரியருக்கு உள்ள மற்ெருரு சிறப்பு என்னவென்ருல், நமது ஆசிரியர் தமது மாணவருக்குத் தமிழ் மொழியில் உள்ள சிறப்புக்களையும் உயர்வுகளையும் எடுத்துக் காட்டுவது போலவே அதிலுள்ள குற்றங் குறைகளையும் எடுத்துச் சொல்வது தான். தமிழின் சிறப்புக்களை அறிந்திருப்பது போலவே அதன் குறைபாடுகளையும் அறிந்திருந்தால்தானே அக்குறைகளை நீக்க முடியும்? இக்காலத்தில் உலக மொழியாகத் தலைசிறந்து விளங்கும் ஆங்கிலத்தைத் தாய் மொழியாக உடையவரும் அம்மொழியின் குறைபாடுகளை ஆராய்ந்து எடுத்து எழுதியுள்ளாரன்ருே? இக்குறைகள் நீங்கினலன்ருே தமிழ் மொழி இன்னும் உயர்வடையும்?

இவர் தமது வாழ்நாள் முழுவதும் இலவசமாகத் தமிழ்ப் பாடம் சொல்லி வருவதிலிருந்தே இவரது தமிழ்மொழிப்பற்றும் அதனிடம் இவர் கொண்டுள்ள ஆர்வமும் நன்கு விளங்கும். இதற்கு, இவர் இற்றைக்கு முப்பத்தேழு ஆண்டுகளுக்குமுன் இயற்றிய 'தமிழ்பயில நண்பரை அழைத்தல்' என்னும் தலைப்புடைய கீழ்க்கண்ட செய்யுளே நற்சான்ருகும்.

"மறையா வாய்ப்பொன் றறைவல் அம்ம!
யானே, கோடிக்கூறி னென்அல் லென்னே!
நன்றே ஓதியும் உணர்ந்துங் கண்டிசினே!
பன்னள் முன்னர்ப் பசையிலென் மன்னே!

இன்னே இனியன் மன்ற மன்னே!
அறியேன் அல்லேன் ஆங்கி லம்மே!
ஆண்டுக் கண்டேன் அல்லேன் மாதோ!
அதனால், பாடுவல் அத்தைப் பாடுவல் அத்தைத்
"தமிழுங் கின்றே! தமிழுங் கின்றே!!
தென்னர்க் குழவித் தமிழுங் கின்றே!!!'
அதனால், பயிலியர் வம்மின் பயின்ற மைந்தீர்!
என்னை ? நட்டோர் அம்ம யான்நட் டோரே!
நள்ளா தோர்யான் நள்ளா தோரே!"

(இச் செய்யுளை, ஆசிரியர் அவர்கள் முதல் முதல் புறநானூறு படித்தபின்னர் 1900-ல் இயற்றினார்கள்.)

கலையுருவான கடவுளே,
தமிழன்னாய், காத்தருள்க ::

மாணவன்
கோ. ல. காந்தன், B.A.

நிலைபெற்ற அமைதி, புனித மணங்கமழ் காற்று, தமிழன்னைதன் தூய உரு, பண்டைப் புகழ், பொலிவு, பொறை, அஞ்சா நெஞ்சம், வீர ஒழுக்கம், எப்பொருளிலும் மெய்ப்பொருள் காணும் பேரறிவு, பார ஒழுக்கம், விழுமிய நோக்கம் ஆகிய இன்னவை யாவும் ஒருங்கே ஓரிடத்தே தாண்டவமாடின காட்சி இன்றைக்கும் என்னுள்ளத்தில் உறைந்து கிடக்கக் காண்கிறேன். உருக்கத்தில்தான் ஆண்மை, வீரம்; நகையிலுமா அவை! உருக்கத்திலும் நகையிலும் மற்றெத்தன்மைய நிலையிலும் எத்

துணைப் பெரிய அடக்கம்! ஈன்ற அன்னையினும் ஆன்ற அய்யன்தனினும் எம்போன்றார்பால் அருள் மிகக்கொண்டு, தாங்கண்ட உண்மைகளை எம்மண்ணல் காதலுடன் எமக்கோதியது தாமின்புறுவதை உலகின்புறக் கண்டு காமுறவன்றோ?

கலையுருவான கடவுளே, இன்ன பண்புகளை என்னாசிரியரது ஒருருவில் அமைத்துத் தந்த நீ, அவர்க்கு நீண்ட ஆயுளையும் நல்குவாயாக! தமிழ் அன்னாய், என் சற்குணச்செம்மல் நீடு வாழ அருள் செய்வாயாக. நின் ஆணைகள்நிறைவேறும்; பணிகள் நன்கு ஆற்றப்படும்; கலைகள் ஓம்பப்படும்; நீயும் நினது அரியாசனத்தில் பொலிவுடன் விளங்குவாய்.

Mr. S. D. Sargunar as a Tamil lecturer ::

P. S. MARTHANDAM,
Old Student.

I understand that to celebrate the 61st birth day of our respected and learned guru Mr. Sargunar many would have contributed their quota in the form of appreciation of him and his works.

So far as I can give any opinion, he is simple, sincere, shrewd and above all straight forward. Much more can be said in prise of him, but I know he would little welcome such an appreciation.

As a student of Intermediate during the past two years, I found that there was not a single student who had not appreciated his teaching or had not concieved his magical powers of teaching.

The majority of students he had to deal with were only average students and a few below average. How with this type of students he established 90 and 92% of passess in the University examinations is difficult to understand. Yet we may attribute the success to his method of teaching.

The poetry text which was intended for two years, he divided into two equal halves. The easier portion he did during the junior class. The difficult of the other half he taught during the early part of the senior class and the rest he completed during the remaining term. Taking the easier half of the text in the junior class he gave a sound footing. Dealing with the more difficult of the second half during the early part of the second year enabled us to understand them well and at leisure, and to give those portions many more revisions than we could if he had taken them up during the latter part of the second year.

Then the mere reading he gives at the outset forms an explanation by itself. His reading, so slow, syllable by syllable, word by word, seems more a reading of the prose than of poetry. When after this he gives the word meaning the stanza is clearly understood. This he does too quickly to be taken down, in order to prevent our taking down. He thinks, if I may say so and if my judgment is not wrong, that by taking down the students' attention is drawn in merely copying and not to retain what

he says. Though we differed from his views in the initial stages we concurred with him later on in his views.

The explanation he gives as regards metonymy synecdoche and other minor details of grammar, it is needless to say that they are so interesting that none could forget, try however much they may. He does not believe as some do that such a statement as Karaikal Ammaiar marched head down to Mt. Kailas or that King Dasaratha reigned for sixty thousand years or that Maha Vishnu takes his bed on a huge snake floating on the milk-sea. During suth occasions and in general his humorous anecdotes are so many a minute and so many an hour.

He has realised that in his capacity as a lecturer his object was not to make the students scholars but to make them successful in their examinations, and rightly did he adopt the method of defining and stressing the essential and passing over the irrelavent. 'Every stanza is not important' said he, 'once.'

Teachers sometimes omit vulgar stanzas to avoid disturbance or if they explained nothing but the explanation of such a stanza would have formed the work for that period. What does our revered guru do on such occasions? He reads such stanzas as he reads others, with not a smile in his face, or

probably with a more serious look. This puts a stop to all hooting and laughing.

The weekly examinations he held were thorough. He exhausted all probable questions. Each and every question of the University paper is found in one or other of the papers given by our Guru during the course of two years.

In all his examinations his complaint was that our answers were poor and our regret was that his valuation was strict. It was this strict valuation that enabled us to answer at ease the University paper and secure an undoubted pass.

In addition to the benefit I derived from the class, my learned guru was kind enough to offer personal help for which he refused to take any remuneration. The benifit I derived personally is too great to be expressed and I shall ever be grateful to him. Despite the fact that he knew me more than he knew any other student in the class, he never made a pet of me nor was my mark increased. Even then I used to fail in most of his examinations.

Mr. S. D. Sargunar ::

K. RAMASWAMY,
Student Senior B. A., Class,
Madras Christian College.

Mr. S. D. Sargunar is the first teacher of Tamil under whom I came to take an interest in the study of Tamil. The most notable feature of the

man was his unruffled serenity. His own desire was to lead his pupils to take a lively interest in the study of Tamil, instead of looking upon it as a task for examination.

Extraordinarily brilliant, he left a lasting impression on all who came into contact with him. Slow and deliberate of manner, one never knew what he was going to say or how long he will continue to say it; but what he did say was worth waiting for. With all that he was no vain talker. His analysis was clear and his criticism profound. In him I found a perfect modern version of the ideal ancient guru.

As a lecerurer of Tamil he was unrivalled. His lectures were illuminating, intresting and instructive. His scholarly assimilation of the subject, his original presentation of the same, his gentle but telling remarks—all these qualities are too innumerable to narrate. His close touch with the language is something marvellous. There was perfect silence, order and discipline within the class. His manners maintain the class in wrapt attention. Not by and wearing were stately and dignified. He was both lenient and strict, resereed and sociable. In him there were only seeing or apparent contradict-ions.

He was a source of incalcueable influence in shaping the minds and maners of many. He had been to many a judge, philosopher and friend.

Never we have gone to him for help and returned disappointed. Whenever he met a student outside the college, he would smile gently and inquire after his welfare.

He has definite principles in life and he strictly adheres to them. He always cherished the maxim "Courage of conviction is necessary for success in life." He is above all class hatred.

The great teacher like the creator has more sympathy with the weak and the erring; and Sargunar is of that role of teacher. He was a man of rare gentleness and amiability fulfilling the duties of his stations, looking for no other praise or reward but the consciouseness of the duty well done. I am bound to bow to him with gratitude and love and to reserve for him one of the formost ranks in the brilliant galaxy of born teachers.

Truly Mr. Sargunar is a noble example for his pupils to follow.

Congratulation to Mr. S. D. S. ::

S. P. ARUMANAYAGAM, B. A. L. T.

I offer my hearty Congratulations to my friend, Pandit, S. D. Sargunar B.A, on the completion of the 60th year of his age, and pray that his life of usefulness in the field of Tamil Literature may be extended for many more years to come.

I had the privilege of having been the Pandit's Colleague in a High School for several years, and entertained a high admiration for his scholarship in Tamil Literature, and his habit of reading books on several Languages at all times. His knowledge of several of the Dravidian Languages has enabled him to make a comparative study of their Literature.

He won the esteem and regard of his students by his sincere love for them, some of whom, who had special aptitude for Tamil, were helped forward by him in their studies during his leisure hours—a labour of love. He is worthy of the honour they wish to bestow on him on his retirement from service after his 60th year of age.

In spite of his scholarship, linguistic talents, and other striking qualities of head and heart, he was unostentatious in nature, never seeking to make a display of the gifts he possessed.

I wish him good health and a quiet life during retirement.

My Respected Master::

J. T. KANAKARAJ, M. A.
Demonstrator in Physics,
Madras Christian College, Thambaram.

If I ever think of the chivalry of ancient India, I think of Mr. Sargunar who is to me a typical example of the flower of ancient Indian chivalry. If

I ever think of the gurus of ancient India, it is again of Mr. Sargunar that I think. If Mr. Sargunar had lived in days long gone by he would have been an exemplary guru, and the very quintessence of chivalry. Now in the world of the modern day, and under conditions very different, he is in the fitness of things, the shining figure of a perfect gentleman of the old order, kind, courteous, cultured, and chivalrous, one of whom, not only his students, but all who came in contact with him, can say with one accord, "There goes a man."

It is difficult for me to think of Mr. Sargunar the teacher, as distinct from Mr. Sargunar the man. I cannot imagine the two as distinct from each other, because to me, Sargunar the teacher is Sargunar the man, and Sargunar the man is Sargunar the teacher.

It is impossible for anyone who has not listened to him to realise the depth and the width of his outlook and of his culture. It is impossible for anyone who has not been his student to realise the extent of his knowledge. Nothing that I can say can ever convey this adequately to the reader.

No professor has been treated with more respect than Mr. Sargunar has always been. He was a great man different in every way from the ordinary lecturer in Indian language, and the students knew it. Coupled with respect went love, and affection,

not of the "hail fellow well met" type but something rooted and steeped in reverence. I wonder how many professors and lecturers there have been in this College of whom a student has said 'I love him as I love my father.' We his students, who love him likewise, present our tribute to him, not on paper, but in our hearts he is enshrined. Mr. Sargunar though not with us at college, is yet always with us for his name, and his memory lingers sweetley in our hearts. May God bless him.

A Keen Student of Human Nature ::

J. G. SIROMONI MANUEL, B. A.,
(An old Student.)

I have much pleasure in paying a tribute to my revered Master, Mr. S. D. Sargunar. His classes were very lively and interesting and like a wizard he used to hold his class spell-bound by his sage counsels, persuasive influence and urbane personality. He was a keen student of human nature. He understood his students just as a father understands his children. I remember his last words in the last class in my B.A., when he made a touching appeal to his students to have a soft corner for him in our hearts. Mr. Sargunar can be rest assured that we have the warmest and the softest corner for him. May he be spared for many more years of useful service to the public.

A Man of Contented Spirit ::

R. CHELLAIYA, B.A., B.L.,
Old Student.

I was a student under Mr. S. D. Sargunar in my High School and College classes. He is a great Scholar in Tamil Literature. Endowed with a profound knowledge of mankind he has a courageous, cheerful and contented spirit little affected by the outward show of things but prone to dwell upon their inward and essential virtues. I wish him long life and happiness.

தம்மையே தமிழுக்கு அர்ப்பணஞ் செய்தவர் ::

R. ஜெகந்நாதன் B. A.

ஆசிரியர் சற்குணர் அவர்களிடம் தமிழ்க்கல்வியை பயின்ற மாணவர்களில் யானும் ஒருவன். இவர் ஆங்கிலமும் மேல்வகுப்பில் போதித்தார், கலை கலையின் பொருட்டே கற்கவேண்டுமென்பது இவர் கருத்து. இவரது இலக்கண அறிவும், அதைப்போதிக்கும் ஆற்றலும் இவரிடம் பயின்ற மாணவர் அறிவே சான்று பகரும். பாடஞ் சொல்லிக்கொடுக்கும்போது எங்களுக்கு மேற்கோள் காட்டி மகிழ்விப்பது இவரது இயல்பு. தமிழை ஆராய்ச்சி முறையில் படிக்கும்படி எங்களைப் பழக்குவித்தவரும் இவரே. உண்மை உரைக்கும் இத்தமிழ்வீரர், இடையறா ஊக்கமும் உழைப்பும் உடையவர். இவருக்கு மாணவர்பால் பேரன்புண்டு. கற்பிப்பதே இவருக்குப் பேரின்பம். இவருடைய வசன வகுப்புக்கள் எங்களுக்கு இடையறா இன்பம் அளித்தது. நாலடியார், நன்னூல்

முதலியவற்றை இவரது இல்லஞ்சென்று கற்றேன். இவர் தம்மையே தமிழுக்கு அர்ப்பணஞ் செய்தவர். இவர் உலகியலறிவும் ஆராய்ச்சிவன்மையும் வாய்ந்தவர். இவர் எளிய வாழ்க்கையையே விரும்புவார். இவர் நீடுவாழ்க என்று யாண்டும் விளங்கும் பரம்பொருளை வழுத்துகின்றேன்.

என் ஆசிரியர் ::

A. M. கோட்டிலிங்கம்

ஆசிரியர் சற்குணர் அவர்கள் முதல்தரமான தமிழ் ஆசிரியர். இவர் போதிப்பதற்கென்றே பிறந்த ஆசிரியர். இவர் அருள்வாய்ந்த பெருமகனவர். கிறித்தவர்களுள் முதல் தமிழ் ஆசிரியர் இவரே. திரு. எட்மண்ட்ஸ் அவர்கள் இவரை வருபவரிடம் சிறந்த ஆசிரியர் என்று கூறுவதில் இறுமாப்புக்கொள்வதுண்டு. தமிழுக்கு உயிர் கொடுத்தவரும் தமிழ்ப் பண்டிதர்களைத் தயாரித்தவரும் இவரே. எளிய வாழ்க்கையும் ஆழ்ந்த எண்ணமும் உடையவர், தமிழர்களால் நன்மதிப்புப் பெற்றவர். தமிழுக்காக இவர்செய்த சேவை மறக்கமுடியாதது. இவர் நீடுவாழ்க.

பேறலரும் பேராசிரியர் ::

தமிழாசிரியர்

பிரம்மஸ்ரீ திரு. வி. நடேசன்.

உலகம் உவப்ப உரைப்பன் கேண்மோ:
பலரும் புகழும் குலனருள் தோன்றல்!
தேவரே அன்ன தெய்வம் வணங்கும்!
மேஞட் டார்புகழ் மேன்மை, வன்மை,
தெரிவரும் பெருமை, திண்மை, பொறுமை,
கருவில் மருவிய திருவுடை அண்ணல்!

நந்தமிழ் நவிலும் நற்குண நாயகம்!
கரையிலாக் கல்வியும் கட்டுரைக் கேள்வியும்
கண்டே தெளிந்து கண்டவர் வியக்கக்
கல்லும் உருகக் கரும்புங் கசக்கக்
கற்றதைக் கரவாது கைம்மாறு நோக்காது
சங்கநூற் கடலைச் சால வாரி
எங்கள் மனத்தில் எழிலாய்ப் பொழியும்!
தொல்லா சிரியர் தொகுத்த கருத்தைத்
துணைநூற் கொண்டே துணிவுடன் கூறும்
நிறைகோல் போல நடுநிலை யாகி
ஆன்றோர் அமர ஆராய்ச்சி செய்யும்!
ஆசிரியத் தொழிலை ஆர்வமாய்ப் பண்ணும்!
ஆண்டவன் குணக்கடல் ஆடும் வீரம்!
ஆருயிர்க் கெல்லாம் அன்பே ஆற்றும்!
தமிழ்மணம் வீசித் தண்இதழ் மலரும்!
ஆங்கிலம், கிரேக்கம், ஆரியம், இலத்தீன்,
பாங்குடைப் பன்மொழி பன்னாள் பழகும்!
சுந்தரத் தெலுங்கு, சுவர்ண கன்னடம்,
மலையாளர் மழலை, மகமதியர் மொழியும்
திரட்டிக் கொண்டே திகழும் நிதியம்.
சிந்தா மணிபோல் சிற்றின்ப மீயாது,
நந்தா இன்பம் நாளும் நல்கும்!.
ஆசிரி யனாகி அன்னை யுமாகும்!
மாணவர் தமக்கு மருத்துவஞ் செய்யும்!
கற்பின் இன்பங் கண்டதுங் காட்டி,
ஆரிருள் அகத்தும் ஆய்ந்தே அறியும்
கலைபயில் ஆசை கண்டோர்க் களித்துக்
கலைபயில் பொழுதில் கலைமகள் காட்டும்!
எம்மரும் மம்மர் எளிதில் அகற்றித்

தம்பெருமை தள்ளித் தந்நலங் கருதாப்
பற்குணம் நிறைந்த சற்குண மலேச்சுடர்
எம்மரும் ஆசான், எண்ணிலா ஆண்டு
தாம்பிர பரணி தகைசால் மணலினும்.
வாழி! வாழி! ஊழி வாழியே!

உத்தம ஆசிரியர் ::

சென்னேக் கிறிஸ்தவக் கல்லூரித்
தலேமைத் தமிழ் விரிவுரையாளர்
T. K. கோபாலேயர், B.A.

ஸ்ரீமான் சற்குணர் அவர்கள் தமிழாசிரியர் வேலேயை அவசியத்திஞலல்லாமல் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் தொண்டுசெய்யவேண்டுமென்னும் சீரிய நோக்கத்துடனேயே ஏற்றுக்கொண்டு, உள்ளும் புறமும் ஒத்து உழைத்து வேறு சாதனங்களாலன்றித் தம் உழைப்பின் பெருமையிஞலும் உண்மைப் புலமையிஞலும் உயர்ந்த குணத்திஞலுமே புகழெய்தி விளங்குபவர்கள் அவர்களே.

கல்வியைக் கல்விக்காகவே கற்றல், இடையூறு எவற்றையும் கருதாது எடுத்த காரியத்தை முடித்தல், உள்ளும் புறமும் ஒத்து விளங்கல், மனவுறுதியுடைமை ஆகிய நற்குணங்கள் ஸ்ரீமான் சற்குணர் அவர்களுக்கு அவர்களது முன்ஞேரிடமிருந்தே வந்தவை.

ஆசிரியர் அவர்களின் கல்விப் புலமையின் ஆழத்தையும் அகலத்தையும் மதிப்பிட்டுரைக்கும் ஆற்றல் அடியேனுக்கில்லே. அவரைவிட அதிகப்புலமை வாய்ந்தவர்கள்தாம் அவர்களது திறத்தை உள்ளவாறு உரைக்கத்தக்கவர். ஆதலின் அவர்களது வகுப்பு நடைபெறும் விதத்தைப் பற்றிமட்டும் ஒருசிறிது கூறுகின்றேன்.

உபதேசத்தைக் காட்டிலும் நிதரிசனமே சிறந்தது என்னும் முதுமொழிக்கு இலக்காய் விளங்குபவர் ஸ்ரீமான்

ஆசிரியர் அவர்களே. உதாரணமாக, அவர்கள் குறித்த காலம் தவறுதலாகாது என்று தங்கள் வாயினால் கூறாது தங்கள் செய்கையினாலேயே காண்பிப்பார்கள். பேராரவாரம் செய்யும் கல்லூரி மாணவர்கள் அவர்களது வருகையை அறிந்தவுடன் சித்திரப் பாவைபோலடங்கி நீர் வேட்கையுற்றவன் பருகுநீரை எவ்வாறு ஆவலுடன் அருந்துவானோ அவ்வாறே அவரது மொழிகளை ஏற்பார்கள். இனிய எளியநடையில் சீரிய கருத்துக்களை மாணவர் கொள்ளும்வகையறிந்து போதிக்கின்ற ஆசிரியரவர்களுடைய திறனில் ஈடுபட்ட மாணவர்கள் தங்கள் மனத்தை வேறு எதிலும் செலுத்தமுடியுமோ? தமிழ்ப்பாடத்தை வியாஜமாகக் கொண்டு தேக தத்துவ சாஸ்திரம், மனோதத்துவ சாஸ்திரம், பிராணி சாஸ்திரம், பூகோள சாஸ்திரம், வான சாஸ்திரம் முதலியவற்றைச் சமயம் நேர்ந்துழி எல்லாம் கற்பிப்பார்கள். அவர்களுடைய வகுப்பில் ஜனசமூகச் சீர்திருத்தம் வாதிக்கப் பெறும்; மதபோதகர்கள் செய்யும் அக்கிரமங்கள் கண்டிக்கப்படும்; அந்தணர், வேளாளர், இடையர், கிறிஸ்தவர் முதலியவரிடத்தில் அமைந்த சிறந்த பழக்க வழக்கங்கள் பாராட்டப்படும்; தீய ஒழுக்கங்கள் இகழப்படும். அவர்களுக்கே அமைந்த நகைச்சுவை நிறைந்த வாக்கியங்களை இடையிடையே கேட்கும் மாணவர் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாவர். ஆனால் ஆசிரியர்மட்டும் சிரிக்கவேமாட்டார். சங்க நூல்களைப் போதிக்குங்கால், அவர்கள் கூறும் ஒப்புமைப் பகுதிகளாய் விளங்கும் மேற்கோள்கள் ஒன்றனை ஒன்று நன்கு விளக்கி மிளிரும். 'மிருக விசேடங்களில் ஒன்று' 'மர விசேடங்களில் ஒன்று' என்பன அவர்கள் வாயினால் கூறப்படா. மிருகமாயின் அவர்கள் அதன் குணவிசேடங்கள், உருவ அமைப்பு, அதனை வேட்டையாடும் விதம் முத

லியனவற்றையும், மரமாயின் அதன் அடிமரம், இலே, காய், பழம் ஆகியவற்றின் வடிவம், நிறம், சிறந்து தோன்றும் காலம் முதலியவற்றையும் மேற்கோள்களைக் காட்டி நன்கு விளக்குவார்கள். 'நச்சினார்க்கினியர் கூறினார் அல்லது சேனவரையர் எழுதினார்' என்பதற்காக அவ்வாசிரியர்கள் கூறியதை வேதப் பிரமாணங்களாகக் கொள்ளார்கள். தங்கள் மனத்திற்குச் சரியாய்த் தோன்றினால் அவர்கள் கொள்வார்கள், இல்லாவிடில் தள்ளிவிடுவார்கள். நீர ஆராய்ந்து முடிவிற்கு வந்த விஷயத்தை அவர்கள் தக்க ஆதாரங்களுடன் கூறும்போது அறிஞர்கள் எவரும் மறுத்துரைத்தல் முடியாது.

ஆசிரியரவர்கள் தங்களுடைய கூற்றுக்கு ஆதாரமாக மாக்ஸ்முல்லர், டாக்டர் கால்டுவெல், டாக்டர் போப், எல்லிஸ், டெயிலர் முதலிய மேனாட்டுத் திராவிட பாஷா நிபுணர்கள் கூற்றுக்களைச் சமயத்திற்குத் தக்கவாறு எடுத்தாளுவார்கள். ஷேக்ஸ்பியர், டென்னிசன், லாங்பெல்லோ, எமர்சன் முதலிய ஆசிரியர்களுடைய பொருள் பொதிந்த பொன்மொழிகள் ஆசிரியர் சற்குணர் அவர்களுடைய பாடத்தை அலங்கரிக்கும். ஒருசமயம் வால்மீகி முனிவரைத் தம்வகுப்பில் இழுத்துவந்து 'கம்பன் என்னுடைய இராமாயணத்திலிருந்து இன்னின்ன இடங்களில் மாறுபட்டான்' என்று கூறச் செய்வார்கள்; மற்றொரு சமயம் ஈசாப் என்பவரைத் தம் கட்டுக்கதையின் மூலமாய் நீதிபுகட்டச் செய்வார்கள். இவைகளை எல்லாம் கவனித்துவரும் மாணவர்கள்மனத்தில் பாஷையைப் போதிக்கும் ஆசிரியன் ஒரு பாஷையில்மட்டும் பாண்டித்தியம் பெற்றால் போதாது; குறைந்தது இரண்டு அல்லது மூன்று பாஷைகளிலாவது பாண்டித்தியம் பெற்றிருத்தல் வேண்டும். அப்

பொழுதுதான் அவன் தன் வேலையைச் செய்ய முடியும்' என்ற உணர்ச்சி வேரூன்றிவிடும்.

சுருங்கச் சொல்லவேண்டுமானால், ஆசிரியர் போதனையினால் மாணவர்கள் படிப்பில் மிக்க ஊக்கங்கொள்வார்கள். மாணவர்கள் ஊக்கத்தைக் கண்டு ஆசிரியர் ஊக்கங்கொண்டு மேலும் மேலும் போதிப்பார்கள். அவர்கள் வகுப்பில் காலம் போவதே தெரியாது. இன்னும் கொஞ்ச நேரம் இவ்வகுப்பு நடைபெறாதா என்ற ஆவல்தான் மாணவர்கள் மனத்தில் உண்டாகும். ஆசிரியர் அவர்கள் 'நம் கடமையைச் சரிவரச் செய்தோம்' என்ற திருப்தியுடன் செல்வார்கள். மாணவர்கள் 'இக்காலத்தை மிகப் பயனுடையதாகக் கழித்தோம்; அரிய விஷயங்களைக் கற்றோம்' என்ற உணர்ச்சியுடன் போவார்கள். ஆசிரியரவர்கள் கிறித்தவக் கல்லூரி மாணவர்க்குக் கூறிய நல்லுரைகளைக் கேட்ட சிறந்த தேசபக்தரும் தமிழன்னையின் தவப்புதல்வருள் ஒருவருமாகிய ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் ஸ்ரீமான் சற்குணர் அவர்களை நோக்கி 'ஐயா தாங்கள் தமிழ் இலக்கியம் மட்டுமே தங்கள் மாணவர்களுக்குக் கற்பிக்கிறீர்கள் என்று நினைத்தேன். இன்றுதான் தாங்கள் தேசியத்தை இலக்கியத்தில் குழைத்து ஊட்டுகிறீர்கள் என்பதை உணர்ந்தேன்' எனக் கூறினர் என்றால் ஆசிரியர் அவர்களது பாடஞ் சொல்லும் முறையையும் வகுப்பையும் பற்றி வேறு என்ன கூறுவது? இத்தகைய உத்தம ஆசிரியர் இந்நிலவுலகினில் இதுகாறும் இயற்றியுள்ள நன்மையைப்போல இன்னும் பன்மடங்கு அதிகமான நன்மையைத் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் இயற்றுமாறு அவர்களுக்கு அரோக திடகாத்திரமும் பூரண ஆயுளும் அளித்தருளும் வண்ணம் இறைவனை இறைஞ்சுகின்றேன்.

திரு. ச. த. சற்குணரவர்கள் கருத்துக்கள்.

(1) கல்வியைப் பெரும்பாலும் விலைக்கு விற்றல் கூடாது.

(2) வடமொழியிலிருந்து தமிழ் வரவில்லை. வடமொழி வேறு, தமிழ் வேறு. வடமொழியைத் தமிழில் கலத்தல் கூடாது.

(3) பிள்ளைகளை மரியாதையாக நடத்தல் வேண்டும்.

(4) கல்லடிபட்டாலும் கண்ணடிபடக்கூடாது. ஆகையால் ஆண்களும் பெண்களும் கண் கவரும் உடைகளை உடுத்தல் கூடாது.

(5) நம்முடைய மாணவர்கள் கிராப் விடுதலும், காலுறை, கழுத்துக்கட்டு, தொடுதோல் போடுதலும் தமிழர் நாகரிகத்திற்கு மாறானவை.

(6) வடமொழி, பிராமணர்கள் மொழி என்று கருதுவது அறியாமை. அது நம்முடைய மொழி. நாம் அதைக் கற்கவேண்டும்.

(7) கடவுள் நாமத்தை வீணுகச் சொல்லக்கூடாது.

(8) எம்மதத்திலும் உண்மை உண்டு. அவற்றைப் போற்ற வேண்டும்.

(8) பண்டிதர்கள் பல மொழிகள் கற்க வேண்டும்.

(9) சிறு குழந்தைகள் பல மொழிகள் கற்பதால் உடல் நலியும்; ஆதலால் முதல் மூன்று பாரங்களில் தமிழ் மாணவர்கள் இந்தி கற்றல் கூடாது.

(10) குழந்தைகள் அதிகமாகப் படிப்பதைவிட வெளியில் சுத்தமான இடங்களில் விளையாடுதல் வேண்டும்.

(11) எல்லோரும் தமிழில் எளிய நடையில் எழுதல் வேண்டும். இதுவே மொழிக்கு அழகு.

(12) தனித்தமிழ்ப் பாதுகாப்பு என்பது தமிழ் மொழியைக் கொல்வதே யாகும்.

ஆசிரியர் அவர்கள் அடிக்கடி கூறும் பொன் மொழிகளில் சில

1. என் கடன் பணிசெய்து கிடப்பதே.
2. பாடுபட்டால் பலனுண்டு.
3. உன் கடமையைச் செய். பலனை எதிர்பாராதே.
4. உயிர் வாழ்தல் பொருட்டே உண்ணல் வேண்டும். உண்ணல்பொருட்டு உயிர் வாழ்தலாகாது.
5. தன் கையே தனக்கு உதவி.
6. அன்பினால் உலகை ஆளலாம்.

திருப்பவுற் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியரும் இத்தமிழ்ச் சங்கத்தின் தலைவருமாகிய

ஸ்ரீமான் ச. த. சற்குணர் B. A. அவர்களை

விடை கோடல்

(அ. கி. பரந்தாமனார் பாடியது.)

பூமலர் மகளொடு நாமகள் இலங்குங்
காமரு சென்னைக் கவின்பல சாலையுள்
எம்மருஞ் சாலை நம்மொழி யதனில்
அம்ம! பிறங்கிட ஆற்றிய பெரும!
தஞ்சம் யாண்டென அஞ்சி ஓடிட
நஞ்சமு தாக்கிய நந்தமிழ் மொழியின்
இலக்கண மதனை இன்னமு தாக்கி
நலமுடன் ஊட்டும் புலமிக வாய்ந்த
இலக்கண ஆக்க இணையில் நூலே
உலகெலாம் புகழ்ந்திட உவந்தெமக் களித்தோய்!
அண்டிடு மக்கள் அறிவிலர் ஆயினும்
எண்ணரு புலமை எய்திடச் செய்வோய்!

தண்டமிழ் முழக்கம் எண்டிசை முழக்கும்
பண்டித மணியே! பசுந்தமிழ் வள்ளல்!
கலையே காலப் போக்கெனக் கழிக்கும்
கலையா பரண! மலைநிகர் மாண்போய்!
திருப்பவுற் சாலை பெருநிலை அடைவான்
வரும்பொருள் உரைக்குமெம் பெருமதி அமைச்ச!
என்பும் பிறர்க்கென எண்ணி நாளும்
பொன்னும் பொருளும் போற்றா துலகில்
ஆங்கிலந் தமிழும் ஆந்திரம் ஆதி
பாங்குடன் கற்றுப் பாரினில் வியக்க
எத்துறைச் செலினும் அத்துறைச் சிறந்திட
நத்தி உஞற்றும் உத்தமக் கலைவல!
தாயொடு தந்தை தமையன் ஆசான்
ஆய மருத்துவன் அனைத்து மாகி
எம்மரு மேனிலை என்றும் போற்றுஞ்
செம்மல்! இந்நாள் செந்தமிழ் சிறக்கக்
கிறித்தவச் சாலை கிளரொளி எண்டிசை
எறித்திடச் செலவு எழிலுற முன்னினை;
கறவை பிரிந்த கன்று போன்றும்
பறவை நீங்கிய பார்ப்புப் போன்றும்
அல்லற் படுவே மாயினும் நின்னன்
பெல்லாம் எம்பால் என்றுள தெண்ணிச்
சாற்றருந் தருமராஜ சற்குணச் செல்வ!
ஆற்றுவம் வந்தனம் போற்றிநின் தாளே.

St. Paul's High School,
19-4-'28.

இங்ஙனம்,
திருப்பவுல் தமிழ்ச்சங்க மாணவர்.

வாழ்த்துப்பாக்கள் ::

வையாறு அரசர்கல்லூரித்
தமிழ் விரிவுரையாளர்
திரு. R. வேங்கடாசலம் பிள்ளை.

1. காண்டகுசீர்ச் சற்குண! நிற்காட்டுகவென் றெனையுள்ளம்
கவற்ற லுண்டு;
ஆண்டறுப தாறானன்னுள் அண்மியதென் றோரன்பர்
அருளி, யாதும்
வேண்டுநல மில்லேனைப் பொருள்செய்து சிலபணிகள்
விதித்த துண்டு;
ஈண்டிமிவை யென்னினுமங் கிணைத்திடுமூழ் இன்மையினின்
றெய்தி லேனே.

2. இந்நாளைப் போலன்றி எத்துணையோ உயர்பதவி
எய்த லாகும்
அந்நாளிற் சற்குண! நீ ஆங்கிலத்துப் பெரும்புலமை
அணைந்து நின்றும்
பொன்னானநம் தமிழ்த்தாயின் புனிதமிகு திருத்தொண்டே
புரிந்து நின்றாய்
நின்னாயுள் நின்சுற்றம் நின்வாழ்வு நின்தொண்டு
நீடு வாழி!

3. தாய்மொழியின் பெருந்தொண்டன் தமிழர்கடம் பெருவாழ்வு
சாமி நாதத்
தூய்மைமிகு பெரும்புகழன் தொல்பெரியன் திருமுன்பு
சூழும் அன்பர்
ஆய்புலமைச் சற்குண! நிற் கறுபதாம் ஆண்டுவிழா
ஆற்றல், சேய
ம்சய்மையினில் நிகழ்வெனினும் சிறியேன்றன் அகக்கண்ணில்
திகழும் வாழி!.

ச. த. சற்குணர் ::

அண்ணாமலை பல்கலைக் கழகத்
தமிழ்ப்பேராசிரியர்
S. சோமசுந்தர பாரதியார், M.A., B.L.

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரித் தலைமைத்தமிழாசிரிய ராயிருந்து சமீபத்தில் ஒய்வு பெற்றிருக்கும் திருவாளர் சற்குணர் அவர்களைப் பல ஆண்டுகளாக அவர்கள் புகழா லும் சில ஆண்டுகளாக நேரிற்பழகியும் நான் நன்கறிவேன். பிறர் பண்டிதர் பலரைப்போலல்லாமல் நெடுங்காலமாக இவர்கள் சங்கநூல்களை விரும்பிக் கற்றும் மாணவர்க்குக் கற்பித்தும் வருபவர்கள். இம்மாகாணத்தில் அறிவுடைய மாணவர் கூட்டத்தாலும் நெடுங்காலமாக உயர்தரக் கல் வித் தொடர்பாலும் முதல் வரிசையில் வைத்து மதிக்கப் படும் கிறிஸ்தவக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் புலமைப் பதவியை வகித்தும், பிற ஆசிரியர்களும் மாணவரும் ஒப்ப மதிக்க சர்வகலாசாலையில் தமிழ்த் தொடர்புடைய பல கழகங்களிலும் இடம்பெற்றும் புலத்துறைமுற்றிய இவர்க ளுக்குப் புகழும் தமிழ்வாணர் வாழ்த்தும் இயல் உரிமை யாகும். விருப்பு வெறுப்புக்களின்றி நடுநிலையிற் சீர்தூக்கித் தம் கருத்துக்களை உள்ளபடி வெளியிடும் துணிபுடையார் என்று இவர்கள் பெற்றிருக்கும் பேரே இவர்களுடைய சால்பின் செவ்விக்குப் போதிய சான்றாகும். ஆண்டௌ வெல்லை யெய்துவிட்டதாகக் கல்லூரி அதிகாரிகள் இவர்க ளுக்கு ஒய்வு உதவியதும் உண்மைத் தமிழ்த்தொண்டு புரி வதற்கும் இவர்களுக்கு அதிக இடமும் பொழுதும் தந்து தாம் இன்புறுவது உலகின்புற இவர்கள் தருதற்குத் துணை யாயிற்றென்று நான் கருதுகின்றேன். நாளை இவர்களின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா நடைபெறுவது தமி ழர் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் விழாவாகும். காலஞ் சென்ற கிருஷ்ண பிள்ளையவர்களுக்குப் பிறகு கிறிஸ்தவர்க ளுள் தமிழ்ப் புலமை உலகில் வீறுபெற்றார் இவர்களைத் தவிர வேறுயாரும் இலர் என்று துணிந்து கூறலாம். இவர்கள் இன்னும் பல்லாண்டு இனிதுவாழ்ந்து தமிழ் வள மும் தம்புகழும் வளர்ப்பார்களாக.

AN ADDRESS OF FAREWELL
TO
M. R. Ry. S. D. SARGUNAR Avl., B. A.,
Lecture in Tamil, Madras Christian College, Madras.

Revered Sir,

It is with unmixed sorrow that we, learning of your impending retirement, have met here this evening to pay you the homage of thanks-giving and to ask of you a Guru's blessing. Our sorrow at parting from you is too genuine for mere utterance and too deep for expression.

The Madras Christian College has had, in the past ten years, the rare distinction of having on its staff an eminent Tamil Scholar of established reputation in the whole of the Tamil-speaking part of this province—a distinction which the College owes to the wisdom and far-sighted policy of the late Dr. William Meston, who it was that discovered your merits and, on the advice of Mr. Rajagopal Rao, offered you the place on the staff which you have filled for ten years with distinction to yourself and immense benefit to your students.

Your classes, characterised as they have always been by simplicity of speech, lucidity of expression, profundity of linguistic lore, originality of criticism and sustained interest, were looked forward to with expectation of enjoyment. Studies under your

direction were turned for us to pleasurable pursuit and books became fields for exploration and discovery. Though often we grumbled at the stiffness of your question-papers and the high standard of your marking the answers, we did realise that the brilliant results produced by the College in the University Examinations in Tamil more than justified your rigid adherence to a high standard in Tamil teaching. The promptness with which our written exercises were corrected and returned, combined with the fact that you had not, in the ten years of service in the College, availed yourself of a day's leave on personal grounds, leads us to feel that you are still in the enjoyment of robust health and have many more years of active service still left.

It was not alone in the class-room that we learnt to value your erudition and powers of exposition. Your addresses delivered at the meetings of the Tamil Sangam and of the South Indian Tamil Academy of which you are still the President have won the admiration of Tamil scholars for profundity of learning, depth of thought, lucidity of interpretation of obscure Hindu rites and ceremonies, and variety and richness of imagery. To this is due the fact that you count among those who sit at your feet and learn of you not only youthful students like us but also grown-up ones who themselves lay claim to considerable scholarship in Tamil literature.

We entertain the hope that in your retirement you will continue to serve the Tamil language, enriching it by further contribution to its literature.

Our indebtedness to you is not confined to Tamil. We owe you more for the example that you have set us by your stern sense of duty and sterling character. Desire for favour or fear of censure are foreign to your nature. "Be just and fear not" is written across your life and work. May that life be spared long and that work continue for years, if not within the four walls of this College, outside in the larger arena where your worth will be esteemed and your work appreciated by larger numbers.

Revered Guru, permit us now to bid you good-bye and in doing so we beg you to accept this small souvenir as a token of our high regard for your eminent scholarship and grateful appreciation of your parental love.

May the blessings of Him whose faithful servant you have been be with you in your retirement is our fervent prayer.

We remain,
Revered Sir,

The Madras Christian College,
26th February 1937.

Your Devoted and Dutiful Students of the Madras Christian College and the Members of Tamil Sangam.

தமிழ்ப் பெருந்தேவி திருப்பள்ளி யெழுச்சி

திருப்பவுல் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர்
அ. கி. பரந்தாமனார்
பாடியவை.

மருளுடை மாணவர் மனத்துறு மாசு
மாணுறு ஞானமே கண்டுழி மறைந்தா
தெருளுடை முறையெனத் திகழ்ந்தது வானும்;
தடம்பெரு மரகதக் குரகதம் பூணும்
உருளுடைத் தேர்மிசை அருணனு முதித்தான்;
உலகினில் மக்களு மெழுந்தன ருவந்தே;
பொருளுடைப் பாவலர் போற்றிடும் பைந்தமிழ்ப்
பூவையே ! பள்ளி யெழுந்தரு ளாயே!

மனைதொறும் மனைதொறும் மாண்பெருஞ் சேவல்
மணிநிறச் சிறகெனுங் கையினைக் கொட்டிப்
புனைபெறு கன்னியே எழு! எழு! என்று
பண்பொடு கூவிடு முறையென இந்நாள்
கனைகட லுலகினிற் கடிதெழு கென்று
கூவின அச்சிடு யந்திரச் சேவல்;
தினைப்புனஞ் சூழ்ந்திடுந் தண்டமிழ் நாடாள்
தையலே ! பள்ளி யெழுந்தரு ளாயே!

மழைக்குலம் முகந்திடும் பொருகடல் முற்றும்
தீவினி னின்றுநற் புகைக்கல மேறித்
தழைவளம் பெருகிடு நம்மருந் தேயம்
தங்கியே உலவுவள் ஆங்கில மாதும்;
பிழையிலா வனப்புடைப் பொற்றொடி நீயும்
பெறுமவள் கையினைப் புகழுறப் பற்றிக்
குழைந்துடன் நடந்திடத் தண்டமிழ் அணங்கே!
கடிதினிற் பள்ளி யெழுந்தரு ளாயே!

Printed at Sri Bharathi Press, Choolai, Madras.

நெடுநல்வாடையும் நக்கீரரும்.

முன்னுரை

செந்தமிழணங்கு தன் மக்களாகிய சங்க மருவிய சான்றோரைத் துணைகொண்டு தனது நெறிவழியே செல்ல, காலமென்னும் ஆறலைகள்வன் வழிமறித்து அவளது அணிகலன்களை யெல்லாங் கவர்ந்துகொள்ள முயன்றனன். துணைவந்த சான்றோர்கள் அவனைத்தகைப்பவும், அவன் அதிக்ரமித்து ஆபரணங்கள் பலவற்றைப் பறித்துக்கொண்டனன். ஒருசிலவே எஞ்சின. இவற்றைச்சேகரித்து அச்சான்றோர்கள் தம் அருமைத்தாயாராகிய தமிழ் மடவரலது கையிலுய்ப்ப, அம்மடவரல் தானும் பிற்காலத்துள்ள தனது மக்கட்கென வழிமுறை வந்த மாநிதியாக உதவியவைகளில் "பத்துப்பாட்டு" என்னும் அரும்பெறல் மணிக்கோவையும் ஒன்றும்

இம்மணிக்கோவையினுள்ளே ஏழாவது மணியாக நின்று மிளிர்வது நாமாராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட "நெடுநல் வாடை". இம்மணியினது உயர்வைப் பரிசோதித்தற்குச் சிறந்த ரத்ன பரிசோதகன் ஒருவன் வேண்டுமென்பது மலையிலகரு. அங்ஙனமிருப்பவும் யான் அத்தொழிலை மேற்கொண்டது தமிழரசியார் மாட்டு எனக்கு உள்ள பக்தியினது பெருவலி ஈர்த்துச் செல்லுதலானென்க.

பாட்டுடைத் தலைவன்

நக்கீரனென்னும் புலவர்பெருமான் தலையாலங்கானத்துச்செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை தலைவனாகக்கொண்டு இயற்றியது இந்நூல். பாண்டியன் நெடுஞ்

செழியன், பகைப்புறஞ் சென்று மண்டமர் நசையொடு கண்படை பெறாது பாசறைக்கண்ணேயிருப்ப அவனோடு இன்புற்றிருக்கப்பெறாது அரண்மனையிலே தனித்திருந்து தனது இன்னுயிர்த் தலைவனது பிரிவை நினைந்து நினைந்து நெஞ்சழிந்து வருந்திக் கொண்டிருக்குந் தலைவியை அவன் விரைவில் அடையக் கடவனென்று கொற்றவையைப் பரவுவாள் கூறியதாக அமைந்துள்ளது இப்பாட்டு.

இனி, பாட்டுடைத் தலைவனாகிய பாண்டியன் நெடுஞ்செழியன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறையொடு பொருது அவனைச் சிறைப்படுத்தி அவற்குதவியாக வந்த திதியன் முதலிய எழுவரையும் விண்ணுலகேற்றிய வீரனாவன். இவன் முன்னோரெல்லாம் போரில் தலைநின்று புகழ்நிறுவிய சிறப்பினரென்பது,

"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்துபட்ட வியன் ஞாலம்
தாளிற் றந்து தம்புகழ்நிறீஇ
ஒருதா மாகிய வுரவோ ரும்பல்" என்னும் புறநானூற்றுச் செய்யுளால் நன்கு அறியக் கிடக்கின்றது. இவன் தலையாலங்கானத்தில் செருவென்ற வீரனென்பது "ஞாலம் நெளிய வீண்டிய வியன்படை, ஆலங்கானத்து அமர்கடந்தட்ட கால முன்ப" என்ற அடிகள் விளக்குகின்றன. இவன் வேள் எவ்வியின் மிழலைக்கூற்றத்தையும், பழைய வேளிருடைய முத்தூற்றுக்கூற்றத்தையும் கைக்கொண்டவனென்பது "ஓம்பா ஈகை மாவேளெவ்வி, புனலம் புதவின் மிழலையொடு கழனிக், கயலார் நாரை போரிற் சேக்கும், பொன்னணி யானைத் தொன்முது வேளிர், குப்பை நெல்லின் முத்தூறு தந்த கொற்ற நீள்குடைக் கொடித் தேர்ச் செழிய" என்னுஞ் செய்யுட்பகுதி தெரிவிக்கின்றது. இவன் செருவென்ற பொழுது பகைவரது முரசங் கைக்கொண்டானென்பது "உடலருந் துப்பி னொன்றுமொழி

வேந்தரை, யணங்கரும் பறந்தலை யுணங்கப் பண்ணி, பிணியுறு முரசங் கொண்ட காலை" என்னும் வரிகள் புலப்படுத்துகின்றன. "ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் தலைவனாக, உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற், புலவர் பாடாது வரைகவென் னிலவரை, புரப்போர் புன்கண் கூர, யிரப்போர்க் கியா வின்மையா னுறவே" என்னு மடிகள் இவனுக்குத் தமிழ்ப்புலவர்கள் மாட்டுள்ள அன்பினையும் நன்குமதிப்பினையும் இவனது ஈகைக் குணத்தையும் மதுரைக்காஞ்சி இயற்றிய மாங்குடி மருதனார் இவனது வாயிற்புலவர் என்பதையும் நன்கு வலியுறுத்துகின்றன. இவன் செருவென்ற காலத்தில் ஆண்டின் இளையவனென்பது "பொருநனு மிளையன் கொண்டியும் பெரிதென" என்னும் அடி உணர்த்துகின்றது. இவ்வாறே இவன் தற்பெருமையுடையானல்ல னென்பது புறநானூற்று 77-ம் செய்யுளாலினிது பெறப்படுகின்றது. இவனது குணாதிசயங்கள் இவ்வாறுள்ளன. இனி இவன் வாழ்ந்து அரசுபுரிந்த காலம் இதுவென நிச்சயிக்க முயலுவோம்.

காலம்.

பண்டைக்கால ஆராய்ச்சியிற்றலையிட்ட அறிஞர்களுக்குள்ளே, டாக்டர் S. கிருஷ்ணசாமியையங்காரவர்கள் முன்னணியில் நிற்பாராவர். இவர்கள் 'கடைவள்ளலார்காலம்' என்றதோர் வியாசம் வெளியிட்டுள்ளார்கள். அதிலே கடைச்சங்கப் புலவர்கள் என்று நினைக்கப்பட்டவர்களுட் பலர் கி. பி. 100 முதல் 300 வரையுள்ள காலததில் வெவ்வேறு பகுதிகளிலிருந்தார்களென்றும், அப்போது பாண்டியர்களில் நெடுஞ்செழியனும், அவன் மகன் இளஞ்செழியனும் அவன் மகன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனும், சோழர்களில் கரிகாற் பெருவளத்தானும் அவன் பௌத்திரன் கோக்கிள்ளியும், சேரர்களிற் செங்குட்டுவனும் அரசுபுரிந்து வந்தனர் என்றும் நிறுவியிருக்கின்றார்கள். காலஞ்சென்ற ஸ்ரீமத் வி. கனகசபைப் பிள்ளையவர்கள்,

கரிகாற் பெருவளத்தானுக்கும் கோக்கிள்ளிக்கும் இடையில் நலங்கிள்ளியென்றொருவனிருந்ததாகக் கொள்வார்கள். இலங்கையரசனை முதற்கஜபாகு கண்ணகி யென்னும பத்தினிக் கடவுட்குச் செங்குட்டுவன் கோயிலமைத்த போது வந்திருந்தான் என்றும், அவனும் இளஞ்செழியனும், உறையூர்க்கிள்ளியும் அக்கடவுட்குத் தனித்தனியே கோயிலமைத்தார்களென்றும் சிலப்பதிகாரத்தால் விசதமாகின்றது. கஜபாகுவின் காலம் கி பி. 113—135 என்று இலங்கைப் புராதன சரித்திரமாகிய மகாவம்சத்தினால் தெரியவருகின்றது. இதனாலே இளஞ்செழியனுக்குப்பின் அவன் மகன் நெடுஞ்செழியன் அரசாட்சி செய்தது கி. பி. 135-ஐ அடுத்த காலம் என்பது தெளிவாகின்றது.

இறையனா ரகப்பொருளுரை உக்கிரப் பெருவழுதியார் காலத்து நக்கீரர் இயற்றினாரென்பது கர்ணபரம்பரைச் செய்தி. இவ்வரசன்றான் முதல் நெடுஞ்செழியன் என்பது ஐயங்காரவர்களுக்கும் பிறர்க்கும் கருத்தாகும். அங்ஙனமே கொண்டால், இவனது பௌத்திரனை தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தும் நக்கீரர் இருந்து அவனது வென்றிச் சிறப்பைப்பற்றி நெடுநல்வாடை யியற்றினர் என்பது போதரும். இதற்கேற்ப இளஞ்சென்னியைப்பற்றி அவன் கண்ணகியார்க்குக் கோயில் சமைத்தானென்ற செய்தியன்றி வேறொன்றும் நூல்களிற் காணப்படாமையாலே இவன் சிறிது காலந்தான் உயிர்வாழ்ந்து அரசு புரிந்தான் என்பது வெளியாகின்றது. 'பொருநனு மிளையன்' என்று புறம் 78-ல் நெடுஞ்செழியன் குறிக்கப்படுவதால், அவன் தலையாலங்கானத்துப் போர்புரிந்த போது இளங்காளையாயிருந்தானென்று யான் மேலே சுட்டியதும் ஈண்டைக்கு அமைவுடைத்தாதல் காணப்படும். ஏனெனில், அவன் முதியனான பின்றையே போர் நிகழ்த்தினானெனின், நக்கீரர் அத்துணைக்காலம் உயிர் வாழ்தல் அசம்பாவிதமாகலான். இக்கூறியவற்றை யுற்றுநோக்கும் போது உக்கிரப் பெருவழுதியும் ஆண்டில் இளையராகவே

யிறந்திருத்தல்வேண்டும், அல்லாக்கால் அவன் விருத்தனு யிருக்கும்போது நக்கிரர் இளைஞராயிருந்தாராகல்வேண்டும். இவர் புலவர்க்குள்ளெல்லாம் தலைமை பெற்றாராகலின் இவ்வாறு கொள்ளுதல் அத்துணைப் பொருத்தமுடையதன்று என்பது உறுதிப்படுகின்றது.

இக்காரணங்களால் நக்கிரர் ஆண்டின் முதியவராயிருந்தபோது நெடுநல் வாடை யியற்றினரென்பதும், அப்பாட்டுடைத்தலைவனது காலம் 2-ம் நூற்றாண்டின் பிற்பகுதியாயிருக்கலா மென்பதும் நிசசயித்தல் தகும்.

தலைக்குறிப்பாராய்ச்சி.

இனி, நெடுநல்வாடை யென்ற செய்யுளின் தலைக் குறிப்பைப்பற்றி சிறிது ஆராய்சசி செய்யப்படும். இப்பெயர் நெடிதாகிய நல்லதோர் வாடையென விரிதலில் பண்புத்தொகையாகும். பகைவர்மேற் சென்ற தலைவனைப்பிரிந்து இராக்காலங்களிற் சிறிதும் இமை பொருந்தப் பெறுளாய் இருக்கும் தலைவி மிகவும் வருத்தத்தோடு உயிர் தாங்குபவளாதலியற்கை. மற்றைய காலங்களைக் காட்டினும் வாடைக் காலத்தில் நுகர்ச்சி விருப்பம் மிகுதியும் நிகழ்வதாகும். ஆதலால் அக்காலத்தே அது நுகரப் பெறுதது மட்டுமின்றி இன்னுயிர் மணாளன் தன்னருகிருக்கவும் பெறுதாளாகிய தலைவிக்கு ஒவ்வொரு நொடியும் ஒரூழியாகத் தோன்றும் என்பது வெளிப்படை. ஆகவே அவட்கு இஃது நெடியதோர் வாடையாயிற்று. தலைவற்கோவெனில், அவனது விருப்புப் போகத்தின்கண்மட்டும் நிகழ்வதொன்றன்று. பலவரசர்கட்குள் ளொருவன் என்று வைத்தெண்ணப்படுதலை வேண்டாது அவர்க்கு ளெல்லாம் தலைமை பெற்றானிவன் என்று புகழப்படுதலை வேண்டிப் போகத்தின்கண் மனமற்றுத் தன்னோடொப்ப வீற்றிருந்த அரசர்கள்மேற் படையெடுத்து வேற்றுப்புலத்துப் போதலை மேற்கொள்ளு

கின்றான். பிற அவாவின்கண் எவ்வளவு தூரம் இவன் பற்றறு கின்றானோ அவ்வளவு தூரம் தான் மேற்கொண்ட தொழின் மேலேயே கருத்துக்கொண்டு மனவலியுடையனாகின்றான். ஆகவே அவனது நோக்கத்தை முற்றுற முடித்தற்கு மன வெழுச்சியை யூக்குதலினாலே, இஃது அவற்கு நல்லதோர் வாடையாயிற்று.

இச்செய்யுள்ளே தலைவன் பிரிந்தமைகூறிக் காமத்தினி டத்தே அவனை வெற்றியெய்த வைத்தலின் இது பாலையும் அதற்குப்புறனாய வாகைத்திணையுமாயிற்று. பாலையினது உரிப்பொருள் பிரிதலும் பிரிதல் நிமித்தமும். வாகை- பகைவரை வெல்லுதலும் வெல்லுதல் நிமித்தமும்.

நூலிற் பொதிந்த பொருள்

இனி நெடுநல்வாடை யென்னும் செய்யுளிற் பொதிந்த பொருளினைச் சுருங்க வுரைக்கின்றேன். தலைவி, தலைவன் பிரிந்தமையை ஆற்றாளாய் அவன் வரும் வழிமேல் விழி வைத்துக் கழிக்கும் குளிர்கால இரவினுள் ஒன்றைப் புலவர் பெருமானாகிய நக்கீரர் வருணிக்க எடுததுக்கொண்டார். இரவுப் பொழுதை வருணிக்க எடுத்துக்கொண்டதின் கார ணம் என்னென்று சிறிது யோசித்தல் வேண்டும். பகற் போதில், எண்பெடுத்துக்கொண்ட அரசியைப்போலும் ஓர் தலைவி தோழியர் பலர் தம்மைப் புடைசூழ யிருப்பர். இவர் பிரிவினால் வருந்துவதை யவர்கள் கண்ணுற்றால், தேறுதல் சொல்லுதல் ஒருதலை. அரசியார்க்குக் கணவ னது நினைவுண்டாகாவண்ணம் பகற் காலத்துப் பற்பல ஆடல் பாடல்கள் இருக்கும். அன்றியும் பகற் பொழுது போகந் துய்த்தற்குரிய காலமுமன்று, காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந்நோய் என்பவாக லின். இக்காரணங்களால் பகற் பொழுது அத்துணை நெடி யதாய்த் தோன்றுதலில்லை. இரவிலோவெனில், மகளிருள் ஒருவர் இருவரைத்தவிர மற்றோர் தத்தம் இருக்கை ஏகுத லினாலே, தனிமையாயிருகக நேர்ந்த தலைவிக்கு ஊற்றுக்

கண் போலும் அவளது நெஞ்சிலே நினைவு ஒன்றன்பின் னென்றாய் உதித்துக் காமம் கைம்மிக அளக்கொணுத் துயர அளக்கரில் விழுதலின், அது நெடியதாய்த் தோன்றுமென்க.

இவ்வண்ணமாகத் தலைவிக்கு நெடியதாயும், தலைவற்கு நல்லதாயும் உள்ளது வாடை. தலைவியை நோக்கும் போது அகத்திணையாகவும், தலைவனை நோக்கும்போது புறமாகவும் ஆயிற்று. நூலின் கண்ணும், வாடைக் காலத் தை வருணித்த பின்னர், தலைவிக்கு இரவு நெடியதாயவா றும், தலைவற்கு அக்காலம் நல்லதாயிருக்குமாறும், தலைக் குறிப்புச் சொற்களை நிறுத்த முறையிலே கூறுதல் ஈண்டு நோக்கிக்கொள்க. மேற்கூறியவற்றால், இந்நூல், அகமும் புறமும் விரவிவந்து இனிமை பெற்றுள்ளது என்பது தெளி வாம். ஒரு செய்யுளில், அகத்தை மட்டும் அல்லது புறத் தை மட்டுங் கூறினால், அஃது இத்துணைச் சிறப்புப் பெறா தென்பது சொல்லாமே யமையும்.

இப்போது கார்காலமாகையால் மேகம் பருவம் பொய் யாமல் புதுப் பெயலைப் பொழிந்து சிறிது இடைவிட்டிருக் கின்றது. ஆறு முதலியன பெருக்கெடுத்து ஓடுகின்றன. இடையர்கள் தம் ஊர்க்கு அண்ணிய இடத்திலே மேய்த் துத் தம்முரின் கண்ணேயே தங்கப்பெறாமையாலே வருந்தி, வெள்ளத்தை முனிந்து தூரவிருக்கும் மேட்டு நிலத்தின் கண்ணே பசுநிரைகளை மேயவிட்டுப் போகட்டு, பறப்பறை கொட்டக் குளிர் மிக்கு வருத்துகையினாலே பலர் ஒருங்கு கூடி நெருப்பெழுப்பித் தம் கையை நெருப்பிலே காய்த்தி அதிற் கொண்ட வெம்மையைக் கன்னத்திலே உய்த்துக் குளிர் நீங்கி யிருக்கிறார்கள். விலங்குகள் இரை தேடற்றொ ழிலை மறந்து ஒடுங்கியிருக்கின்றன. குரங்குகள் குளிர் மிகு தியால் நடுக்கமெய்தி உறுப்புகளைச்சுரித்து வலித்துக்கொண் டிருக்கின்றன. காற்றின் கொடுமையால் பறவைகள் நிலத் தே வீழ்கின்றன. எனினும், புதுப்புனல் வரும் வேகத்தி ற்கு ஆற்றாது விலகி ஓடுதலில்லாத நீர் இருக்கும் இடங்க

ளிற் பாயுங் கயல் முதலிய மீன்களின்மேற் கருத்து வைத்தனவாய் கொக்குக் கூட்டமும் நாரைகளும் தத்தித்தத்தி இயன்ற மட்டும் பறந்து வந்து இரை கொள்ளுகின்றன. பசுக்கள் இயற்கையிலேயே தம் கன்றுகளின் மேற்கொண்ட அன்பை மறந்து அவைகளை உதறி உதைக்கின்றன. அதிமோகமாய் வருஷித்த மேகமும் இப்போது சிறு துவலையாகப் பிலிற்றுதற்குக் கற்றுக்கொண்டிருப்பது போலத் தோன்றிற்று. இவ்விதமான கிராமாந்தரங்களிலிருந்து நாம் நகர்ப்புறமணுகியதும், வயற்புறங்கள் தோறும் நீர் வளத்தால் நெற்பயிர்கள் செழித்து வளர்ந்து கதிர்கள் முற்றி இறைஞ்சி நிற்பதையும், அடிபருத்த கமுகினது பாளைவிரிந்த தாறுகளில் பசிய காயகள் நீர்திரண்டு புறம் பருத்து முற்றிக் குலை குலையாய்த் தொங்குவதையும், பூக்கள் நிரம்பிய குளிர்ச்சியான சோலைகளிற் கிளைகள் ஒன்றோடொன்று உராயந்து தழுவி நிற்ப அவைகளிலிருந்து மழைத்துளிகள் இடையறாது வீழ்நதுகொண்டிருப்பதையுங் காணப்பெறுகின்றோம். இத்தகைய இரவில் அரசியார் கண்படுக்கும் பள்ளியறைக்கு நாம் சென்று அவ்விடத்து அவரெய்துறும் பருவரலுக்குள்ளுடைந்து அநுதாபித்தலியலும். அதனால் அங்கே சேறுதற்கு, நகரத்திற்கு வெகுதூரத்திலுள்ள கிராமப் பிரதேசங்களிலிருந்து புறப் பட்டு நம்மையு முடன்கொண்டு போதுகின்றார் நக்கீரர்.

புலவரோடு கூட நகர்க்குள் நாம பிரவேசித்ததும் மாலைக்காலமாகின்றது. தெருக்கள் ஆறு கிடந்ததுபோல அகன்று நெடியதாயிருக்கின்றன. அங்கே அழகிய திண்ணிய தோள்களையும் தேகப்பயிற்சியால் சதைகள் வறப்பெற்று முறுக்குண்ட மேனியையுமுடைய மிலேச்சர்கள் கள்ளுண்ட மகிழ்ச்சியால் தலைதடுமாறி மழைத் துவலையையும் சிறிதுங்கருதாதவராய், பகல் கழிந்து விட்டமையையும் நோக்காதவராய், துகில்களை முன்னும் பின்னும், நால விட்டுக்கொண்டு தமக்கு வேண்டிய விடத்தெல்லாம் திரிவதைக் காண்கின்றோம். தெருவில் இருமருங்குமுள்ள

மடவரல் மகளிர் பருவத்தின் தன்மையால் இரவும் பகலும் தெரியாதவராய் மயங்கிப் பின் பூந்தட்டிலே இட்டு வைத்திருக்கும் பிச்சிப்போதுகள் மெலமெலென முகையவிழ்ந்து நறுமணங் கமழுகையினலே அந்திக்கால மாயிற்றென்பதை யுணர்ந்து இரும்பினுல் செய்த தகளியில் நெய் வார்த்துத் திரியிட்டு விளக்கேற்றி, நெல்லும் மலருந் தூவிக் கை தொழுகின்றார்கள். அங்காடிகளெல்லாம் மாலைக்காலத்தே மிகச்சிறப்புடனே விளங்குகின்றன. இங்ஙனம் பொழுதறிந்து கோடற்கு வகைதெரியாத மனையுறை புறவுகள் தம்பேட்டுகளுடனே இரைதேடற்குச் செல்லாது, ஒரே நிலையிலிருந்து கடுத்த காலானது ஆறும்படியாக இடம் மாறி மாறி கபோதகத்தலையில் இருக்கின்றன. வேனிற்காலத்து உபயோகப்படும் தண்ணறுஞ் சாந்தமும் சிலாவட்டமும் இப்போது குளிர்ச்சி மிகுதியினுல் மகளிர்க்கு வேண்டப்படாது கழிய, அவர்தங் குற்றேவலாளர்கள் கொள்ளின் நிறத்தை யொத்த சாத்தம்மியிற் கஸ்தூரி முதலிய பசுங்கூட்டு அரைக்கின்றார்கள். மாலையணிந்து கோடலை விரும்பாதவராய் சின்மலர் பெய்து முடித்தலை வேண்டித் தம் கூந்தற்கு அகில் முதலியவற்றாலுண்டாகும் நறும்புகை ஊட்டுகின்றார்கள். கைவல் கம்மியன் அழகுபெற இயற்றிய ஆலவட்டங்கள் உறையிடப்பட்டுச் சிலம்பியினது வெள்ளிய நூல் அவைகளிலே பற்றிப்படர்ந்திருப்ப முளைக்கோலிலே தொங்குகின்றன. வேனிற்காலத்துத் துயில் கொள்ளும் மேன்மாடத்தின் அறைகளில் தென்றற் காற்று மெல்லெனத் தவழும் சாளரங்கட்கு எதிரே நின்று உலாவாது, அச்சாளரங்களை நன்கு பொருந்த அடைத்துத் தாழிட்டு இளையோரும் முதியோரும் வாடைக்காற்றின் கொடுமைக்காற்றாது நெருப்பெழுப்பிக் குளிர்காய்ந்து கொண்டிருக்கின்றார்கள். வேனிற்காலத்து ஆடற்றொழிலை விரும்பும் மகளிர், அவ்வாடலை இப்போது துறந்து, பாடலை விரும்பி யாழினை யெடுத்து அதன் நரம்புகள் குளிர்ச்சியாலே நிலைகுலைந்திருப்பக்கண்டு தம்மார்பகத்தே தடவி வெம்மையூட்டிப் பண்ணுமுறை நிறுத்துகின்றார்கள்.

இவ்விதமாக, காலமழை செறிந்த வாடைக்காலத்து நிகழ்வன முழுமையுங் கண்குளிரக்கண்டு சிறிது தூரம் சேறலும், அரண்மனையின் கோபுரவாயிலை யடைகின்றோம். அக்கோபுரந்தான் பெரியதொரு குன்றினைக்குடைந்து வாயிலமைந்ததுபோன்ற தோற்றமுடையதாய், வெண்டிறழு கொடியொடு மேவமுஞ்சென்று புகும்படியாக உயர்ந்த நெடுநிலையுடையதாகவு மிருக்கின்றது. உத்திரக்கற்கவியிலே நடுவே திருவும் இருபுறத்தும் இரண்டு செங்கழுநீர்ப்பூவைக் கைக்கொண்ட இரண்டு பிடியும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அரசனது பெரும் பெயர்க்கு ஒப்ப மனை வகுத்ததுபோலுமிருந்தது. நிலையிலே அமைந்திருக்கும் கதவுகளிரண்டும் கம்மியனது வேலைப்பாட்டின் திறத்தால் புகையுமுட்புக இடைவெளியின்றி நன்றாய்ப் பொருந்தியிருக்கின்றன. ஆனால் புலவரது பெருங்கருணைக்குப் பாத்திரராகிய நாம் அவருடன் உட்செல்லப்பெற்று அரண்மனை முற்றத்தை அடைகின்றோம். அவ்விடத்தே மணல் பரப்பியிருக்க, கவரிமாவும் அனனமும் அதில் தாவித்திரிகின்றன. குதிரைகள் பந்தியிலேயே நிற்க நேர்ந்ததற்கு வெறுத்து உணவைக் குதட்டுங் குரலும், வெள்ளிய நிலா முற்றத்தே மகரவாயாகப்பகுத்த வாயிலிருந்து கலங்கின மழைஜலம் வந்துவிழும் ஓசையும், மயில்கள் செருக்கி ஆரவாரிக்கும் இசையுஞ் செறிந்து மலையினிடத்து ஓசைபோல ஓரோசையாய் கேட்கப்படுகின்றதன்றி மற்றக்காலங்களைப்போல வேறுபடுத்து அறியக்கூடிய ஆடல் பாடல் முதலிய இன்னிசை கேட்கப்பெறுகின்றிலம். இனி, அரண்மனையினுள்ளே பிரவேசித்ததும் யவனர்கள் தொழில்முற்ற இயற்றிய பாவைகள் நெய் வார்க்கப்பட்ட தகளியில் விளக்கமேந்தி அழகிதாகக் கட்டுக்கள் தோறும் நிற்கின்றன. கட்டுக்களை ஒவ்வொன்றாய்க் கடந்து அரிதினியன்ற அந்தப்புரத்தை யடைகின்றோம். அது, வரைகண்டன்ன தோற்றத்தை யுடையதாய், வரையிலே இந்திரதனுசு கிடந்தாற்போல வீழ்ந்து கிடக்கும் கொடியினதாய், கரியதிண்ணிய தூண்களையும், செம்பிலே செய்யவல்ல தொழில்கள்

பலவும் அமைந்த சுவரினையுங்கொண்டு கவினுற விளங்குகின்றது.

பீடுகெழு சிறப்பிற் பெருந்தகையல்லது ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின் கர்ப்பக்கிரகத்தினுள்ளே, புலவர் சிறிதும் அஞ்சாது நம்மையிட்டுக் கொண்டு சென்று அரசரது சயனக் கிரகத்தினுள்ளே நம்மை உய்க்கின்றார்.

இவ்வழகிய அறையின் கண்ணே, நாற்பதிற்றியாண்டு சென்ற யானையினது தந்தத்தினை யளவுதகச் செத்தி இலைத்தொழில் இடையிடையே பெய்து சமைந்த பெரியதோர் கட்டில் காண்கின்றோம். ஒழுக மெல்லிதாய்த் திரண்ட கால்களிலே யமைத்துள்ள குடங்கள், அசைந்து நடக்குமியல்பினவாகிய கர்ப்பிணிகளது பால்கட்டி வீங்கிய ஸ்தன்னிய பாரங்களை யொத்து விளங்குகின்றன. மூட்டுவாய் சிறிதுந் தெரியாதபடி நன்கு பொருந்தின சாளரங்களை ஆணி கொண்டு மேற்கட்டியிற் றைத்துக் கட்டிலைச்சுற்றி முத்துவட நாற்றியிருக்கின்றது. கட்டிலின் நடுவிடத்திலே புலிவடிவம் பொறித்த அழகிய நிறம் பொருந்திய தகடு ஒன்று பரப்பியிருக்கின்றது. மெல்லிய உரோம முதலியன உள்வைத்த மெத்தை யதன்மேல் இடப்பட்டிருக்கின்றது அன்னத்தூவிகளைப் பரப்பி, ஒள்ளிய துகிலொன்றும் அதில் விரித்திருக்கின்றது.

இன்னணமமைந்த படுக்கையின் மேலே ஓர் பெண்மணி படுத்திருப்பக் காண்கின்றோம். கருத்தொருங்கிக் கணவன் மேலே நினைவு வைத்தவளாய்க் கிடத்தலின், மனோபாவகத்தினாலன்றிச சரீரியாய் நாமங்கிருந்த போதிலும் நம்மை யறியக்கூடாத நிலைமையிலிருந்தாள். முக்தாஹாரங்களைசசுமந்து அழகு பெற்றுத்தோன்றிய அவள் மார்பிடத்தே, திருமாங்கல்ய மட்டும் தாழ்ந்து அசைந்து கிடப்பதையன்றி வேறொன்றும் காணக்கூடவில்லை. புனைதல் செய்யாமல் அவளது அளகம் நுதற்புறத்திலே யுலறிக்

கிடக்கின்றது. ஒளி மிகுந்த குழைகள் கவின் பெறக்கிடந்த அவள் காதிலே ஒரு சிறு தாளுருவியமூழ்ந்திக் கிடக்கின்றதே யன்றி வேறொன்றுமில்லை. பொற்றொடி கிடந்து தழும் பேறியிருந்த அவளது முன் கையிற் சங்கினாற் செய்த வளை கள்தாம் காணப்படுகின்றன. அவ்வணங்கனாரது திவ்ய சரீரத்திலே மெல்லிய பட்டாடையொன்றுமின்றிச் சாதா ரணமான புடைவையொன்றுதானிருக்கின்றது. இவ்வித மாக, வண்ணங்களைக் கொண்டு எழுதப்பெறாது வடிவமட்டுங் காட்டப்பட்ட சித்திரம் போன்று அவள் பங்க்கையிற் கிடந் தாள். இயற்கை வனப்பு வாய்ந்த சிலதியர்கள் அரசியி னது திருவடியை வருடி அவடகு ஆற்றாமை மிகுந்ததி னாலே, நம் இன்னுயிர்த் தலைவர் விரைவில் வந்து நம்மை அடைகுவர் எனப் பலவாறாக முகமன் இயம்பியும் அவைக ளைக் கருத்துட் கொள்ளாளாய் மிகக் கலங்கிக் கட்டிற்றிரை யிலே மெழுகுசெய் படத்தி லமைந்த சந்திரனோடு பிரி வின்றி யிருக்கும் உரோகிணியைப் பார்த்து நெட்டுயிர்த்துக் கண்ணீர் மல்கித் ததும்பி வழியக் கடைக்கண்ணில் தம் விர லைச் சேர்த்திச் சில நீர்த்துளிகளைத் தெளித்துத் தனிமை யாகப் போக்கருந் துயரப்புணரியில் அழுந்திக்கிடக்கின் றாள். நன்று : இத்துணைத் துன்பத்திற்குக் காரணமான அரசன் யாண்டுளன் ?

அரசன் இருக்குமிடத்தை அறிவுறுத்தற்குப் புலவர் நாட்டைக் கடந்து வெகு தூரத்திற்கு நம்மை இட்டுக் கொண்டு செல்கின்றார். அங்கே பகைப்புலத்திலே கார்கா லத்துப் பாசறைக்கண்ணே இருக்கின்றான் அரசியால் விரும்பப்பட்டவன். இந் நள்ளிரவில் இனிய கனாக்கண்டு நித்திரை செய்துகொண்டிருக்கின்றானோ ? இலலை. அவனும் தன் தலைவியை நினைத்துக் காம வசத்தனாய் உழல்கின்றானோ ? இல்லை ; இல்லை. அவ்விழிய செயலுக்கு இவன் உடன்படான் என்று அறிக. யானையொடு மலைந்து வென்றி கொண்ட வீரர்களது விழுப்புண்களைக் கண்டு பரிகரித்தற்குப் புறம் பே போதருகின்றான். வடதிசைக்கண்ணிருந்து வருகின்ற

குளிர்ந்த காற்றிற்கு எதிர்ப்பட்ட விளக்கினது சுடர் தெற்கே சாய்ந்து எரிகின்றது. தனது தோளிலிருந்து நழுவி விழ்ந்த துகிலை ஒருபக்கத்தே அணைத்துக்கொண்டு தனது உறை கழித்த வாளினை ஏந்தி வருபவன் தோளிலே தன் கையை அமைதியொடு சேர்த்தி யிருக்கின்றான். இங்ஙனம் வரும்போது யுத்தத்திற்குச் சன்னத்தனாய் இருப்பதைத் தெரிவிப்பன போலச் சேணமிட்ட குதிரைகள், மழைத்துளியை உதறிப் போகட்டுக் கனைக்கின்றன. தனக்கு முன்னாலே செல்கின்ற சேனாதிபதி புண்பட்ட வீரரை முறையே காட்ட அவர்களுக்கு அகமலர்ச்சி யுண்டாகும் வண்ணம் சுமுகனாய் இன்சொல் சொல்லித் தன்னுயிரினுமினியராகிய சிலரொடு பாசறைப் புறத்தே திரிதருகின்றான்.

இவ்வண்ணமாக, தலைவி தலைவனது நிலைமையைக் கண்ணுற்ற நமக்குள் யாவர்தாம் போர் நன்முடி வெய்தப் பெற்று அரசன் விரைந்து திரும்புதலை விரும்பாதவர்?

இதுவே செய்யுளிற் குறித்துள்ள பொருள் இனி, செய்யுளினது நலம் சிறிது பேசப்படும். பாட்டிற் சொலலக்கருதிய தலைமைப் பொருளைப் பல்வேறு பிரிவு படுத்து சிதைவுறக்காமல் ஒருமைப் படுத்தி யாவரும் எளிதின் உணரக் கூடிய இயல்பும் இனிமையும் பெறும்படி அமைத்த ஆற்றலும், அவவிஷயத்தைத் தோற்றுவாய் செய்து சிறிதும் இடர்ப்படாமல் செய்யுட் போக்கிலேயே வளர்த்து முதிர்ச்சியடைவித்த திறனும், செய்யுட் பொருள் நிகழ்தற்கு இடனாகிச் செய்யுட்குத் துணையாயமைந்த இயற்கையினது நலன்களை உண்மையின் வழாமல் மனங்களிப்ப வருணித்த அருஞ்செயலும், கருதிய பொருள் கற்பார் மனத்திற் பதிந்துகிடந்து இன்புறவித்தலையே வேண்டி ஒவ்வொரு வரியையும் அதற்கேற்ப அமைத்த கூர்த்த அறிவும், சுவையறி நுட்பமும், பெரிதும் வியக்கற் பாலனவேயாம்.

பிற்கால நூல்களிற் பயிற்சி மிக்குள்ளா ரொருவன்

இச்செய்யுளைக் கற்பானாயின் அவன் காணும் வேறுபாடு மிகுதியாயிருக்குமென்பதில் ஐயமில்லை.

I. பிற்கால நூல்களிற் பெரும்பாலான எதுகை மோனையாதி கட்டுக்களினாற் பிணிவுறுக்கப்பட்டுப் பொருள் வளமின்றி மிகைபடக்கூறல் கூறியது கூறல் என்பவைகளுக்கு எடுத்துக்காட்டாக கொள்ளும்படி செய்யுளினது உண்மை இயல்பறியாது சுவையில்லாத சொற்களை இடர்ப்படுத்துப் புணர்த்தியாக்கப்பட்டவைகளேயாம் "சொன்னயமும் பொருணயமும் தொனிநயமும் துறுமி விளங்காநின்ற" என்று ஆக்கியோனை எழுதின முகவுரைகளிற் காணலாமன்றி நூலினுள்ளே இவைகளைக் காண்பது அரிதினுமரிது. ஓசை நயத்தில் இவர்கள் அறிந்தவையெல்லாம் எதுகையும் மோனையும் முறைப்பட வரலேயாம். இவ்வித விதிகட்கு உட்பட்டமையால் ஓசை வேறுபாடின்றி ஒரே ஓசையினையுடைத்தாய் கற்போர் மனத்தினைச் சலிப்படையச் செய்கின்றது. சங்கச்செய்யுட்களிலோ வெனில் பொருள் வளத்தைப் பெரிதுங் கருதி, பொருட்கேற்பச் சொற்களையமைத்து, சொற்களிலும் சுவையுடைய சொற்களையே பிரயோகப்படுத்தி, பொருட்பொருத்தமுற ஓசையினை அடிக்கடி வேறுபடுத்துக் கற்றோர் மனம் களிகூர்ந்து தளிர்க்கும் வண்ணம் இயற்றப்பட்டனவாகும். நமது நெடுநல்வாடையில் மிலேச்சர்கள் கட்குடித்து வெறிகொண்டு மழையில் விரைவாக இறுமாந்த நெஞ்சினர்களாகத் திரிகின்றதனை "முடலைக்கண்ணி முழுவலிமாக்கள், வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து, துவலைத் தண்டுளி பேணார் பகலிறந்து, இருகோட் டறுவையர் வேண்டுவயிற் றிரிதர" என்று இங்கே விரைந்து இறுமாந்த நடையை செவ்விதி னமைத்தமை காண்க. நெடுநல்வாடையிற் சுவையுடைச் சொற்களை ஆசிரியர் பிரயோகித்திருக்கின்றார் என்பதை 'அகலிருவிசும்பிற்றுவலை கற்ப' 'கதிர் வணங்க' 'பண்ணுமுறை நிறுப்ப' சிலம்பிவானூல் வலந்தன தூங்க' 'நன்னுதல் உலறிய சின்மெல் லோதி' 'முகனமர்ந்து' முதலிய உதாரணங்களால் அறிக.

II. வடமொழிக்கலப்பும் பிற்றைக்காலத்து நூல்களில் மிகுதியாகக் காணப்படும். சங்க நூல்களிலே நூற்றுக்கு நான்கு விழுக்காட்டிற்குமேற் காணப்பெறுவதில்லை. நெடுநல் வாடையில் சற்றேறக்குறைய 610 முழுப்பதங்கள் இருக்கின்றன. இவைகளில் 17 வடமொழிச் சொற்கள் தாம் காணப்படுவன. ஆகவே இங்கே நூற்றுக்கு மூன்று வீதந்தான் வடமொழிச் சொற்கள் உள்ளனவென்பது போதரும்.

III பிற்றைக்காலத்து நூல்களிலே அழகு செய்வனவாக கருதப்படுகின்ற அலங்கார வகைகள் மிகுதியுங் காணப்டுகின்றன. அவைகள் உண்மையான செய்யுட்களை சுவைத்தறிந்த வொருவனுக்கு மிகவும் அருவருப்பைத் தருகின்றன. உண்மையில் வழுவியும், சில விடங்களில் உண்மைக்கு முற்று மாறாகவும், பொருளினது தகுதியை நோக்காமலும், உலகின் கண்ணுள்ள பொய்களை யெல்லாந் திரட்டி அலங்காரம் கற்பிக்கின்றனர்; இயற்கை வனப்பின்கண் ஈடுபட்டு நூலியற்றினோரல்லர்; உயர்வு நவிற்சியணியையே சிறந்ததாக கொண்டாடுவர். சங்க இலக்கியங்களிலே பயின்று வரும் அணிகளெல்லாம் உண்மையின் வழுவுதல் இன்று உயர்வு நவிற்சியைக்காண்பது துர்லபம். பொருளினது தகுதிக்கு ஏற்ப உவமானங்கள் காணப்படும். பசும்புற் றரையிலே வெள்ளிய மலர்களை ஆங்காங்குப் பெய்தவிடத்து அது எவ்விதமாய் ஒருவனை இன்புறுத்துமோ அவ்விதமாகவே சங்க நூல்களிற் காணப்படும் அணிகளு மின்புறுத்தும். இயற்கை வனப்பினை நன்கு ஆராய்ந்தவரென்பது தெள்ளிதிற் புலப்படும். அக்காலத்து நூலாசிரியர் கூறும் உவமானங்களைக் கேட்டமாத்திரத்தில் பெரியதோர் வியப்புண்டாவதன்றி மனோபாவக வுணர்சசியும் கூர்ந்து நுண்மை யடையும். ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட நூலிலே 17 உபமானங்கள் ஆசிரியர் தருகின்றார். அதில் ஒவ்வொன்றும் மிக அழகிதாக அமைந்துள்ளன. உதாரணமாக 'குன்று குயின்றன்ன ஓங்குநிலை வாயிற்பில்' 'கொள்ளுறழ் நறுங்கற் பல்கூட்டு மறுக' முதலிய

வைகளைக் காண்க. தலைவனைக் காணப் பெறாது வருந்திக் கனிவழிந்து கிடக்கும் தலைவிக்கு 'புனையா ஓவியங்கடுப்ப' வென உவமை கூறினர். கம்பர் பெருமானும் இவ்வித சந்தர்ப்பத்தில் 'ஓவியம புகை புண்டதே யொக்கின்ற வுருவாள்' என்று கூறுகின்றனர் இவ்விரண்டினது தாரதம்மியத்தை துலைநாவன்ன மனநிலையோடு சீர்தூக்கியறிக.

IV. செய்யுள் நடையினும் மிகுதியும் வேறுபாடு காணப்படும். பலவகைத்தாகிய அணிகளையும் பூண்டவொருமங்கை உலகிலுள்ள மக்களெல்லோரும் தன்னையே உற்று நோக்கிக்கொண்டிருப்பதாக எண்ணிக் கர்வத்தினால் மீதூரப்பட்டு குறுகுறு எனத் திரியும் நடைக்கும், அழகு மிகுந்த கற்புடைய மங்கை யொருத்தி கர்வமின்றிக் கண்டார் மனம் கனிவுறும்படி எனினும் வேற்றெண்ணம் கொள்ளமுடியாத வண்ணம் பரிசுத்தமான தோற்றத்தையுங் கொண்டு நடக்கும நடைக்கும் எத்துணை வேறுபாடு உண்டோ அத்துணை வேறுபாடு இவ்விருகாலத்துச் செய்யுட்கும் உண்டாம். பிற்காலத்து நூலகளிலே கருதிய பொருளைத் திறனாய் உரைப்பர்; ஆனால் சொல்லும் முறை மனத்தினை வசீகரிப்பதில்லை. பார்ப்பதற்குத் தளுக்காக மினிரும்; ஆனால் உண்மையினுயர்ந்த ரத்னங்களுக்குரிய நீர் ஒளி முதலியன காணக்கிடையா. அழகாகச செய்யப்பட்ட அணிகலன்கள் நிரப்பிய மரப்பாவை ஒன்றினை யந்திரக் கயிறறினால் ஆட்டுவிப்பதுபோலாம் அச்செய்யுளின் திறம். அவைகட்கு உயிரில்லை யென்றே சொல்லலாம்.

செய்புள் ஓசையை நன்கு கவனித்தால் அது சங்கீதத்தில் மிகுதியும் பயிலாது சிறிது பயின்று மெல்லிய குரலோடு ஒருவன் பாடுவானாயின் அஃது எத்துணை இன்பம் பயக்குமோ அத்துணை இன்பந்தான் தருவதாயிருக்கிறது. சங்கச செய்யுள்களெல்லாம் சுவையூறிய செழுந்தமிழ்ச் சொற்களால் அமைக்கப்பட்டு விழுமிய ஓசையுடையனவாயிருக்கின்றன. செல்லாறுதோறும் பொருளாழ்ந்து கற்றோர்க்கு இதயங் களிக்கும்வண்ணம் இயற்றப்பட்டிருக்

கின்றன. ஓசையைக் கருதினல் அது சங்கீத ஞான மும் பயிற்சியும் நிரம்பிய ஒருவனிடத்துக் கண கணவென்று சாரீரம் பேசுவதுபோல மிக்க இனிமையாய் அழகாய் இருக்கின்றது. கேட்கக்கேட்க ஆசை கிளருகின்றது. உதாரணமாக "பின்னமை நெடுவீழ் தாழத் துணை துறந்து நன்னுதல் உலறிய சின்மெல்லோதி, நெடுநீர் வார் குழை களைந்தெனக் குறுங்கண், வாயுறை யழுத்திய வறிது வீழ் காதிற், பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை, வலம்புரி வளையொடு கடிகை நூல்யாத்து, வாளைப்பகுவாய் கடுப்ப வணக்குறுத்து, செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்து,......................புனையா ஓவியங்கடுப்ப' என்றுவரும் அடிகளை உற்று நோக்குக.

V. பிற்றைக்காலத்து நூல்களிற் பலவும் சமய வுணர்ச்சிமிக்க நாளிற் றோன்றினமையாலே அதன் பிராபல்லியத்தினல் நூல்களெல்லாம் வலித்து ஈர்க்கப்பட்டு அதன் வழிச்செல்கின்றன. பண்டைக்கால நூல்களிலே இது காணக்கிடையாது. இதனல் தமிழ்மொழிக்குண்டாகிய ஏற்றமுந் தாழ்வும் இங்கே விரிக்கிற் பெருகும்.

இனி, இந்நூலிலிருந்து உணரத்தக்க பண்டைக்காலத்து வழக்க வொழுக்கமும் நாகரிகமும் சிறிது பேசப்படும். அக்காலத்தில் சிற்ப சாஸ்திரம் வல்லுநர் நல்ல மங்கள சமயம் பார்த்து அந்நேரத்தில் திக்குத் தேவதைகளை வணங்கி மனைவகுப்பார்களென்றும், அரண்மனை முதலியன மிகவும் உயர்ந்தவாய் சாளரங்களுள்ள மேல்நிலை பல உடையனவாய் கட்டப்பட்டனவென்றும், கம்மியர்கள், அவர்கள் செய்த வட்டக்கட்டிலினும், விசிறி முதலியவற்றினும் இடைவெளி சிறிதுமின்றிப் பலகைகளைப் புணர்த்து முறைமையானும் கைவல்லுநர்களாய் இருந்தார்கள் என்றும் நூலை ஒருமுறை வாசிப்பார்க்குந் தெரியாமலிராது. வண்ணங்கொண்டு படம் முதலியன தீட்டுவதினும் சிறந்தவர்களாய் இருந்தார்களென்பது 'புனையா ஓவியங் கடுப்ப' என்றதனானும் 'மெழுகு செய் படமிசை' என்பதனானும்

அறியக்கிடக்கின்றது. கிரேக்கர் முதலிய பிற தேசத்தாரோடு இவர்கள் பழகி யிருந்தார்களென்பதும் அவர்கள் இங்கே வியாபாரத்திற்காக வந்தார்களென்பதும் 'வடவர் தந்த வான்கேழ் வட்டம்' 'யவன ரியற்றிய வினைமாண் பாவை' என்ற அடிகளால் புலப்படுகின்றது. சங்கீதத்திலும் நாட்டியத்திலும் பயிற்சி மிக்குடையவர்கள் இருந்தார்களென்பது 'ஆடல் மகளிர் பாடல்கொளப் புணர்மார்' என்ற அடியால் விளங்குகின்றது. அக்காலத்திலுள்ளவர் வானசாஸ்திரம் முதலியவற்றை நுட்பமாய் அறிந்திருந்தார்களென்பது "மாதிரம், விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம, இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு, யொருதிறஞ் சாரா அரைநா ளமைத்து" என்றும் 'செல்வமொடு நிலைஇய வுரோகிணி நினைவனள் நோக்கி' என்றும் 'நாளொடும் பெயரிய கோளமை விழுமரத்து' என்றும் வருவனவற்றால் உணரப்படும். அரசன் போர் வீரரை வித்தியாசம் பாராட்டாது சமமாய் நடத்தி வந்தானென்பதும் போரிலே புண்பட்ட வீரர்கள் புறக்கணிக்கப்படாராய்த் தக்க வாறு பாதுகாக்கப்பட்டு வந்தார்களென்பதும் நூலின் கடையடிகளால் விளங்குகின்றன. மக்கள் தாமும் குளிர்காலத்து நெருப்பெழுப்பிக் குளிர்காய்வதும் இருட்டியவுடன் பெண்கள் விளக்கினை நெல்லும் மலருந் தூவிக் கைதொழுதலும் அக்காலத்து வழக்கமென்பது 'பகுவாய்த் தடவிற் செந்நெருப்பார' என்றும் 'நெல்லுமலருந் தூஉய்க் கைதொழுது' என்றும் வரும் அடிகளால் உணரலாம்.

இனி, இந்நூற்கு உரைசெய்த நச்சினார்க்கினியரைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லி நக்கீரனாது சரித்திரத்தைக் கூறுகின்றேன். நச்சினார்க்கினியர் பதினோந்தாம் நூற்றாண்டினிறுதியில் இருந்தவரென்பது பலருடைய கருத்தாகும். அவர் மதுரை வாசியாகிய ஓர் அநதணர். தென்மொழியிலும் வடமொழியிலும் பயிற்சி மிக்குள்ளவர். அவரது உரைத்திறமும் கூர்த்த அறிவும பெரிதும் வியக்கற்பாலவாம். அவர் பத்துப் பாட்டுத் தவிர, கலித்தொகை, சிந்தாமணி, தொல்காப்பியம் முதலிய அரும்பெரு நூல்

களுக்கு உரைசெய்தருளியிருக்கின்றார். இத்துணைப் பெருமையாளராகிய இவர் பத்துப் பாட்டின்கண் ஒரோ விடங்களில் செய்யுளை அலைத்து முன்பின்னாகக் கூட்டிச் சொன்முடிபு காட்டிப் பொருள் கொள்ளுவர். இதனை மாட்டு என்பதன்பா லாக்குவர். இது செய்யுளியற்கைக்கு மாறுதல் நன்குணரப்படும். இந் நெடுநல்வாடையிலும் ஏறக் குறைய பத்து இடங்களில் ஏலாவுரை உரைக்கின்றார்.

இனி நக்கீரரைப் பற்றிச் சிறிது பேசி எனது ஆராய்ச்சியை முடிக்கின்றேன். இவர் மதுரைக்கணக்காயனார் மகனாரென்றே பெரும்பாலும் குறிக்கப்படுவர். கணக்காயர் என்போர் நூல் கற்பிக்கும் ஆசிரியர். எனவே, இவர் தந்தையார் நூல்கற்பிக்கும் ஆசிரியருள் ஒருவராயிருந்தாரென்பது தெளிவாம். இவர் சங்கறுப்போர் குலத்திலுள்ளோரென்று சொல்லப்படுவர். அதற்கு ஆதாரம் திருவிளையாடற் புராண முதலியன. இக்குலததவா முற்காலத்தே தனியே குடியிருந்து வந்தவரென்பது மணிமேகலையில் ' விலங்கரம் பொருஉம் வெள்வளை போழ்நரோ, டிலங்குமணி வினைஞ ரிரீஇய மறுகும் ' என்ற அடிகளால் விளங்குகின்றது. அகநானூற்றிலே 24-ம் பாட்டிலே பிராமணரில் ஒருவகையினர் இத் தொழிலை முற்காலத்துச் செய்தார்களென்று வெளிப்படுகின்றது. நக்கீரர் என்ற சொல் ' வாக்மி ' என்னும் பொருளில் வந்த வடமொழித் திரிபான பெயர் என்று செந்தமிழ்ப் பத்திராசிரியர் கருதுகின்றார். இனி இவரியற்றிய நூல்கள் முருகாற்றுப்படையும் நெடுநல்வாடையும், பதினொராந் திருமுறையிற் கோத்துள்ள சில நூல்களும் இறையனார் களவியலுரையும் என்பர். பதினொராந்திருமுறையிலுள்ள நூல்கள் கட்டுரைச் சுவையினும் நடைத்திறத்தினு நெடுநல்வாடையினின்று பெரிதும் வேறுபடுகின்றன. அச்சிட்ட களவியலுரை இளம்பூரண வடிகள் இயற்றியதென்பது சிலர் கருத்து.

இனி, நக்கீரர் இயற்கை நிகழ்வினையும், உண்மையையும், பெரிதும் விரும்பிக் கொண்டாடி அதற்கு மாறாகவுள்

எனவெல்லாம் குற்றமென்கின்ற அரும் பெருங் கொள்கை யினராவரென்பது 'கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி' என்று வரும் இறைவன் கவிக்குங் குற்றங் கூறி அவன் நெற்றிக்கண்ணைத் திறந்து அச்சுறுத்திய வழியும் குற்றம் குற்றமேயென்று சாதித்து, பின் இறைவன் பெருமையை யுணர்ந்து அடியாராயினாரென்று வரும் கதை நன்கு விளக்குகின்றது. இக்கதைதான் அவரது அழிவில்லாப் பெரும் புகழுக்கு அறிகுறியாக நின்று உலவுகின்றது. நெடுநல்வாடையின் ஆசிரியரது புகழினை எடுத்துப்பேசி முடிக்குந் திறம் என்னிடத்தில்லையாகலின் இம்மட்டோடு நிறுத்துகின்றேன்.

இக்கட்டுரையின்கண்ணே, பாட்டுடைத் தலைவன் சிறப்பும், அவன் இருந்து அரசியற்றிய காலமும், நக்கீரனார் இச்செய்யுளியற்றிய காலமும், செய்யுளின் தலைக்குறிப்புப் பொருளும், அழகும், நூலிற் பொதிந்த பொருளும், செய்யுளின் நலங் கூறுமுகத்தால் பண்டைக்காலச் செய்யுட்கும் பிற்பட்ட காலத்துச் செய்யுட்கும் உள்ள வேறுபாடுகளும், நூலியற்றிய காலத்து வழக்க வொழுக்கமும் நாகரிகமும் ஒருவாறு ஆராய்ச்சி செய்யப்பட்டன. பின், நச்சினார்க்கினியர் உரைத்திறமும் நக்கீரரது சரித்திரமும் பெருமையும் குறிப்பிக்கப்பட்டன.

அருகி வழங்கிய

சில வினை விகற்பங்கள்.

சென்னை யூனிவர்ஸிடி-தமிழ்-லெக்ஸிகன் ஆபீஸ்
தலைமைப் பண்டிதர்

மு. இராகவையங்கார்

எழுதியது.

ஆசிரியர் தொல்காப்பியனார் "மரபேதானும், நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன" (செய். 80) என்பதனால், நால்வகை இயற்சொற்களும் மரபுபிறழாது யாப்பினிடம் பயில்வன என்று கூறினார். இதற்குப் பேராசிரியர்—

"எனவே, சொல்லும் பொருளும் அவ்வக்காலத்தார் வழங்கு மாற்றானே செய்யுள் செய்க என்பதாயிற்று. இதனது பயன், ஒருகாலத்து வழங்கப்பட்ட சொல் ஒருகாலத்து இலவாகலும் பொருள் வேறுபடுதலும் உடைய. அவை அதோளி இதோளி உதோளி எனவும, ஞயின் எனவும் ஒரு காலத்து உளவாகி இக் காலத்து இலவாயின. அவை முற்காலத்து உளவென்பதே கொண்டு வீழ்ந்தகாலத்துஞ் செய்யுள் செய்யப்படா. அவை ஆசிரியர் நூல் செய்த காலத்து உளவாயினும் கடைச்சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையின் பாட்டினுந் * தொகையினும் அவற்றை நாட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர், அவற்றுக்கு இது மரபிலக்கணமாகலின் என்பது. இனிப் பாட்டினுந் தொகையினும் பயின்ற சொல்லே மீட்டொருகாலத்துக்கு உரித்தன்றிப் போயினவும் உள. அவை முற்காலத்து உளவென்பதேகொண்டு பிற்காலத்தும் நாட்டிச் செய்யுள் செய்யப் பெறா.

---

* பாட்டு பத்துப்பாட்டு, தொகை எட்டுத்தொகை.

என்று விசேடவுரை எழுதிச் செல்வர். இவ்வுரையாளர் கூறியவாறே, கடைச்சங்கத்துக்குப் பிற்பட்ட சொல்வழக்குக்களும், அங்ஙனமே மரபுபிறழாது வழங்கற்குரியன என்பது சொல்லவேண்டா. இவற்றால் அவ்வக்காலத்துச் சொற்பொருண் மரபுகள் இன்னவின்ன என்பது தெரியவைத்தற்கண், முன்னோர்க்கிருந்த பெருநோக்கம் புலனாகின்றது. காலந்தோறும் வேறுபட வழங்கிய அம்மரபுகளை அறிய விரும்பும் பாஷாதத்துவவறிஞர் மேற்கூறிய சிரிய கருத்தைப் பெரிதும் போற்றிக்கொள்வர் என்பதில் ஐயமில்லை. "நாற்சொல் லியலான் யாப்புவழிப்பட்ட" அவ்வழக்குக்களுள், பெயர்ச்சொல் உரிச்சொற்களாக நம் முன்னோர் காலத்து வழங்கிப் பிற்காலத்து வீழ்ந்தவை எண்ணிறந்தன. அவற்றைவிடுத்து, சங்கத்துக்குப்பிற்பட்ட சான்றோர்காலத்து வழங்கிய வினைவிகற்பங்களுள் அரியன சிலவற்றை மட்டும் ஈண்டுக் குறிப்பிட விரும்புகின்றேன்.

கின்றீற்று வினையெச்சம்.

'கின்று' என்னும் இடைச்சொல், சங்கத்துக்குப் பிற்காலத்தே நிகழ்கால விடைநிலைகளுள் ஒன்றாக வழங்கலாயிற்றென்பதை நாம் அறிவோம். ஆனால் அவ்விடைச்சொல்லே அக்காலத்து வினையெச்ச விகுதியாகவும் பயின்று வந்ததென்பது இதுகாறும் அறியப்படாததொன்றாகும். நக்கீரர் † இயற்றியதாகக் கூறப்படும் இறையனார் களவியலுரையுள்,—

"தவளைப்பாய்த்து என்பது தவளைபாய்கின்று இடைநிலங் கிடப்பப் பாய்வதுபோல" (பக்கம் 57).

"பருந்தின் வீழ்க்காடு என்பது பருந்து வீழ்கின்று நடுவே வீழ்ந்து தான் கருதினபொருள் கொண்டுபோம்" (ஷை)

"குழவி அழுகின்று 'எனக்குப் பால்தம்மின் நீராட்டுமின் என்றழாது துக்கம்வந்ததாக அழும்". (140)

---

† இவ்வுரை, நக்கீரனாரை ஆசிரியத்தலைவராகக் கொண்ட மரபில், பத்தாந்தலைமுறையினர் ஒருவரால் இயறறப்பட்டதென்பது, அவ்வுரைப் பாயிரப் பகுதியால் அறியபபடும்.

“ (தலைமகன்) இவளுழைச் செல்கின்று ஆயங்கள் ஐயுறுவோ எனின் ” (61)

“ ஓதல் காவல்...முதலியவற்றுக்குப் பிரிகின்று தலைமகளுந் தோழியும் அறியச்சொல்லிப் பிரியவும் உரியன் ” (185)

என்றிவ்வாறு வருந்தொடர்களிலே, பாய், வீழ் முதலிய வினைமுதல்களுடன் கின்று என்ற விகுதிகூடி வழங்குதலையும், அவை பாயின் பாய ; வீழின் வீழ எனச் செயின் செய என்ற வாய்பாட்டு வினையெச்சப்பொருள்கள் கொண்டு நிற்றலையும் காணலாம். இங்ஙனம் வழங்கும் வினையெச்ச விகற்பத்தைச் சங்கச்செய்யுட்களிலேனும் பிற்கால நூல்களிலேனும் காண்டல் அரிது. எனவே அவ்விருவகை நூல்கள் எழுந்த காலங்கட்கும் இடைப்பட்ட காலத்தே இத்தகைய வழக்குப் பயின்றதென்பதும், அதுவும் உரை நடையிற் பெரிதும் ஆளப்படுதலின், உலக வழக்கினும் அது நடைபெற்றுவந்ததென்பதும் உணரப்படும். செய்யுள் வழக்கினும் இக் கின்றிறு வினையெச்சம் பயின்றதுண்டோ எனின், ஒன்றல்ல பலவென்க. நம்மாழ்வார் எனப்படும் ஸ்ரீ சடகோபர் தம் திருவாய்மொழி திருவிருத்தங்களில்—

“ நாரணன்றன் வாடாத மலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று
...உரைத்திரா யெனதுடலே ” (1-4-9)

“ கண்டாயே நெஞ்சே கருமங்கள் வாய்க்கின்று
எண்டானுமின்றியே வந்தியலுமாறு ” (2-10.5)

“ எம்மாபாவியர்க்கும் விதி வாய்க்கின்று வாய்க்குங் கண்டீர் ” (5-2-7)

“ அமரர்கோ னர்ச்சிக்கின்று அங்ககப்பணி செய்வர்
விண்ணோர் ” (10-2-6)

“ ஆமகிழ்ந் துகந்தவை மேய்க்கின் றுன்னோ டசுரர்கள்
தலைப்பெய்யி லெவன்கொல் ” (10-3-7)

“ விதி வாய்க்கின்று காப்பாரார் ” (5-1-1)

" கண் ணுலாகின்று வேல்விழிக்கின்றன " (திருவிருத். 57)
" நண்ணுதல் வேண்டும் வலவ கடாகின்று " (ஷை 50)

எனவருந் தொடர்களிலே வருக்கின்று, வாய்க்கின்று முதலியவற்றை மேற்கூறிய எச்சப்பொருளில் வழங்குதலும், திருவாய்மொழியீடு முதலிய பேருரைகளினும் வாய்க்குமிடத்து மேய்க்குமிடத்து என்றிவ்வாறு பொருள்கூறப் பட்டுள்ளமையும் காண்க. நம்மாழ்வார் போலவே, இப் பொருளில்—

" முன்னின்று மூக்கின்று மூவாமைக் காப்பதோர்
மன்னு மருந்தறிவா ரில்லையே " (பெ. மடல், 92)

எனத் திருமங்கையாழ்வாரும்,

" காளை யாகு நண்ணுகின்று நின்
கேள்வ னன்பு கெடாஅ ஞகுதல் " (பெருங்கதை)

எனக் கொங்குவேளிரும்,

" மெய்யிற் கையொடு கால் துறைக்கின்று நம்மை
மறக்கினு மென்னைக் குறிக்கொண்மினே " (தேவா, 588-3)

எனச் சுந்தரமூர்த்தி நாயனாரும்,

" போகின்ற மாமுகிலே பொற்கயிலை வெற்பளவும்
ஏகின்று...என்னுள்ளுறுநோய் விண்ணப்பஞ்செய் "
(கைலைபாதிகாளத்திபாதியந்தாதி. 75)

எனப் பின்னவரான நக்கீரதேவரும் இவ்வழக்குச் சொல்லை ஆளுதல் அறியத்தக்கது. எனவே, இக் கின்றீற்று வினையெச்சம் உலகவழக்கேயன்றிச் செய்யுள்வழக்கும் பெரிதுடையதென்பது வெளியாம். அன்றியும், இவ் வினைவிகற்பத்தை ஆண்ட முன்னோரெல்லாம், அவ்வாட்சி பயின்றகாலத்தே வாழ்ந்தவர் என்பதும் அறியப்படும். இத்தகைய வழக்கொன்றை பிற்காலத்துச் செய்யுள்களிலேனும் உலகநடையிலேனும் காண்டல் அரிதாயினும், குடமலை நாட்டில் 11-ம் நூற்றுண்டிலே இது பயின்றுவந்ததென்றே தோற்றுகின்றது. அந்நூற்றுண்டிறுதியில் ஆட்சிபுரிந்த இராமர் திருவடிகள் குலசேகர சக்கரவர்த்தி என்ற சேரவேந்தர்

காலத்துக் கொல்லத்துச் சிவாலயத்து அமைந்த சாஸன மொன்றில்,

"தொள்ளாயிர நாழி செலவிடுவது...செலவு முட்டுகின்றே
ஐஞ்ஞாழி அரி தண்டப்படுவிது" (T. A. S.)

எனவருந் தொடர் குறிப்பிடற்பாலது. இதனுள் 'முட்டு கின்றே' என்பது 'முட்டுப்படுமிடத்தே' என்னும் பொரு ளதாதல் காண்க. இங்ஙனம் களவியலுரை திருவாய்மொழி முதலியவற்றுக் கண்ட இவ்விடைச்சொல் வழக்காற் றினை அறியாமையால், பாய்கின்று, அழுகின்று முத லியவற்றைப் 'பாய்கின்றுழி' 'அழுகின்றுழி' என்றிவ் வாறே திருத்திக் களவியலுரையைப் பதிப்பித்தாரும் உளர். இதனால் பழைய மரபுநிலை சிதைதல் வருந்தத் தக்கதாயினும், முதன்முதல் அவ்வுரையை வெளியிட்ட ஸ்ரீ சி. வை தாமோதரம்பிள்ளையவர்கள், உள்ளவாறே அவ் விடங்களை வெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

2. இடைநிலையேற்ற எதிர்மறைவினை.

எதிர்மறைவினை முக்காலமுங்காட்டும் பொதுமை வாய் ந்தது என்பது தெரிந்ததாம். இவ்வினை, காலங்காட்ட வேண் டின் செய்யாதிருந்தான், செய்யாதிரா நின்றான், செய்யாதி ருப்பான் என 'இரு' போன்ற துணை வினை யொன்றைப் பற்றியே வழங்கும். ஆயினும், வினைப்பகுதிகள் இடைநிலை யெழுத்துப்பெற்று மறைவினையில் எதிர்காலங்காட்டும் அரியவழக்குச சங்கத்துக்குப் பிற்பட்ட சான்றோர் வாக்கி னுட் பயின்றுள்ளமை அரியதோர் செய்தியாகும். சட கோபர் அருளிய பெரிய திருவந்தாதியில்—

"இளைப்பா யிளையாப்பாய் நெஞ்சமே சொன்னேன்
இளைக்க நமன்றமர்கள் பற்றி—இளைப்பெய்த
நாய்தந்து மோதாமல் நல்குவான் நல்காப்பான்
தாய்தந்தை யெவ்வுயிர்க்குந் தான்" (23)

"பேர்ந்தொன்று நோக்காது பின்னிற்பாய்
நில்லாப்பாய்" (60)

"அயர்ப்பாய் அயராப்பாய் நெஞ்சமே சொன்னேன்" (83) என்றவிடங்களில், இளைப்பாய், நல்குவான், நிற்பாய், அயர்ப்பாய் எனப் பகர விடை நிலைபெற்ற எதிர்கால வினைமுற்றின் மறையாக இளையாப்பாய், நல்காப்பான், நில்லாப்பாய், அயராப்பாய் என்பவற்றை ஆழ்வார் வழங்குதல் காண்க. இத்தகைய சொல்வழக்கை இவர்க்கொத்த காலத்துப் பெரியாரொருவர் வாக்கிலன்றி வேறிடத்துக் காண்டல் இல்லை. அப்பெரியார், காரைக்காற் பேயம்மையாராவர். தம் அற்புதத் திருவந்தாதியில், அவர்—

"அவர்க்கே யெழுபிறப்பு மாளாவோ மென்றும்
அவர்க்கேநா மன்பாவ தல்லாற்—பவர்ச்சடைமேல்
பாகாப்போழ் சூடு மவர்க்கல்லான் மற்றொருவர்க்
காகாப்போ மென்ஞான்று மாள்"

என்ற வெண்பாவில், 'ஆகாதிருப்போம், ஆகமாட்டோம்' என்ற பொருட்கண் 'ஆகாப்போம்' என வழங்கல் ஒப்பிடற்பாலது. இதனால், இவ்வருகிய வழக்கை எடுத்தாண்ட அவ்விருவரும் அது நடையாடிய காலத்தே வாழ்ந்தவர் என்பது பெறலாகும். தொல்காப்பிய எழுத்ததிகாரப் பாயிரவுரையுள், அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் ஒருவர்க்கொருவர் இட்டுக்கொண்ட சாபச்செய்தி கூறுமிடத்து, நச்சினார்க்கினியர்—

"சுவர்க்கம் புகாப்பிர் எனச சபித்தார்"

என்ற தொடரை இருமுறை எழுதியிருத்தல் கற்றாரறிவர். இவ்வாக்கியம், முன்னோர்கூற்றைக் கொண்டுமொழிந்ததாகலின், பழைய நூலினின்று ஆண்ட தொடரென்பதன்றி, நச்சினார்க்கினியர்கூற்றென்று கொள்ளற்குரியதன்று. முன்னர்க் காட்டியவை போலவே, இதனுள் வரும் 'புகாப்பிர்' என்பது 'புகாதிருப்பீர்' என்னும் பொருளதாதலின், இவ்வழக்கு நச்சினார்க்கினியர் காலத்துககேற்புடையதன்றென்பது திண்ணம். இவற்றால், இடைநிலையேற்ற எதிர்மறை

வினை யொன்றைப் பிறசான்றோர் பலரும் ஆண்டுள்ள செய்தி தெரிதல் காண்க.

3. கிடு, கிடாய் என்ற விகுதிகள்.

வியங்கோள் விகுதிகளுள், கிடு, கிடாய் என்பனவும் மேற் கூறிய பெரியார்கள் காலத்துப் பெரிதும் வழங்கியனவாகும்.

"ஆகிடு காண்" (பெரிய திருவந்தாதி 9)
"மாதவ மாகிடு" (பொன் வண்ணத்தந்தாதி 54)
"கழிந்த கழிகிடு" (திருநாவு. தேவா. திருவே காதச 3.)
"கழிந்த கழிகிடாய் நெஞ்சே" (பதினொ. கைலை பாதி. 21.)
"இறையானுங் காண்கிடாய்" (ஷை. சிவபெ. திருவந். 35.)
"திரியையிடுகிடாய்" (பெரிய திருமொழி, 2, 3, 9.)
"தணிகிடாய்" (நாச்சியார் திருமொழி, 2, 2.)

எனக் காண்க. ஆகுக, கழிக, காண்க, இடுக, தணிக என்பன இவற்றின் பொருள்களாம். இவ்வரிய வழக்கினைப் பிற்காலத்தாரும் ஆள்வாராயினர்.

"போன படைத்தலை வீரர்தமக்கிறை போதாவிச
சேனை கிடக்கிடு தேவர்வரில்....திரள்சாயேனோ"
(கம்பரா. குகப், 20)

என்றார் கம்பநாடரும். இவர்காலத்து, இக் கிடுவிகுதி
கிடீர்—'கிடக்கிடீர்' (ஈடு. 11-3-8)
கிடும்—'கிடக்கிடும்' (ஷை. 8-2-1).
கிடிகோள்—(1-2-9)

என வியங்கோளொடு முன்னிலையினும் பிற்காலத்து வழங்கலாயிற்று 'வாருங்கிடீர்' என்பது போன்றவற்றைக் காலவழ

க்காய் வருபவற்றுள் ஒன்றாகக் கொண்டு மயிலைநாதர் எழுதியிருத்தலும் காண்க (நன். 256). ஆகிடு, கிடக்கிடு என்ற இவ்வழக்குக்கள் இக்காலத்து 'ஆகட்டும், கிடக்கட்டும்' எனத் திரிந்துவழங்கலாயின.

4. ஆயிட்டு என்னும் காரணக்கிளவி.

சைவசமய சந்தானகுரவருள் தலைவரான மெய்கண்ட

தேவர் தம் சிவஞானபோத வார்த்திகத்துள்—

"அத்துவிதம் என்றே சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்தும் ஆயிட்டு"

என்புழி, 'ஆயிட்டு' என்ற சொல்வழக்கை ஆளுதல் காணலாம். இத்தொடர்க்கு உரையெழுதியவிடத்துச் சிவஞானமுனிவர்—

"ஆகலான் என்பதற்கு ஆயிட்டு என்பது அக்கால வழக்குப் போலும். அற்றாகலினன்றே 'நீயோ செய்யாய் நின்மலனாயிட்டு' (இருபாவிருபது, 4) என்றார் வழிநூலாசிரியரும்" (சிவஞா. சிற். 2-ம் சூத். 1 அதிகரணம்)

என்று குறிப்பெழுதிச் செல்வர். இதனால் ஆயிட்டு என்பது காரணக்கிளவியாதல் விளங்கும். இச் சொல்வழக்கு, மெய்கண்டதேவர் காலத்ததும், ஈடு எனப் பேர்பெற்றது மான திருவாய்மொழிப் பேருரையுள்—

"ஆயிட்டு இவளை வேண்டா என்றன்றோ கொடுக்கது"

என்ற தொடருள், முற்குறித்த பொருளிற் பயிலுதல் அறியத்தகும். இங்ஙனம் 13-ம் நூற்றாண்டதாய இவ்வழக்கு 10-ம் நூற்றாண்டிலும் பயின்றதொன்று என்பது சிலாலிகிதத்தால் தெரியவருகின்றது. மதுரைகொண்ட கோப்பர

கேசரிவர்மன் (முதற் பராந்தகன்) காலத்தமைந்த உத்தர மேரூர்ச்சாஸன மொன்றில்—

" மஹாஸபையோம் எழுத்து. எம்மூர்த் தெற்கில் பரமேசுவரவதி நீராயிட்டு, காலியுங் களறும்உள்ளிட்டு மற்றும் எப்பேர்ப்பட்ட சாதியும் இசங்குவது அரிதாயிட்டு.. மூக்கோலகலத்தால் வதியட்டிக் கீழ்க்கடை நீர் போவதாகவும்" (S. I. I. Vol. VI, No. 293.)

எனவருந் தொடர் காணலாம். 'தெற்கே நீர்பற்றினமையாலும் பிரயாணிகள் இயங்குவ தரிதானமையாலும் கிழக்கே வழிவெட்டி நீர் செல்வதாக' என்பது இதன் பொழிப்பு. இதனுள் ஆயிட்டு என்பது ஏதுப்பொருளில் ்ரிடங்களில் வழங்கல் காண்க. இவற்றால், காரணக்கிளவியொன்றன் பழையவழக்காறு நன்கறியப்படும்.

5. துணைவினைகள்.

தலைமைவினையுடன் 'இரு' முதலிய துணைவினை சேர்ந்து 'எழுந்திரு' என்பதுபோலப் பகுதிப்பொருளதாய் வழங்குதல் பலரும் அறிவர். இத்தகைய வினைகளுள் 'தர்', 'செய்து' முதலியனவும் அக்காலத்தே பெரிதும் பயின்றன. இவற்றுள் 'தர்' என்பது—

உழிதர்தல்—' ஊனைக்காவி யுழிதர்வருமரே.' (தேவா. நாவுக். பக் 338-1)

திரிதர்தல்—' செற்றமே வேண்டித் திரிதர்வேன்' (பெரிய திருமொழி, 1, 1, 8)

போதர்தல்—' போதர்கண்டாயிங்கே போதர்கண்டாய் (பெரியாழ். திரு. 2, 9, 6)

என்பன முதலிய இடங்களில் வழங்கல் காண்க. இவற்றினின்று, 'தா' என்னும் வினைப்பகுதிக்கு 'தர்' என்பதே மூலம் என்பது உய்த்தறியப்படும். இனி, 'செய்து' என்

பது 'இருக்கசசெய்தே' (ஈடு. 3, 5, 1) என்றிவ்வாறு வினையெச்சச சொல்லுடன் துணைவினையாகப் பெரிதும் வழங்குவதாம். இருக்கசசெயதே, போகசசெய்தே என்பன இருக்கசசே, போகசசே எனத்திரிந்து இக்காலத்துப் பயில் கின்றன.

இவ்வாறே, காலவழக்காய் வழங்கும் மரபியற்சொற் கள் பல. அவற்றின் வழக்காற்றினை அறிதற்கு, நூல்களே யன்றிச் சிலாதாமிரசாஸனங்களுந் தக்க துணைபுரிவனவாம். இவையாவும் அவ்வக்காலத்தே உலகினும் செய்யுளினும் மரபுநிலை திரியாமல் முன்னோரால் ஆட்சி புரியப்பெற்றவை, என்பது அறியத்தகும்.

போலி

போலி என்ற சொல் **போல்தல்** என்ற வினையடியாகப் பிறந்ததொரு பெயர். போல்-தல், போலுதல் என்பன ஒன்றினையொத்தல் என்று பொருள்படும். ஒன்றினை யொத்த பொருள் என்றவிடத்து அவையிரண்டும் இணை யெனக் கருதப்படும். **போலி நாணயம்** என்றவிடத்திலோ நாணயத்தைப் போன்றதேயாயினும் அந்த நாணயம் தகுதி யற்றது, கொள்ளப்படாதது எனப் பொருள்படும். **தாமரை திருவடிகளுக்குப் போலியாயிருக்க** என்ற திருவாய்மொழி யின் வியாக்கியானமான ஈட்டில் (1.4. பிரவேசம்) காணப் படும் தொடருக்கும் ஒப்புப் பொருளேயாதல் காண்க. இதனானே, போலி என்ற சொல் இருபொருள் படுவதாகும்.

இது சொல்லை இலக்கண நூலார் எவ்வாறு கொண்ட னர் என ஆராய்வாம்.

தொல்காப்பியத்திலே, 'அகர இகர மைகார மாகும்' என்பது முதலாவதாகக் காணப்படுவது. இதற்கு உரை கண்ட இளம்பூரணவடிகள், 'அகரமும் இகரமும் கூடச் சொல்ல ஐகாரம் போல ஆகும். ஐயர், அஇயர் எனவரும், அது கோள்ளற்க' என்று எழுதி விலக்கினர்

பிறிதொரு உரைகண்ட நச்சினார்க்கினியர், 'அகரமும் இகரமுங் கூட்டிச் சொல்ல ஐகாரம் போல இசைக்கும், அது கோள்ளற்க' என்றும், 'ஆகும் என்றதனான் இஃது இலக் கணமன்றாயிற்று' என்றும் கூறினர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில், மூன்றாங் குலோத் துங்க சோழன் காலத்திலே வாழ்ந்தவரான பவணந்தி முனி வர் தாம் செய்த இலக்கணமான நன்னூலிலே, எழுத்ததிகா

ரம் பன்னிருபகுதிப்படுமெனவும், அவற்றுள் போலியென ஒரு பகுதியுண்டெனவும் கூறி,

‘ அம்மு னிகரம் யகர மென்றிவை
யெய்தி னையொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன’

என்று சூத்திரமுஞ் செய்தார்.

இதற்கு உரைகண்ட மயிலைநாதர், ‘போல இசைக்கு மெனவே அவை ஆகா; போலியாமெனக் கொள்க’ என்றெழுதினர். இஃதன்றி, அதற்கு முன்னுள்ள ‘அஐ முதலிடை யொக்கும் சஞயமுன்’ என்ற இடத்து, இதுவும் ஓர் மயக்கவகை உணர்த்துதலுதலிற்று என்று கூறினர். ஆகவே, இவ்வுரையாசிரியரும் தொல்காப்பிய உரையாசிரியன்மாரை யொப்ப, போலிகள் விலக்கற்பாலனவேயாம் என்று கொண்டனர் என்பது தெளிவு.

சங்கரநமச்சிவாயரும் போலி அருகிவருவதொன்றென்றும், அது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததன்றென்றும் கொள்வாராயினர். இவர் வாழ்ந்தகாலம் பதினெட்டாம் நூற்றாண்டாகும். பதினேழாம் நூற்றாண்டிலிருந்தவரும், இலக்கண விளக்கம் என்ற நூலை இயற்றியவருமான வைத்தியநாத தேசிகர், இலக்கண விளக்கத்திலே,

‘ அம்மு னிகரம் யகர மென்றிவை
யெய்தி னையொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும் வவ்வு மௌவோ ரன்ன
விகர யகர மிறுதி விரவும்
புகரின் றுணர்ந்தோர் வரைந்தனர் போற்றல்’

என்று சூத்திரஞ் செய்து, ‘சில எழுத்துக்கள் கூடிச் சில எழுத்துக்கள் போல இசைக்கும், அது கொள்ளற்க என விலக்கும் எழுத்துப் போலி கூறுகின்றது’ எனக் கொளுவும்

எழுதினர். மேலும், உரையில், 'குற்றமின்றி எழுத்திலக்கணத்தை அறிந்தோர் அவ்விகாரங்களைக் கொள்ளாது கடிந்து பாதுகாக்க' என்றெழுதினர். விசேட வுரையிலும், 'இவை கடிதல்வேண்டுமென்றறியாதார் இவற்றைக் கொள்ளற்பாலதாம் போலியென மயங்குப' என்றும் எழுதினர். ஆகவே, இவரது கருத்து இளம்பூரணர், நச்சினார்க்கினியர் இவர் கருத்தோடொத்ததாகும்.

இனி, சிவஞான முனிவர் இவ்வாறன்றி, நன்னூற் சூத்திரத்திற்கே வேறுபொருள் கூறுவாராயினர். 'இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், வட நூலார் சந்தியக்கரமென்பவற்றுள் ஐ ஔ என்னும் நெட்டெழுத்துக்களின் வடிவு புலப்படுதல் உணர்த்திற்று.

'அகரத்தின் முன்னர் இகரமும் யகரமும் தம்முள் ஒத்தெய்தின், ஐயென்னும் நெட்டெழுத்தொலிக்கும்; அகரத்தோடு உகரமும் வகரமும் தம்முளொத்து ஒரு தன்மையவாக எய்தின், ஔவென்னும் நெட்டெழுத்தொலிக்கும்.

'மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாத தனை முட்டின்று முடித்தலென்னுமுத்தியான், அகரக்கூறும் இகரக்கூறும் தம்முளொத்து எகரமொலிக்கும், அகரக் கூறும் உகரக் கூறும் தம்முளொத்து ஒகரமொலிக்குமெனவுங் கொள்க.

'இனி, இச்சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள் கொள்ளாது, தமிழ் நூற்பயிற்சியொன்றுமேயுடையார், எழுத்துப் போலியுணர்த்திற்றென்று கொண்டு, அஇ=ஐ; அய்=ஐ; கஇ=கை; கய்=கை; அஉ=ஔ; அவ்=ஔ; கஉ=கௌ; கவ்=கௌ என உதாரணங் காட்டுவர். அவ்வாறு பொருள்கொண்டு உதாரணங் காட்டுமாற்றாற் பெரும்பயனின்மையானும், வட நூலோடு மாறுபடுதலானும் அது பொருந்தாதென்க'. மேலும், தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியிலே, 'இனி எகரமாவது அகரக்கூறும் இகரக்கூறுந்

தம்முளொத்திசைத்து நரமடங்கல் போனிற்பதொன்றாக லானும், ஒகரமாவது 'அகரக்கூறும் உகரக்கூறும் தம்முளொத்திசைத்து அவ்வாறு நிற்ப தொன்றாகலானும், அவை அவற்றின் பின்னர் முறையே வைக்கப்பட்டன. ஏகார ஓகாரங்கள் இனமாகலின், அவற்றின் பின் முறையே வைக்கப்பட்டன. அகரமும் யகரமும் இகரமும் தம்முளொத்திசைத்து நிற்பதொன்றாகலின், எகர ஏகாரங் களின் பின்னர் ஐகாரமும், அகரமும் வகரமும் உகரமும் தம்முளொத்திசைத்து நிற்பதொன்றாதலின், ஒகர ஓகாரங் களின் பின்னர் ஔகாரமும் வைக்கப்பட்டன. இவ்வாறு தல்பற்றி ஏ, ஓ, ஐ, ஔ என்னு நான்கினையும் வடநூலார் சந்தியக்கர மேன்பர். கையடனார் நரமடங்கல் போல் என்று உவமையுங் கூறினார். இக்கருத்தேபற்றி ஆசிரியர், 'அகர விகர மைகார மாகும்.' 'அகர வுகர மௌகார மாகும்' எனக் கூறி, ஐ என்னும் நெட்டெழுத்தின் வடிவு புலப்படு தற்கு அகர இகரங்களேயன்றி, அவற்றிடையே யகரமும் ஒத்திசைக்குமென்பார், 'அகரத் திம்பர் யகரப் புள்ளியும்— ஐயெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்'..தமிழ் நூலொன்றே வல்ல உரையாசிரியரை உள்ளிட்டோருரையை ஆசிரியர் கருத்தாகக் கொண்டு பின்னுள்ளோரு மயங்குவாராயினரெ ன்பது' முதலாக எழுதிச்சென்றார்.

தொல்காப்பியச் சூத்திரத்திற்கும் நன்னூற் சூத்திரத் திற்கும் உரைகண்ட எல்லா ஆசிரியன்மாரும் ஒத்த கருத் தினராயிருக்க, சிவஞான முனிவர்மாத்திரம் வடமொழி மதம்பற்றி, போலியென்பதொன்றில்லை எனக் கூறுவாரா யினர். எனினும், பண்டை வழக்கிலே போலியெழுத்துக் கள் பெரும்பான்மையாக வாராமை நோக்கற்பாலதொன் றும். சிறுபான்மை செய்யுளிலே எதுகையும் ஓசையின்ப முமே நோக்கி அவை நடைபெறுகின்றன.

அன்றியும், உரையாசிரியன்மார் வட நூலுணர்ச்சி யற்றவர் என்று முனிவர் கூறுவதும் அவ்வளவு

பொருத்தமுடையதாகத் தோற்றவில்லை. நச்சினார்க்கினியர் வடமொழி வல்லவரென்பது அடிப்பட்டசான்றோர் கருத்து. மயிலைநாதர் முதலாயினாரும் வடமொழி வல்லபண்டிதர். ஆகவே, அவர் கருத்தைப் புறக்கணித்தலும் நேரிதன்றாம். இவ்வெழுத்துக்கள் சர்வ சாதாரணமாகப் பயிலாமை நோக்கியும், போலி என்று கொள்ளுதலே தகுதியென்று தோற்றுகிறது.

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை

திரு. சோமசுந்தர தேசிகன்.

ஸ்ரீமதி பண்டிதாராத்யர்.

சென்னைப் பல்கலைக்கழக இந்திய தத்துவ நூற்பேராசிரியர்.
S. S. சூரியநாராயண சாஸ்திரியார், M.A., B.Sc.
(Barrister-at-Law.)

எல்லையில் பரம்பொருள் நிர்க்குணனென்றும், சிவன், விஷ்ணு என்று பல்வேறு பெயர் சூட்டித் தாமசம் சாத்துவிகம் முதலிய குணமுடையவர்களாய்ப் போற்றப்படுபவர்கள் நிர்க்குணத்தையடையும் மார்க்கமான சகுணோபாஸனைக் கேற்றவர்களேயன்றி முழுமுதற் பொருளாகாரென்றும் கொள்வார் ஒரு சாரார். இவ்வாறல்லாது சிவனையோ விண்டுவையோ பரம்பொருளே யெனப் போற்றியும் அவன் சகுணனாயினும் பிராகிருத குணாதீதனென்றும், முழுமுதற் கடவுள் குணமூர்த்தியாகிய ருத்திரன் முதலியோர் பெயர் பூண்டானெனினும் அவ்வம் மூர்த்திகளைவிட வேறே யாவனென்றும் அத்தகைய கடவுளைச் சரியை, கிரியையாதிகளால் வழிபட்டு அவனருளால் அவனது ஞானம் பெற்று அதனால் முத்தியடையலாகும் என்பர் வேறு சிலர். இவர் மதத்தில் சிவன் திருமால் முதலியோர் முதன்மையைச் சாதிப்பது ஆகம வாயிலாயாகும். ஆகமங்கள் எக்காலத்து எவ்வாறு தோன்றினவென்பதைக் குறித்து ஓர் முடிவும் இதுகாறும் கிடைத்திலது. சிலர் தமிழ்நாடு கடல் கொள்ளப்பட்டதற்கு முன்னரே வடமொழியில் தமிழிலிருந்தும் மொழிபெயர்க்கப்பட்டனவே ஆகமங்களாயின என்பர்; வேறு சிலர் பிராம்மணங்களிலிருந்து உபநிடதங்கள் ஒரு பக்கல் கிளம்ப மற்றொரு பக்கல் வேறு காரணங்கள் கொண்டு தோன்றியவை ஆகமங்கள் என்ப. அதெவ்வாறாயினும் வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் முரண்பாடில்லை யென்

படுதே ஆகமத்தைப் பின்பற்றுபவர் கொள்கை. இதுபற்றியே

> " வேதமொடாகமம் மெய்யா மிறைவநூல்
> ஓதும் சிறப்பும் பொதுவு மென்றுள்ளன
> நாதனுரையிவை நாடி லிரண்டந்தம்
> பேதம தென்பர் பெரியோர்க்கபேதமே "

என்றார் திருமூலர். வேதம் சிவாகமம் என்றிரண்டிற்கும் சிவபிரானே கர்த்தாவாதலால் இரண்டும் பிரமாணமே யென்றும், முதலதற்கு மூவருணத்தாரே உரியராகப் பிந்தியதற்கு எல்லோரும் உரியராவர் என்பதே அவற்றிற்குள் விசேடமென்றும் கூறினார் நீலகண்ட சிவாசாரியரும். இக் கொள்கையை நன்கு நாட்ட ஆகம வழிபாடுகளுக்கு வேதத்திலும் போதிய சான்றுள்ளதென்றும் ஆகமம் போற்றும் தெய்வங்கள் வைதிக தெய்வங்களே யென்றும் வேதத்தின் முடிவாகிய வேதாந்தத்திலும் அதைச் சுருக்கிக் கூறும் பிரம சூத்திரத்திலும் அத்தெய்வங்களே பிரதிபாதிக்கப் படுகின்றனவென்றும் காட்ட முன்வந்துள்ளார் சிலர். சைவ சமயத்திற்கு இவ்வாறு செய்தவரில் முதன்மையானவர் மேற்கூறிய நீலகண்ட சிவாசாரியர். இவரைப் பின்பற்றி வீரசைவ மதத்தைத் தழுவி, பிரம சூத்திரத்திற்கு விளக்கம் எழுதியவர் ஸ்ரீபதி பண்டிதாராத்யர். அவர் நூல் ஸ்ரீகரபாஷ்யமென்ற பெயர் பூண்டது. சென்ற ஆண்டில் பங்களூரில் அச்சேறி வெளியானது. [1] இப்பாடியம் நீலகண்ட சிவாசாரியாரது போலல்லாது மிகவும் விரிந்தது. பிறமத கண்டனத்திற்கும் சுவமத ஸ்தாபனத்திற்குமாகிய பல நுண்ணிய வாதங்களை யடக்கியது. அவரது கொள்

[1] இதன் பதிப்பிற்கு Sir K. P. புட்டண்ண செட்டி என்பவர் பண உதவி செய்தார். அவரது ஔதார்யமும் C. ஹயவதன ராவின் விடா முயற்சியுமே இந்நூல் வெளிவரக் காரணமாயின. ஸ்ரீமான் ராயருக்கு ஊக்கம் படைடற்றதாயினும் கிரந்த சோதன சௌகரியங்கள் குறைவேபோலும். அறனற்றுன் புத்தகத்திலும் முகவுரையிலும் பல பிழைகள் புகுந்து விட்டன. பக்தி நிரம்பிய சைவர்கள் இக்குறைகளை நீக்கிச் சீக்கிரம் மறு பதிப்பு வர உதவுவார்கள் என நம்புகிறோம்.

கைக்கு மாறுபட்டோரிடத்தும் மரியாதை பெறக்கூடியது. அதன் விசேஷ குணங்களில் இரண்டொன்றை இவ்வியாசத்தில் குறிக்கப் புகுவோம்.

ஸ்ரீபதி பண்டிதாராத்யர் கி. பி. பதினோன்காவது நூற்றூண்டுக்குரியவர் என்பது பதிப்பாசிரியர் ஸ்ரீமான் ஹயவதனராவின் கொள்கை. அவர் கூறும் முகாந்தரங்கள் அனைத்தும் மதிப்பிற்குரியனவன்றேனும் அவர் முடிபு ஒத்துக்கொள்ளக்கூடியதே. வைணவ குலத்திற் பிறந்து சைவ மதஸ்தாபனஞ் செய்த ஹரதத்தரையும் சிவ விசிஷ்டாத்துவித பாஷ்யஞ் செய்த நீலகண்டரையும் இவர் பின்பற்றியுள்ளார். இவர் கையாண்ட மற்ற நூல்களின் விவரம் பதிப்பாசிரியர் முகவுரையில் விரிவாகக் காணலாம். கிருஷ்ணு கோதாவரி ஜில்லாக்களிலொன்றைச் சேர்ந்தவர் நமது நூலாசிரியர் என்பது ஸ்ரீமான் ராயரின் துணிபு.

நம்மவர் வீரசைவத்திற்கறிகுறியாக அவர் நூலில் பகவத்கீதையை மேற்கோளாகக் கூறுமிடமெங்கும் "பகவான்" என்ற பெயரை விடுத்து "கிருஷ்ண கீதை" என்றே கூறியுள்ளார். தவிர, இரண்டாவது அத்தியாயத்தில் வரும் அம்சாதிகரணத்தில் (II, III, 40-50) வேத வேதாங்கங்களை யுச்சரிக்குங்கால் 'ஹரி: ஓம்' என்று முதலில் சொல்லவேண்டி யிருத்தலால், ஹரியே பரம்பொருளென்னும் ஆசங்கையைக் கிளப்பி, சிவஸ்வரூபமே ஓங்காரமாகிய பிரணவ ஸ்வரூபமென்றும் அது விஷ்ணுவைக் குறிக்கும் பதத்தினல் விசேஷிக்கப்பட்ட விடத்தும் சிவனையே குறிக்குமென்றும், விஷ்ணுவைச் சிவசரீரமாகவும், பார்வதியினம்சமாகவும் சிவனை விஷ்ணுவல்லபனுகவும் கூறும் சுருதி ஸ்மிருதி புராணங்கள் இதற்குச் சான்றென்றும் காட்டியிருக்கின்றூர். இதற்குமேல் "சிவன் கௌரீ வல்லபனுயிற்றே, எப்படி விஷ்ணு வல்லபனுவான்?" என்றோர் வினவை யெழுப்பி, ஸ்திரீ புருஷர்களில் பரஸ்திரீயினிடத்தே பிரியம் அதிகமாதலாலும், இது பற்றியே யாகாதிகளில் இந்திரனைச் சசீபதியென்றழையாமல் அகல்யாஜாரன் என்

றழைப்பதாலும், விஷ்ணுபதத்தை யுபயோகித்துச் சிவனை யழைத்தல் தகுதியேயென்று சாதிக்கிறார். இக்கூற்றில் இவர் புத்தி சாதுர்யமும் வீரசைவமும் புலப்படும். விஷ்ணு சிச்சத்தியின் அம்சமென்று இவற்கு முன் வந்த சைவரும் கூறியுள்ளார். ஆயினும் வைணவர்களைப் புண்படுத்தக் கூடிய சோரநாயகி திருஷ்டாந்தம் இவருடையதே. சோர நாயக நாயகி பாவத்தில் ஈடுபட்ட வல்லபாத்துவிதத்தினின் றும் இதை மேற்கொண்டனரோ வென்றெண்ண இட முண்டு. தங்கொள்கையைச் சாதிக்கையில் ஏனைய கொள் கையுடையவர்கள் மனம் புண்படச்செய்வதும் வீரமதஸ்தர் களுக்கோரழகு போலும். நீலகண்ட சிவாசாரியர் அப் பைய தீக்ஷிதர் முதலியவர்க்கும் நம்மவருக்கும் இஃதோர் முக்கிய வித்தியாசம்.

இஃதன்றி ஸ்வமதஸ்தாபனத்திலும் நமது பண்டிதா ராத்யர் மிக்க திறமை வாய்ந்தவரே. இலிங்கதாரணம் வீரசைவர்களுக்கு முக்கிய அறிகுறியாகும். இதற்குப் பழக்கமும் ஆகமவிதியுமிருப்பதன்றி வேதவிதியுமுண் டென்பது நம்மாசிரியர் கொள்கை. தைத்திரீய சுருதியில் ஓங்காரத்தைத்துதித்து அதை எப்பொழுதும் மனதில் தரித்தவனாக இருப்பேனாக என்னும் வாக்கியத்திற்கு சிவ பரமாகவும் சிவலிங்கதாரண பரமாகவும் பொருள் கூறு கின்றார். இவ்விஷயத்தில் சந்தேக பூர்வபக்ஷங்களை விரிவாகக்காட்டி சித்தாந்தம் சாதிப்பது நன்கு குறிக் கற்பாலது. "தேவதாரணம்" என்பதை இரண்டு பத மாக்காமல் ஒரே பதமாகக்கொண்டு, இலிங்கதாரணம் என்று பொருள் கூறி, இலிங்கதாரணம் பஸ்மதாரணம் முத லியவைகளடங்கிய பாசுபத விரதமே பிரம்ம ஞானத்திற்கு இன்றியமையாததென்றும் தீக்ஷை பெற்று இவ்விரதத் தைக் கொண்டாடுபவர்களே பிரமம ஞானத்திற்குரியார் என்றும் துணிகிறார். வைணவ விசிஷ்டாத்துவிதிகள் போ லவே நீலகண்ட சிவாசாரியரும் பிரம்ம விசாரம் தர்ம விசா ரத்திற்குப் பிந்தியதென்றும், பிற்கூறியதின்றி முந்தியது நடவாதென்றும் கொண்டிருக்க, நம்மவரோ சங்கராத்து

கள் போன்று இவ்விரண்டு விசாரங்களும் கர்த்தா, கர்மா, பலனிவைகளில் மிகவும் வேறுபட்டனவாகையால் ஒன்றுக் கொன்று அங்கமாகாதென்பர். இதுவும் பாராட்டத்தக்க தோர் விஷயமாகும்.

தவிர, ஜீவனுக்கும் பரம்பொருளுக்கும் பேதமோ அபேதமோ பேதாபேதமோ என்ற விவாதத்தில் நீலகண்ட சிவாசாரியர் வைணவரைப்போலவே விசிஷ்டாத்துவிதம் சாதித்தார். நம்மவர் பேதாபேதவாதி. இதற்குக் காரணம் பிரமாணமென்பதொன்றையும் இகழக்கூடாதென்னும் கொள்கையே. பரம்பொருள் விஷயத்தில் சுருதியே பிரமாணம். சுருதி வாக்கியங்கள் பலவகைப்பட்டுச் சிலவிடங்களில் பேதத்தையும் சிலவிடங்களில் அபேதத்தையும் பிரதிபாதிக்கின்றன. இவைகளில் சிலவற்றையே கொண்டு மற்றவைகளைத் தவிர்த்தல் நியாயமாகாது. ஏற்றத்தாழ்வு சாதித்தலும் நிராகரித்தலும் பிராமாணிகர்களுக்கு அழகன்று. சூத்திரம் செய்த பாதராயண பகவான் கைக்கொண்ட மார்க்கம் சமன்வயமாகும்; இது சுருதி வாக்கியங்களினின்றும் சமரசமாக ஒரு பொருள் துணிதல்; சில வாக்கியங்களை நிராகரிப்பதும் சிலவற்றிற்கு இலக்கணையாகப் பொருள் கூறலும் சமன்வயமாகா. ஆகையால் பேதாபேதமே பரமதத்துவம். இரண்டம்சங்களும் முரண்படுமென்பது வீண் வாதம். பிரமாணங்களால் அறியப்படுவதில் விரோத பாவனை நம்மறியாமையாலன்றி வேறில்லை. விருத்த தர்மங்கள் ஒன்றிற் கூடியிருத்தலை பிரத்தியக்ஷமாகவே காண்கிறோம்; நெருப்பு பக்குவமும் செய்யும், பொசுக்கிச் சாம்பருமாக்கும்; இதைக் காண்போர் நெருப்பில்லையென்றேனும் இவற்றில் ஒரு தருமம் இல்லையென்றேனும் கொள்வரா? பிரமாண வாயிலாயறியும் ஒன்றும் பொய்யாகாது; ஒன்றையும் இகழத்தகாது. சுருதி வாயிலாயறிய வேண்டிய பரம் பொருள் விஷயத்தில் விரோதபாவனையை நீக்கி பேதாபேதத்தையே தத்துவமாகக்கொள்ள வேண்டும். பேதமும் அபேதமும் இருளும் ஒளியும் போலாகா. இவ்வாறு விவரிக்கப்படும் சமரசமார்க்கம்,

சிறியோர், பெரியோர், மேலோர், கீழோர் என்னும் பேதமின்றிச் சர்வசம சுதந்திரம் பாராட்டித்தாபிக்கும் இக்காலத்தில் மிகவும் போற்றற்பாலது.

எனினும் இவர் கூறியாங்கு பேதாபேதமே தத்துவமென்பது எமது துணிபன்று. தத்துவமாவது யாண்டும் எக்காலத்தும் நிலைப்பதன்றோ? மோக்ஷத்தில் பேதமில்லையென்றும் "சிவனே நான்" என்னும் அபேதபாவனையினால் சிவத்துவமடைவதே மோக்ஷமென்பதும் நம்மாசிரியர் கொள்கை. அவ்வாறாக முக்தி நிலையிலேனும் பேதமும் அபேதமும் ஒன்றாயிருத்தல் இயலாது. பந்தத்தில பேதமும் முக்தியில பேதமுமென்றே கொள்ளவேண்டும். அவ்வாறாயின், முக்தியாகும் அபேதம் இப்பொழுது இல்லாது உண்டாவதா, இப்பொழுது மறைபட்டு அப்பொழுது வெளிப்படுவதா? உண்டாவதற்கு நாசமுமுண்டு; அது வீடு பேறாகாது. ஒளிந்து தோற்றுவதாயின், ஒளிவதும் ஒளிப்பதும் அத்யந்தசத்தாகின் ஒளிர்வது நிலைபெறாது; மறுபடி மறைப்புறும்; முக்தி பந்த தசைகளுக்கு வேறுபாடின்றாம். ஆகையால் வீடு பேறே என்றும் நிலைபெற்ற தத்துவமென்றும், அதன் மறைப்பாகிய பந்தம் தோற்றமென்றும், அக்காலத்திய பேதம் பரமார்த்த சத்தன்று என்றும் சங்கராத்துவிதிகள் கொள்வர். இதுபற்றியே

"சாதகத்திலே துவிதம் சாத்தியத்திலத்துவிதம்
ஓதுகின்ற வாதமதும் உண்மையல—ஆதரவாய்த்
தான் தேடும் காலும் தனையடைந்தகாலத்தும்
தான் தசமன் அன்றியார்தான்." (உள்ளது நாற்பது).

என்றார் ரமண பகவானும். இவ்வுண்மை தேறாராயினும் அதற்கு முற்படியாக முக்தியிலும் முக்தி சாதனமாகிய சோகம்—பாவனையிலும் பேதத்தை யொழித்தமையின் நமது ஆராத்யர் தத்துவத்திற்கு மிகவும் அணுகியவரே என்பது திண்ணம்.

Solden & Co., Madras, S.E.

GOLDEN & CO.
MADRAS.